# சாதகப் பறவைக்கு வேண்டுமோ கானல் நீர்?



யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

நாவல்

# சாதகப்பறவைக்கு வேண்டுமோ கானல் நீர்?

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

**சாதகப் பறவைக்கு வேண்டுமோ கானல் நீர்?**

(நாவல்)
யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
முதற்பதிப்பு: 2023 கார்த்திகை
© யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன்
வெளியீடு:  ஜீவநதி, கலைஅகம், அல்வாய்
பக்கம்: 102
விலை: 500.00
அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.
விலாசம் : கோப்பாய்தெற்கு, கோப்பாய்
தற்காலிக முகவரி : ஸறே, ஐக்கிய இராச்சியம்

**Sathakap paravaiku vendumo kanal ner?**

(Novel)
Jokeswari Sivapirakasam
First Edition: 2023 November
© Jokeswari Sivapirakasam
Cover Designed by K.Bharaneetharan
Published by Jeevanathy,  Kalai aham, Alvai
Pages: 102
Price: 500.00
Printed at Baranee Printers, Nelliady.
Address: Kopay South, Kopay.
Tempary Address:  Surrey,  UK.
ISBN: 978-955-0958-18-4

ஜீவநதி வெளியீடு – 297

# அணிந்துரை

ஈழத்து மூத்த பெண் எழுத்தாளர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்க ஆளுமைமிக்க எழுத்தாளராகத் திகழ்பவர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள். சமுதாய அவலங்களுக்கான தீர்வுகளை உரத்துச் சொல்பவர். துன்பக் கடலில் தத்தளிக்கும் பெண்களுக்குக் கலங்கரை விளக்கானவர். இலக்கிய மென்னும் பெரும் சமுத்திரத்தின் கரையில் நின்று அப்பப்ப கால் நனைத்து விளை யாடும் சிறுமி போன்றவள் நான். அப்படிப்பட்ட என்னைத் தனது நாவலுக்கு அணிந்துரை எழுதும்படி கேட்டுக் கொண்டார். படைப்புலகில் ஏற்றத்தாழ்வுகள் பாராது தனக்கு அடுத்து வரும் இளைய தலைமுறை எழுத்தாளர்களுடனும் கைகோர்த்துக் கொண்டு வீறுநடை போடும் அவரது பண்புக்குத் தலைவணங்கி இப் பணியைச் செய்கின்றேன்.

சாதகப் பறவைக்கு வேண்டுமோ கானல் நீர்? என்ற நாவல் காலங்காலமாக அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண்களின் போராட்ட வெற்றிக்கான சங்கநாதம் என்றே கூறவேண்டும். ஒட்டு மொத்த நாவலின் குறியீடாக இந்தத் தலைப்பு அமைந்துள்ளது. அந்தக் காலத்தில் பின் தூங்கி முன்னெழுந்த நமது வாசுகிப் பாட்டி முதல் நமது அம்மாக்கள், அம்மம்மாக்கள், பாட்டிமார், பூட்டிமார், மாமிமார், சித்திமார்,அக்காமார், பக்கத்துவீட்டு அன்ரிமார் என எல்லாப் பெண் களுக்கும் பெருமை சேர்த்த அடையாளமாக இருந்தது தாலியும் அந்தத் தாலி மூலம் கிடைத்த வாழ்வுமே. ஆனால் இந்த நாவலின் கதாநாயகி முதல் நாவலின் ஏனைய பெண்பாத்திரங்கள் வரை அனைவரும் மரபு சார்ந்த சிந்தனைகளிலும் அடையாளங்களிலும் இருந்து தம்மை விடுவிக்கப் போராடுகின்றார்கள். சாதகப் பறவையானது மழைநீரை மட்டும் குடித்து உயிர் வாழும் சக்தியுடையது எனக் கூறப்படுகின்றது. அத்தகைய பறவைக்கு கானல் நீர் தேவைப்படாது. அவ்வாறே பெண்களுக்கும் திருமணபந்தம் என்ற கானல் நீர் அவசியமா? இல்லை அவசியம் இல்லையா? என்ற வினாக்களுக்கு விடை கூறுவதாக இந்த நாவல் படைக்கப்பட்டுள்ளது.

சித்திரா என்ற இளம் பெண் அவளது ஊரிலுள்ள பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழாவுக்குச் செல்கின்றாள். ஊரவர்கள் அவள் ஏன் இதுவரை திருமணம் செய்யவில்லை எனக் கேள்விகளைக் கேட்டும் திருமணம் அவசியம் என வற்புறுத்தியும் அவளை வேதனைப்படுத்துகிறார்கள். எருமைக் கூட்டம்

இறங்கிய குளமாக அவள் மனசு கலைந்ததாகக் குறிப்பிடும் ஆசிரியர் அதிலிருந்து மீள்வதற்கு அவளது வாழ்க்கை அனுபவங்களை அவள் இரைமீட்டிப் பார்ப்பதாகக் கூறி நாவலை நகர்த்திக் கொண்டு செல்கின்றார்.

சித்திராவின் தந்தை நாகமுத்தன் குடிகாறனாகவும் ஊதாரியாகவும் இருக்கின்றான். தாய் மரகதம் அந்த ஊரிலுள்ள ஒரு பணக்காற வீட்டில் கூலிவேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றுகின்றாள். பள்ளிக்குப் போகும் சித்திரா அப்பியாசக் கொப்பி வேண்டக் காசில்லாது சிரமப்படுகின்றாள். அந்தக் காசை உழைப்பதற்காக அவள் தாய் வேலை செய்யும் பெரியஜயா வீட்டில் வீட்டு வேலைகள் செய்யத் தொடங்குகின்றாள். மேல்தட்டு மக்கள் எவ்வாறு கூலித் தொழிலாளர்களது உழைப்பைச் சுறண்டி வாழ்கிறார்கள் என்பதை ஆசிரியர் மிக யதார்த்தமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

பத்து வயதுச் சிறுமியாக, ஒரு குழந்தைத் தெழிலாளியாக, ஒரு பெண் ணாகச் சித்திரா எதிர் நீச்சல் போட்டுத் தன் வாழ்வை வாழத் தொடங்குகின்றாள். வளர்ந்து திருமண வயதை எட்டும் வரை அவள் படும் பாடுகளைக் கூறுவதன் மூலம் ஆசிரியர் இந்தச் சமுதாயத்தின் மீதான தனது அறச்சீற்றத்தை மிகவும் துல்லியமாக வெளிப்படுத்துகின்றார். பெண் அடிமைத் தனத்துக்கு எதிரான ஒரு ஆயுதமாக அமைந்துள்ள இந்நாவலின் கருவானது பூமாலையின் நார் போன்று அல்லாது கட்டிடத்துக்கு வலுக்கொடுக்கும் இரும்புக் கம்பிகளாக நிமிர்ந்து நிற்கின்றது.

நாவலில் படைக்கப்பட்டுள்ள பாத்திரங்களின் எதிர் எதிர் தன்மைகள் கதைப் பின்னலுக்கு வலுச் சோளுக்கின்றன. சித்திராவின் தாய்க்கும் தந்தைக்கு மான உரையாடல்கள், பெரியபிள்ளையான பின்பு சித்திராவைப் பள்ளிக்குச் செல்ல விடாமல் தடுக்கும் நிகழ்வுகள், பாலியல் கொடுமைகள், ஏமாற்றப்படும் பெண்கள், போர்க்கால வாழ்க்கைப் போராட்டங்களும் அவலங்களும் என நடைபெறும் பல நிகழ்வுகள் மூலம் வாசகர்களின் வாசிப்பு ஆர்வத்தை ஆசிரியர் கூட்டுகின்றார். சம்பவங்களின் இணைப்புக்கள் மூலம் நனவோடை நகர்வது இயல்பான கதைப்பின்னலை உருவாக்குகியுள்ளது.

முதலாளியம்மா பரிமளம், அவரது பேத்தி மங்கை ஆகியோரது நடவடிக்கைகள் மூலம் பெண்ணடிமைத் தனத்துக்குப் பெண்களே எதிரிகளாக உள்ளனரே என்ற நிலைப்பாட்டை ஆசிரியர் துல்லியமாகக் காட்டுகின்றார். பள்ளிக்குப் போகப் புறப்பட்ட சித்திராவைக் கண்டதும் பொச்சுத் தும்புக் குவியலுக்குள் பொறிவிழுந்தது போல மங்கையுள் புகைமண்டியது எனத் தெளிவான ஒரு படிமத்தை ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

பெண் உழைப்பாளிகளுக்கு முன்மாதிரியாக ஆதரவாக இருக்கும் கருணா அம்மா என்ற பாத்திரமும் அவரது மிகுசுவை நிறுவனமும் இந்த நாவலின் வரும் பாலைவனப் பசுஞ்சோலை என்றே கூறவேண்டும். பெண்கள் விட்டுவிடுதலையாகி வாழ வேண்டும் எனச் சும்மா சொல்லிவிட்டுப் போகாமல் அப்படி உழைத்து வாழ்வதற்கு எத்தனையோ வழிகள் உண்டு என்பதை

மிகுசுவை நிறுவனம் என்ற களத்தை நம்முன் கொண்டுவந்து காட்டுகின்றார் ஆசிரியர். இதன் மூலம் ஆசிரியரின் தொலைநோக்குப் பார்வையும் சமுதாய அக்கறையும் புடம் போட்டுக் காட்டப்படுகின்றது. இலக்கியம் என்பது சிக்கல்களை மட்டும் காட்டும் ஊடகமாக அல்லாது அவற்றுக்கான தீர்வுகளைக் கூறும் ஒன்றாக அமையவேண்டும் என மாக்சியத் திறனாய்வாளர்கள் கூறுவார்கள். அந்த வகையில் மிகுசுவை நிறுவனம் பெண் உழைப்பாளிகளுக்கான ஒரு நீர் ஊற்று என்றே கூறவேண்டும்.

மிகுசுவை நிறுவன உரிமையாளரான கருணா அம்மா உழைக்கும் பெண்களுக்கு முன்மாதிரியாகவும் அன்பும் அரவணைப்பும் கொடுப்பதில் அன்னை திரேசாவாகவும் நாவலில் வாழ்கின்றார். கருணா அம்மா என்ற வயதான அந்தத் தாய்க்கு நடக்கும் கொடுமை மூலம் ஈழப் போரின் கோர முகங் களை ஆசிரியர் வெளிக்காட்டுகின்றார். பாலியல் துன்புறுத்தல் என்பதும் போரின் இன்னொரு கொடிய முகமாகும். மிகுசுவை நிறுவனத்தில் வேலை செய்யும் ஏனைய பாத்திரங்களும்(குறிப்பாகப் பத்மா செல்வி, மைவிழி, மல்லிகா) நாவலில் வரும் ஆண் கதாபாத்திரங்களும் அவர்களின் நேரானதும் எதிரானது மான நடவடிக்கைகளும் நாவலின் கருவுக்கு வலுச் சேர்க்கின்றன. சம்பவங் களும் உரையாடல்களும் மிகவும் யதார்த்தமாக அமைக்கப்பட்டுள்ளன.

காலங்காலமாகப் பெண் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற மரபுச் சிறையைக் கட்டுடைத்து அவர்களது கைவிலங்குகள் கால்விலங்குகள் எல்லாவற்றையும் கழற்றிப் பெண்களைச் சுதந்திர வானில் பறக்கவிடுகின்றார் ஆசிரியர். விழிம்பு நிலை மக்களின் பிரச்சினைகள் வெளிக் கொண்டு வரப்படு கின்றன. அவர்களை அச் சிக்கல்களில் சிக்க வைத்துள்ள அதிகார மையத்துக்கு எதிரான குரலாக இந்த நாவல் இருக்கின்றது. அதிகார மையங்களைத் தகர்க்க முற்படுவதன் மூலம் இந்த நாவல் பின் நவீனத்துவ இலக்கியக் கோட்பாட்டுக்கு வலுச் சேர்க்கின்றது. மாற்றம் என்பது மாறாத ஒன்று என்ற இயங்கியல் கொள்கையை ஆதரிக்கின்றது.

மேற்கிலே சூரியன் உதிக்குமா என்றால் இல்லை என்போம். இல்லையில்லை உதிக்கலாம் என நான் கூறுகின்றேன். காரணம் யேகேஸ்வரி அம்மா தனது தள்ளாத வயதிலும் ஆரோக்கியமான தன் எழுத்துக்களால் எமக்கு விடியலைக் காட்டுகின்றார். ஒரு படைப்பாளி எந்தத் தடைகளையும் தாண்டி காலங்களையும் தாண்டி எழுந்து நிற்க முடியும் என்பதற்கு இந்த நாவல் ஒரு எடுத்துக்காட்டு. சாதகப் பறவை என்பது போராடும் பெண்களுக்கான குறியீடாக மட்டுமன்றி ஒரு படைப்பாளிக்குமான குறியீடாகவே நான் கருதுகின்றேன். இவரது இலக்கியப் பணி தொடர என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

அன்புடன்
திருமதி கலாநிதி ஜீவகுமாரன்
டென்மார்க்.

# சொல்ல நினைத்தவை

"இது கதை அல்ல" எனும் தலைப்புடன் 2011 ஆம் ஆண்டு "உதயன்" நாளிதழில் கட்டுரைத் தொடர் ஒன்றினை எழுதினேன். பெண்களுக்கு நான் கூற எண்ணியவற்றையே அப்போது கட்டுரையாக்கினேன். அதன் பின்னர் அவ்வப்போது சிந்தனைக்குத் தட்டுப்பட்டவற்றை கதையாக சொல்லலாம் என்று தோன்றியது. இடையிடையே எண்ணங்கள் எழுத்தாகவும் பதிவாகின. அவற்றை முழுமையாக்க இயலுமா என்ற தயக்கம் மேற்கொண்டு எதையும் செய்யவிடாது தடுத்து வந்தது.

இதே போன்று மற்றுமொரு ஆக்கத்திற்கான அத்திவாரம் ஒன்றை இதற்கு முன்னரே என்னுள் உருவாக்கியிருந்தேன். நான் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் பல தொழில் முயற்சியாளர்களை சந்திக்கவும் அவர்களது தொழில்கள் குறித்த விபரங்களை அறியவும் அவர்களது வளர்ச்சிக்கு காரணமாக அமைந்த திறன்களை இனங்கண்டுகொள்ளவும் நிறைய வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன. அந்த உற்பத்தியாளர்களின் கலவையாக ஒரு பாத்திரத்தை உருவாக்கி கதை எழுதவேண்டும் என்ற விருப்பம் எனக்கிருந்தது.

எதிலும் உயர்வும் தாழ்வும் வந்து போவது வழமை. உற்பத்தி, வியாபாரம் போன்ற துறைகளிலும் இது இயல்பு. எனினும் உள் நாட்டில் போராட்டமும் போரும் நடைபெற்ற காலத்தில் இவற்றிற்கு ஏற்பட்ட பாதிப்புகள் அதிகம். காலத்திற்குக் காலம் இத்துறையினர் சந்தித்த பாதிப்புகள் பல வகையானவை. இவற்றை விட இந்தத் துறைகளில் ஏற்பட்ட வேறுவகையான பல மாற்றங்களும் குறிப்பிடத்தக்கவையாக இருந்தன. இவை அனைத்தையும் இணைத்து ஒரு கதையை எழுத விரும்பி அதற்குத் தேவையான குறிப்புகளை யும் எழுதி வைத்திருந்தேன். ஆனால் ஆரம்பிப்பதும் விடுவதுமாக காலம் கடந்தது. எழுதி வைத்திருந்தவற்றை இழக்கவும் நேரிட்டது.

இந்த நிலையில் இதுவரை நேரத்தோடு போரராடிக்கொண்டிருந்த எனக்கு முன், திடீரென அது குவிந்து கிடந்தது. ஆனால் அதைப் பயன்படுத்தும்

இயலுமை என்னிடம் இல்லாது போயிருந்தது. “முயன்று பார்” என மனம் உந்தி உற்சாகமூட்டவே கணினியில் உறங்கிக்கொண்டிருந்தவற்றை சேர்த்தெடுத்து ஒரு நாவலாக உருவாக்க வருடக்கணக்கில் ஏதோ முயன்றேன்.

இப்பொழுது நான் கற்பனைசெய்து வைத்திருந்த பாத்திரத்தை கதையில் உலவவிடுவதற்கு போதிய தகவல்கள் என்னிடம் இல்லை என்பதை நான் உணர்ந்தேன். ஒரு நீண்ட கதையை எழுத என் உடல்நிலையும் ஒத்துழைக் காது என்பதும் விளங்கியது. எனவே பெண்களுக்குக் கூற விரும்பியவற்றை கதையாக்கும் முடிவிற்கு வந்தேன். அதனை எழுதும்போது மற்றொரு கதைக் கென மனதினுட் சேர்த்தவற்றையும் கலந்து எழுதியதன் மூலம் என் மனதை சிறிதளவு தேற்றிக்கொண்டேன். இதுவே “சாதகப்பறவைக்கு வேண்டுமோ கானல் நீர்?” உருவாகிய கதை.

பழந்தமிழ் இலக்கியங்களில் பல பறவைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சிலவற்றை எங்கள் பிரதேசங்களில் நாம் கண்டதில்லை. அத்தகைய ஒன்றுதான் சாதகப்பறவை. வானத்திலிருந்து விழும் மழைநீரைப் பருகி வாழ்வது என இப்பறவை குறித்து கூறுகின்றனர். பாலைவனத்தில் பயணிக்கும் போது தூரத்தில் நீர் இருப்பது போன்ற காட்சி தெரியுமாம். நீர் கிடைக்கப்போகிறது என்று அதை நோக்கி செல்லச் செல்ல அதுவும் தூர விலகி போய்க்கொண்டு இருக்குமாம். அங்கு நீர் இருப்பதில்லை. கண்களுக்குத்தான் நீர் போன்ற தோற்றம் தெரியும். இதனை கானல் நீர் எனக் கூறுவர்.

சாதகப்பறவையை அழைத்து “நீர் உனக்கு கிடைக்கவில்லையா? நீர் உயிர்வாழ அத்தியாவசியமானது. நீரைப் பருகாது வாழ இயலாது. அதோ தெரிகிற நீரைப் பருகியாவது உயிர் வாழ்” என கானல் நீரைக் காட்டி உபதேசம் செய்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இதைமட்டும் உங்களை சிந்திக்கச் சொல்லவில்லை. இன்று எம் மத்தியில் நடைபெறும் பல கொடூரங்களை எப்படி கட்டுப்படுத்தலாம்? எதிர்கால சமுதாயம் நல்லதாக அமைய என்ன செய்யலாம்? என்றெல்லாம் சிந்தியுங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக நீங்கள் உங்களை செப்பனிடுங்கள். ஓர் உதாரணமாக வாழுங்கள். அப்படி வாழ்வது கடினம். அதற்காக சொர்க்கத்தை காண்கிறோம் என்று பாதாளத்திற்குள் விழுந்துவிடாதீர்கள். இது காலங்காலமாக கூறப்படும் அறிவுரைதான். எனினும் அதனை பின்பற்றத் தவறுவோர் அதிகரித்து வருகின்றனரே. அதனால் மீண்டும் ஒரு முறை மனங்களில் பதியுமாறு எழுதவேண்டியுள்ளது.

இதில் வரும் சில நிகழ்வுகளையும் உரையாடல்களையும் தெளிவாக

விளங்கிக்கொள்ள அவை நடைபெற்ற கால வாழ்க்கை, நடைமுறைகள் முதலானவைகள் பற்றி அறிந்தவர்களுக்கே இயலும் என்பது எனக்கு புரிகிறது. கதையினூடே அவற்றை நான் விளக்க முற்பட்டால் கதையாக இல்லாது கட்டுரையாகிவிடுமோ என்ற எண்ணம் ஏற்பட்டது. மரகதத்தின் கொலை குறித்து காவல்துறைக்கு முறையிட நேரில் செல்வதன் காரணத்தை சித்திரா சிந்திப்பதாகவே எழுதினேன். அதுவே எனக்கு திருப்தி தரவில்லை. அதனால் வாசகர்களிடமே கண்டறியும் பொறுப்பை விட்டுவிட்டேன். உதாரணத்திற்கு பின்வரும் உரையாடல்

"கோண்டாவிலிலையிருந்து வந்திருக்கிறம்"

"ஓ?!!!"

இந்த நூல் வெளிவர உதவியோர் பலர். அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பது அவசியம். தன் வேலைப் பழுவின் மத்தியிலும் என் கோரிக்கையை ஏற்று, அணிந்துரையை எழுதி உதவிய திருமதி.கலாநிதி ஜீவகுமாரன் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி. இலக்கிய உலகில் இவரை அறியாதவர்கள் இல்லை. பல்துறை விற்பனர். டென்மார்க்கில் வாழ்கிறார். டேனிஷ் மொழியிலும் எழுதி சாதனை புரிகிறார். பிரபல எழுத்தாளர் டென்மார்க் ஜீவகுமாரனின் மனைவி.

ஜீவகுமாரன் அவர்கள் என் எழுத்து முயற்சிகளுக்கு பல வகைகளில் உதவி வருபவர். எனக்கும் கணினிக்குமிடையே நிறைய முரண்பாடுகள். அவற்றைத் தீர்க்கவியலாத பல வேளைகளில் உதவுபவர் ஜீவாதான். இந்த நூலுக்கும் அவ்வாறு உதவிய ஜீவகுமாரனுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். அடுத்து நான் மகனும் மருமகளும் என உறவுகொண்டாடும் பரணீ, விஷ்ணு தம்பதியினர். கதையை அனுப்பிவிட்டு "கடவுளே" என்று இருந்துவிடுவேன். மிகுதி அனைத்து வேலைகளும் இவர்களுடையது. நன்றி சொல்ல(லி) முடியாது. இந்த ஒரு புத்தகந்தான் அப்படி என்று எண்ணி விடாதீர்கள். இதற்கு முன்னர் ஆறு நூல்கள் என்றால் பாருங்களேன். நன்றிக்கு வட்டி, முதலுக்கும் வட்டிக்குமாக வட்டி. எனது கடன்சுமை விளங்குகிறதா?

நூல் வெளியீட்டுக்கு உதவிய ஜீவநதி பதிப்பகத்தினர, மற்றும் எனக்கு உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்<br>
கோப்பாய் தெற்கு, கோப்பாய்<br>
(தற்காலிக முகவரி) ஸறே, ஐ.இ.<br>
30-10-2023

# 1

சித்திராவின் வசிப்பிடத்திற்கு அருகில் இருக்கும் பிள்ளையார் கோவிலில் பெருந்திருவிழா நடந்து இன்று தேர்த்திருவிழா. ஊர் கூடி கொண்டாடும் தேர்த்திருவிழா. சித்திரா நாளும் பொழுதும் வணங்கும் பிள்ளையார் கோவில். இதுவரை திருவிழாவை தரிசிக்க அவளுக்கு கொடுத்துவைக்கவில்லை. தேருக்காவது போய் வழிபட்டால் மனதிற்கு ஆனந்தமும் நிம்மதியும் கிடைக்கும் என நினைத்து போயிருந்தாள்.. திரும்பும் போது எருமைக்கூட்டம் இறங்கிய குளமாகிக் கிடந்தது அவளது மனம்.

ஏன் இந்த மனிதர்கள் மற்றவர்களின் விஷயங்களில் மூக்கை நுழைக்கிறார்களோ? நீங்கள் நினைப்பதை உங்களுக்குள்ளேயே வைத் திருக்கலாமே! பெரிதாக புத்திமதி சொல்லுந் தோரணையில் முகத்துக்கு நேரிலேயே வேண்டாதவற்றை பிதற்றவேண்டுமா?

“இன்னும் தனியத்தானோ?”

பாடசாலைத் தோழி வனிதா அருகில் நின்ற கணவனை அறிமுகப்படுத்தியபின்னர் கேட்டாள்.

“ஒரிடமுஞ் சரி வரேல்லையோ?”

கையில் ஒரு மகனும் காலைக் கட்டிப்பிடித்தபடி ஒருவனுமாக இரு பிள்ளைகளுடன் வந்த மற்றொரு நண்பி மாதவியின் விசாரிப்பு இது.

“பெரிய இடமாய் பார்க்கிறியளோ? உங்கடை படிப்பு, பதவிக்கும் ஏத்ததாய் வேணும்தான். ஆனால் . . .”

“வயசும் ஏறுதெல்லே?”

“ஒரு பொம்பிளைக்கு ஆண் துணை கட்டாயம் வேணும்”

“மனிச ஆசாபாசங்கள் எங்கையும் வழுக்கி விழவும் வைச்சுப் போடும். ஓண்டைக் கட்டினால் நல்லது.”

இவள் பச்சையாக எதுவும் சொல்லக்கூடாது என சித்திராவின் மனம் பதறியது.

“சீ! என்ன மனிதர்கள்! ஒருவரின் உள்ளத்தைக் குதறுவதில் இன்பங் காண்கிறார்களே.”

உள்ளத்தின் கலக்கம் கண்களால் வெளிவர முயன்றது. மனதை அமைதிப்படுத்திய பின்னர் ஓரிடத்திலிருந்து சிந்திக்கவேண்டும் என்று அறிவு உபதேசித்தது. இந்தக் குழப்பம் கலையன்பனுக்கு எழுதிய மின்னஞ் சலை அழித்துவிட உத்தரவிட்டது. செம்மறி மந்தைக்குள் அவளையும் சாய்த்துவர முயன்றது. சிறிதளவு தெளிவு ஏற்பட்ட வேளையில், ஒரு விடயம் அறிவுக் கண்களுக்கு தென்பட்டது.

சித்திராவுக்கு அறிவுரை வழங்கிய இவ்வளவு பேரில் ஒருவர்கூட மாறுபட்ட கருத்தொன்றை சொல்லவில்லை. அப்படியென்றால் பெண்கள் திருமணம் செய்தால்தான் அவர்களது வாழ்வு முழுமை பெறுமா? அவர் களுக்கு மணவாழ்க்கை அத்தியாவசியமானதா? எல்லாப் பெண்களுக்கும் திருமணத்தின் வாயிலாக திருப்தியான வாழ்க்கை அமைகிறதா? திருமணம் பெண்ணுக்கு நிச்சயம் நன்மை தரும் என்று எவராலும் உறுதி கூற முடியாது. அதனால் பல பெண்களின் வாழ்க்கை சீரழிந்திருக்கிறது. ஆனால் தன் வாழ்வு எப்படி அமைந்திருக்கிறது என்பதைப் பற்றி சிறிதும் சிந்திக்காது, பலர் உபதேசம் செய்வார்கள். அதைக் கேட்பவளும் இடிந்து போய் இருந்துவிடுவாள். "உன்னைவிட நான் சந்தோஷமாக, நிம்மதியாக வாழ்கிறேன்" என்று நிமிர்ந்து நின்று மார் தட்ட இவளால் ஏன் இயலாது போகிறது?

சுயமாகச் சிந்திக்குந் திறன் எங்கு போயிற்று?

வாய்விட்டு யாராவது கூறித்தான் தெளிவு பெறவேண்டுமா?

இதுவரை சித்திரா சந்தித்த பல பெண்கள் பட்ட பாடுகள் அவளுக்கு உணர்த்தியவை செயல்முறைப் பாடங்கள்... எழுதியும் சொல்லி யும் கற்பிக்கும் பாடங்களைவிட மேலானவை. தன் வாழ்க்கையில் பயின்ற அநுபவப் பாடங்களை அவள் மீட்டுப் பார்க்க முற்பட்டாள்.

அவள் வேறுபட்டவள்.

எதிர் நீச்சல் அவளுக்குப் பழகிவிட்ட ஒன்று.

தன் சிறு வயதில் அவள் சிறகடித்துத் திரிந்ததில்லை. மகிழ்ச்சியை அநுபவித்ததில்லை. நினைத்துப் பார்த்து ஆனந்திக்க அவளது வாழ்வில் எதுவுமில்லை.

ஆனால் அதிலிருந்து கற்றுக்கொள்ள கவனத்தில் எடுத்து சேர்த்து வைத்து வருங்காலத்தில் பயன்படுத்த நிறைய விடயங்கள் பொதிந்து கிடக்கின்றன. அவற்றை உபயோகித்து வருங்காலத்தை நிர்ணயிக்கவே அவள் திரும்பிப் பார்க்க எண்ணினாள். தடுமாறும் உள்ளத்திற்கு சரியான வழியொன்றை தேர்வு செய்ய இந்த இரைமீட்டல் நிச்சயம் உதவும் என்ற நம்பிக்கை அவளை இதற்கு தூண்டியவண்ணம் இருந்தது.

அவளது சிறுவயது நோக்கி உள்ளம் ஓடிச் சென்றது. பார்வை யாளராக இருந்து தன் வாழ்வில் நடந்தேறி முடிந்தவற்றைப் பார்க்கத் தொடங்கினாள்.

# 2

சித்திரா அவசர அவசரமாக பெரியையா வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தாள். சித்திராவுக்கு பத்து வயது முடிந்து பதினொன்று நடந்துகொண்டிருந்தது. வயதுக்கேற்ற வளர்ச்சி இல்லை. மெலிந்த தோற்றம். மாநிறம். அந்தச் சிறுமியின் முகத்தில் படிந்திருக்கவேண்டிய முகிழ்த்து வரும் இளமையழகை ஏழ்மை வழித்துத் துடைத்தெறிந்து விட்டிருந்தது. அவளது உடலை மூடி நிறமிழந்த சட்டையொன்று தொளதொளவென தொங்கிக் கொண்டிருந்தது. “கந்தையென்றாலும் கசக்கிக் கட்டு” எனப் படித்ததைக் கடைப் பிடிப்பவளாக சட்டையைத் துப்புரவாக தோய்த்து அணிந்திருந்தாள்.

பாடசாலைக்கு நாளை அப்பியாசப் புத்தகத்துடன் சென்றாக வேண்டும். அம்மா வேலைமுடிந்து வந்ததும் பணம் வாங்கிப்போய் மணியங்கடையிலே வாங்கலாம் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்த வளுக்கு அம்மா கையை விரித்துவிட்டாள்.அம்மா வரும் வழியிலேயே வீட்டுக்குத் தேவையானவற்றை வாங்கிய பின்னர், கடைக்குக் கொடுக்க வேண்டிய கடனுக்காகக் கையிலிருந்த சம்பளக் காசைக் கொடுத்துவிட்டு வந்திருந்தாள்.

அதைக் கேட்டதும் சித்திராவின் மனதினுள் நாளைய வகுப்பறைக் காட்சிகள் தோற்றங் காட்டின. ஆசிரியர் வீட்டில் செய்துவரும்படி கூறியவற்றைக் கொண்டுவந்து தருமாறு கூறுவார். இவள் எழுந்து சென்று…

இல்லை. அப்படியெல்லாம் நடக்கவிடக் கூடாது. அப்பாவிடம் காசை எதிர்பார்க்கவியலாது. அம்மா கடையில் காசைக் கொடுத்துவிட்டு வந்ததற்குக் கூறிய காரணம்

“வீட்டை காசு கொண்டு வந்தால் கொப்பா பறிச்சுப்போடுவர்”

“அம்மா பாவம்!

சித்திராவின் கண்களுக்குள் அம்மா மரகதம் தோன்றினாள். மாநிறம். மெலிந்த உடல்வாகு வறுமை அவளது உடலை மேலும் வாட்டி

அழகைத் தேய்த்து மறைத்துவிட்டிருந்தது. கவலைகளைக் கூட்டிணைத்து உருவாக்கப்பட்டது போன்ற முகம்.

தாயை எண்ணி மனம் கலங்கியது. அப்பாவை எண்ணி சினம் பொங்கியது. எந்த நேரம் பார்த்தாலும் நிறை வெறியுடன் திரியும் நாக முத்தன் தான் சித்திராவின் அப்பா. கரிய கட்டையான உருவம். போதை,. அவரது முகத்தில் நிரந்தரமாகக் குடியிருப்பதால் அந்த முகத்திலிருந்த இனிய தன்மைகளெல்லாம் குடிபெயர்ந்துவிட்டிருந்தன. சிவந்த கண்களுக்குள் கொடூரமொன்று குந்தியிருப்பதால் சித்திராவிற்கு அவரைப் பார்க்கவே பிடிப்பதில்லை. இதுவே வாழ்க்கையாகிப் போய்விட்டதற்கு யாரை நோவது? யாரையும் நொந்து பயனில்லை என்பது அவளுக்குப் புரிந்தது. ஆனால் மனம் நோவதைத் தவிர்க்க முடியாது அந்தக் குருத்து வாடியது.

வீட்டுப் பிரச்சனைகளுள் மூழ்கித் தவித்தவாறு நகர்ந்து கொண்டிருந்த சின்னக் கால்கள் பெரிய ஐயா வீட்டைச் சென்று சேர்ந்தன. பெரியஐயா வீடு என அம்மா சொன்னாலும் அங்கு சின்ன ஐயா ஒருவரை அவள் கண்டது கிடையாது. இதைப் பற்றி ஒரு நாள் அவள் கேட்டபோது "சின்னஐயா கொழும்பிலை இருக்கிறார். இடைக்கிடை வந்து போவார்" என அம்மா கூறியிருந்தாள்.

வீட்டில் இருக்கின்ற ஐயா வயதானவர். வயல் தோட்டம் பெரிய நாற்சார வீடு முதலியவற்றுக்கு அதிபதி என்பதால் எல்லோரும் அவருக்கு மரியாதை கொடுக்கிறார்கள். அந்த மரியாதைக்கேற்ற உருவம் அவருக்கு இல்லை என்றே சித்திராவுக்குத் தோன்றும். அவர் சற்றேனும் உயரமாக இருந்திருக்கலாம். கம்பீரமும் அதிகமாக இருந்திருக்கவேண்டும். மா நிறமும் பருமனும் பரவாயில்லை. அவரை "ஐயா" என்றே அவள் அழைப்பது வழக்கம்.

வீடு குறித்து பேசுகின்ற வேளைகளில் பெரிய ஐயா வீடு என்று சொல்லி பழக்கமாகிவிட்டது

இருள் பரவிக்கொண்டிருந்த நேரம். சற்று நேரத்தில் இருள் முழுமையாகக் கவிந்துவிடும். அந்த எதிர்பார்ப்பு சித்திராவின் மனத்தினுள் பயத்தைப் பரவச் செய்துகொண்டிருந்ததது. போனவுடன் எடுத்து வர, வீட்டில் வைத்திருக்கும் பணமா?

"கடவுளே, பிள்ளையாரே, நீதான் துணையாயிருந்து எல்லாத்தை யும் செய்துதரவேணும்."

பிள்ளையாரை மனதுக்குள் வேண்டிகொண்டு பெரியையாவின் வீட்டுப் படலையின் முன் போய் நின்றாள். நாயொன்று குரைத்துக்கொண்டு

ஓடி வந்தது. நாய் வந்து கடித்துவிடுமோ என்ற பயம் எழ அவள் கண்களை ஓடவிட்டாள். வீட்டின் முன்புறமுள்ள வேலி பனையோலையால் உயரமாக அடைக்கப்பட்டிருந்தது. வேலியின் கீழ்ப் பக்கத்தை நோட்டமிட்டாள். பனையோலை மட்டைகள் அழகாகக் கெத்திட்டு செருகப்பட்டிருப்பதால் நாய் அதனூடாகவும் வர வாய்ப்பில்லை என மனம் திருப்திப்பட்டுக் கொண்டது. வீட்டுக்குப் போவதற்காக உள்ள பாதையை அடைத்து நின்ற படலையைப் பார்த்தாள். உயர்ந்து நின்ற அந்த படலையினூடாகவும் வரவியலாதென்ற நிம்மதியை அது தந்தது. வந்த நாய் படலையின் கீழ் தலையைத் தாழ்த்தி உறுமியது. சித்திரா சிறிது பின்வாங்கி "ஐயா, ஐயா" எனக் குரல் கொடுத்தாள். சிறிது நேரம் யாரும் வரவில்லை. நாய் குரைத்துக் கொண்டேயிருந்தது.

"ஆரது?"

கேள்வி வாயிலும் கையில் பாயொன்றுமாக அம்மா கதவைத் திறந்துகொண்டு வந்தார். சித்திராவிற்கு அவரைத் தெரியும். மரகதம் பெரிய ஐயா வீட்டிற்கு வேலைக்கு வரும்போது சித்திராவும் வருவதுண்டு. அப்படி வந்த வேளைகளில் அந்த வீட்டிலுள்ள அனைவருடனும் பழகியிருக்கிறாள்.

பெரியையாவின் மனைவிதான் இந்த அம்மா. பெயர் பரிமளம். அந்தப் பெயரை உபயோகிப்போர் குறைவு. எல்லோருக்கும் அவர் அம்மா தான். அவரைவிட வயதில் மூத்தவர்கள் பெயர் சொல்லி அழைப்பதுண்டு.

"அம்மா நான் சித்திரா. இங்கை வேலைக்கு வாற மரகதத்தின்ரை மகள்."

"என்னத்துக்கு வந்தனி?"

"பள்ளிக்கூடத்துக்கு கொப்பி கொண்டுபோக வேணும்..."

சித்திரா தயங்கித் தயங்கி வார்த்தைகளை இழுத்தாள்

"கொம்மா இப்பதான் கடனெண்டு சொல்லி நூறு ரூபாய் வாங்கிக்கொண்டு போனவள். பிறகு நீயும் பின்னாலை வாறாய். கொடுத்து வைச்சதை வாங்க வாறியளே?"

எதிர்பார்த்து வந்த தாக்குதல்தான். அவள் தலை குனிந்தபடி நின்றாள். கெஞ்சி மன்றாடித்தான் காரியம் பெறவேண்டுமென்பதை அந்தப் பிஞ்சும் அறிந்து வைத்திருந்தது குழந்தைப் பருவம் முதல் அடிபட்டுப் பெற்ற பாடம்.

"சரி. சரி. இந்த வேப்ப மரத்தடியை ஒருக்காக் கூட்டு. கொட்டிலுக்கை பாளை கிடக்கும்."

அம்மா சொல்லியதும் பறந்து போய் கொட்டிலின் உள்ளே கிடந்த

தென்னம் பாளையை எடுத்து வந்து மரத்தடியைக் கூட்ட ஆரம்பித்தாள் சித்திரா. ஏற்கனவே கூட்டுவதற்கு உபயோகிக்கப்பட்ட பாளை. அலக்கு களை ஒன்றாகக் கட்டி, கூட்டுவதற்கு இதமாக இருந்ததால் அவளுடைய சிரமம் இலகுவாக்கப்ப்டிருந்தது. வேலை செய்து பழக்கப்படட்டவள் என்பதால் மளமளவென வேலையை முடித்துவிட்டு வந்தாள்.

“இந்தப் பாயை வேம்புக்குக் கீழை விரி.”

அவள் பாயைப் பார்த்தாள்.

அடுத்த கட்டளை சிறுமியைச் சிரமப்படுத்தியது. சுருட்டி வைத்திருந்த பெரிய பாய் என்பதால் ஓரத்தில் பாரம் வைத்து நீள விரிப்பதற்கு அந்தச் சின்னக் கைகள் படாத பாடுபட்டன. முற்றத்தின் ஒரு பக்கத்தில் கிடந்த கற்களைத் தூக்கிவந்து அவற்றை பாயின் ஓரங்களில் வைத்து அதை ஒருவாறு விரித்துமுடித்தாள். அந்த வெற்றி தனக்குத் தேவை யான கொப்பியைத் தரப்போகிறது என்ற எதிர்பார்ப்புடன் அம்மாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

“நாளைக்குக் காலமை வா. கொப்பி வாங்கக் காசு தாறன்.”

சித்திராவின் முகத்தைக்கூடப் பார்க்காமல் மிகுந்த அலட்சியமாகக் கூறியபடி உள்ளே போகத் திரும்பினாள் அம்மா. பல முறை பட்டுப் பட்டு வேதனையும் ஏமாற்றமும் பழக்கப்பட்டிருந்தாலும் அந்தக் கணத்திலும் அவளது மனம் ஏமாற்றவாளின் தாக்குதலால் குருதி வழிய துடித்தது. கண்கள் கலங்க விம்மல் குரலை விக்க வைக்க “அம்மா” என்று சித்திரா அழைத்ததற்குக் காது கொடுக்க எவரும் அங்கில்லை. ஏமாற்றமும் அழுகையுமாக அவள் வெளியேறினாள்.

தன் வீட்டை அண்மிக்கு முன்னரே உள்ளத்தில் பீறிட்ட இரத்தத்தை கண்ணீரால கழுவி, தன்னைத் தேற்றிக் கொண்டவளாக மறு நாட் காலையில் பெரியையா வீட்டிற்குச் சென்று கொப்பி வாங்குவது பற்றித் திட்டமிடத் தொடங்கினாள். எப்பாடுபட்டேனும் பாடசாலைக்கு அப்பியாசப் புத்தகம் கொண்டு செல்லவேண்டும் என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்.

காலையில் அதே நினைவுடன்தான் சித்திரா எழுந்தாள். அப்பா எழுந்து பல் துலக்குவதற்காக கிணற்றை நோக்கிப் போய்க்கொண்டிருப்பது கண்ணில் பட்டது. “அப்பாவிடமும் கேட்டுப் பார்ப்போமா?” என்றொரு நப்பாசை மனதுள்ளிருந்து மெல்ல மேலெழவே பற்பொடியைக் கையில் அளவாகக் கொட்டியெடுத்துக் கொண்டு அவள் நாகமுத்தனைப் பின் தொடர்ந்தாள். “அப்பா காசு தந்தால் குதிரைக்குக் கொம்பு முளைக்கும்” என நினைத்தவளுக்குச் சிரிப்பு வந்தது. தனக்கு அப்பாவாக இப்படி

யொருவன் இருப்பதை நினைக்கும்போது மனம் புழுங்கியது. ஆனால் முயற்சியைக் கைவிட அவள் தயாராக இல்லை. நாகமுத்தன் கிணற்று வாளியை எடுத்து தொப்பென்று கிணற்றுள் போட்டு இலாவகமாகக் கயிற்றை இழுத்து நீரைக் கோலிய வாளியை வெளியே எடுத்து கை கால் முகம் கழுவ ஆரம்பித்தான். விரைவும் இலாவகமும் அதில் இருந்தாலும் அவனுக்கேயுரிய முரட்டுத்தனமும் மிதமிஞ்சிக் கலந்திருப்பதாக சித்திராவுக்குத் தோன்றியது.

“அப்பா”

மெதுவாக அவனுக்குப் பின்னே சென்று நின்ற சித்திராவின் அழைப்பும் மென்மையாகவே ஒலித்தது.

“என்ன?”

அதிகாலை லேளையில் வெறி முழுவதும் முறிந்திருந்தாலும் இம்மியளவு கூட இனிமையோ மென்மையோ கலக்காத முரட்டுக் குரல்.

“பள்ளிக்கூடத்துக்கு இண்டைக்குக் கட்டாயம் கொப்பி கொண்டு போகவேணும். வாங்க காசு தாறீங்களோ?”

“சாப்பாட்டுக்கு வழியில்லை. கொப்பி வேணுமாம் கொப்பி. பெட்டைச்சி படிச்சென்ன கிழிக்கப்போறாய? போய் கொம்மாவோடை வேலை செய்தியெண்டால் ரண்டு காசெண்டாலும் கிடைக்கும்.”

சீறியபடி திரும்பினான் நாகமுத்தன். சித்திரா திரும்பியோடினாள். தகப்பனிடம் அகப்பட்டால் அதோகதிதான் என்பது அவளுக்குத் தெரியும். எனவே பறந்து விட்டாள். அவன் வரமுன்னரே வீட்டைவிட்டு வெளியேறியும் விட்டாள்.

“எங்கை உன்ரை பெட்டை?” என்றவாறு தந்தை குடிசையைச் சுற்றி வந்து தேடியபோது அவள் பெரியையா வீடு நோக்கி ஓடிக் கொண்டிருந்தாள்.

“இவள் தேத்தண்ணிகூடக் குடிக்காமல் எங்கை போட்டாள்?”

“நீதான் அவளைக் கெடுக்கிறது. அவளை ஏன் பள்ளிக்கூடம் அனுப்புறாய்? உன்னோடை கூட்டிக்கொண்டு போகலாமே. ரண்டு காசு கிடைக்குமே. படிச்சென்ன செய்யப்போறாள்? கவுண்மேந்து உத்தியோகம் பாக்கப் போறாளே? அவ்வளவுக்குப் படிக்க எங்கை போறது?”

மகளின் வயிற்றுப் பசிக்கு தேநீராவது கொடுக்க தாய் தவிக்கும் போது தந்தை தன் மகளின் அறிவுப் பசித் தீயை அவித்து போதைக்குப் பணம் சேர்க்க வழி கண்டு கொண்டிருந்தான்.

“இவர் சொன்னதையெல்லாம் கேட்டுத்தான் எங்கடை வாழ்க்கை

இப்பிடிச் சீரழிஞ்சு கிடக்குது. பிள்ளையளாவது படிச்சு முன்னேறட்டும் எண்டு பாத்தா அதுக்கும் ஆப்பு வைக்க வாறார்.

வாய்விட்டுச் சொல்லப் பயந்து மனதினுட் குமைந்தாள் மரகதம் .சித்திராவை எப்படியும் படிக்க வைக்க வேண்டும். அந்த ஆவல் மரகதத்திடமும் சித்திராவிடமும் மட்டும் இருந்தென்ன பயன்? அவர்களைச் சூழ இருப்பவர்கள் தேவையற்ற ஒன்றாகவல்லவா கல்வியைக் கருது கிறார்கள்.

படித்தால் தமது வீடுகளிலும் வயல் தோட்டங்களிலும் பணிசெய்ய வரமாட்டார்கள். ஆகவே கல்வியின் மேல் அவர்களின் நாட்டம் சென்று விடக்கூடாது என்பதில் கண்ணுங்கருத்துமாக ஒரு வர்க்கம் இருக்கிறது. அது அவர்களின் சுயநலம். பிள்ளைகளும் படிக்கச் சோம்பல்பட்டு பள்ளிக்கூடப் பக்கம் பார்க்காமலேயே இருக்க விரும்புகிறார்கள். அது இயல்பு. பணவசதியின்மை படிப்பிற்குத் தடைகல்லாக நடுவே கிடந்து திசைமாற்றுகிறது. அது செய்யும் நாசங்களில் அதுவும் ஒன்று. ஆனால் இந்த உற்ற உறவுகளே படிப்பில் ஆர்வமுள்ள பிள்ளைகளைக்கூட கற்கவிடாது தடுப்பதை என்னென்று சொல்வது?

தான் சம்பாதிக்கப் போகும் போது தன் சிறு குழந்தைகளையும் வீட்டு வேலைகளையும் பார்த்துக் கொள்வதற்கென மூத்த மகளை பாடசாலை செல்லாது தடுத்து விடுகிறாள் அம்மா. அதே போன்று மகனை தன் உதவிக்கென அப்பா கல்வியிலிருந்து இடைநிறுத்தி விடுகிறார். பெண்பிள்ளைகளைப் பொறுத்தவரை அவள் பெண்ணாகப் பிறந்ததே தடையாகிப் போகிறது. “பொம்பிளைப் பிள்ளை வீட்டு வேலைகளைப் பழகினால் போதும். படிச்சு என்ன செய்யப் போறாள்?” என்பதை தாத்தா பாட்டி தொடக்கம் அப்பா அம்மா உட்பட சகல உறவுகளும் சுற்றமும் சொல்லி அவளையும் ஒரு செம்மறிக் குட்டியாக்கி விடுவார்கள். வழிவழி யாக மனங்களிற் பதிக்கப்பட்ட எண்ணக் கருவிலிருந்து சற்றுந் திரும்ப விரும்பாத மந்தைக் கூட்டமாக வாழ்பவர்களிடையே வேறுபட்ட சிந்தனை எவருக்கேனும் ஏற்பட்டால் முட்டிமோதி விடுவார்கள். இந்த வயதில் தந்தை எதிரி. இன்னும் வளர வளர மேலும் எதிரிகள் அதிகமாவர்.

சித்திரா பெரியையா வீட்டுப் படலையினை அடைந்ததுந்தான் தன் ஓட்டத்தை நிறுத்தினாள். மனதினுள் முகிழ்த்த நம்பிக்கையுடன் திறந் திருந்த படலையினூடே கண்களை அனுப்பி முற்றத்தைத் துளாவினாள். வேலியோரம் நின்ற செவ்வரத்தையின் அடியில் நாய் படுத்திருந்தது. வேம்படியில் பாய் விரித்தபடியே கிடந்தது. எந்தவித சந்தடியுமில்லை. தயக்கம் மெல்லத் தலை நீட்டினாலும் ஆவல் கொடுத்த உந்தலில் காலெடுத்து வைத்து உள் நுழைந்தாள்.

நாய் தலையை நிமிர்த்திப் பார்த்து மெல்ல முனகிவிட்டு பழையபடி அறிதுயிலில் ஆழ்ந்தது. “குரைக்கவில்லை. நேற்றுக் கண்ட பழக்கம் போலும். இனி கடிக்காது.” என மனதினுள் முடிவெடுத்து “அம்மா” என்று குரல் கொடுத்தாள் சித்திரா. அதற்குப் பலன் கிடைக்காது போகவே மீண்டும் இரு தடவைகள் அழைத்தாள். வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்ததுமே உள்ளே சென்ற உருவம் மங்கையர்க்கரசி என்பதை இனங் கண்டு கொண்டாள் சித்திரா.

மங்கை அம்மாவின் பேர்த்தி. மகளின் மகள். முன்பு சித்திரா படிக்கும் ஊர்ப் பள்ளிக்கூடத்திலேதான் படித்தவள். இப்போது யாழ்ப்பாண நகரத்திலிருக்கும் மகளிர் கல்லூரியில் படிக்கிறாள்.

“அவை திறம் பள்ளிக்கூடத்திலைதானே படிப்பினம்” என ஆரம்பித்த எண்ணத்தொடரை சடாரென மற்றொன்று குறுக்கறுத்தது.

“அவ பெரிசான பிறகுதான் மாற்றி விட்டவை”

அப்படியென்றால் சித்திரா பெரிசானால்..?

“படிக்க விட மாட்டார்கள்!!”

உள்ளிருந்து வந்த உரையாடல் அவளது எண்ணங்களை இடைநிறுத்தியது.

“அந்தப் பெட்டை வந்து நிக்குது.”

“ஆர்? மரகதத்தின்ரை மேளோ?”குரலுடன் அம்மாவும் வெளியே வந்தாள். கண்டதுமே ஓடிச் சென்ற சித்திரா பணத்தை அம்மாவின் கையில் எதிர்பார்த்தாள்.

“இந்தப் பாயிலை கிடக்கிற வேப்பம்பூவை கவனமாய் குப்பை மண் ஒண்டுமில்லாமல் இந்தப் பெட்டிக்குள்ளை எடுத்துப் போடு. துப்புரவாய் செய்யவேணும்” சொல்லிக் கொண்டே பனையோலைப் பெட்டியொன்றை அவள் முன் நீட்டினாள் பெரியம்மா.

பாடசாலைக்குப் போகாமலே இங்கே நின்று வேலை செய்தால் தான் காசு கிடைக்குமோ? சித்திரா மளமளவென்று வேலையில் இறங்கினாள். அவளுக்குச் சவால் விடும் பெரிய பாய்தான். மெல்ல ஒரு மூலையில் பிடித்துத் தூக்கி உதிர்ந்திருந்த பூக்களை நடுவுக்கு நகர்த்தி அதே போல் மற்றப் பக்கத்தையும் ஒதுக்கி எடுத்த பின்னர் வெறுமையாகி யிருந்தளவு பாயையும் சுற்றிவிட்டு குவிந்திருந்த பூவைத் துப்புரவாக்கி அள்ளி தன் இயலுமைக்கு அதிகமாகவே தனக்கிடப்பட்ட பணியை நிறைவேற்றி நிமிர்ந்தாள்.

“வீட்டிலே கிடைக்கிற தேநீரைக்கூட குடிக்காமல் வந்து விட்டாயே”

என்று பசி குடலைப் பிராண்டி பிராண்டி கூறிக்கொண்டிருந்தது. பெட்டி நிறைந்திருந்தது. அதை எடுத்துச் சென்று பெரியம்மா காட்டிய இடத்தில் வைத்தாள்.

“இதிலை இரு”

மேலும் வேலை எதாவது இருக்கிறதோ?

சின்னம்மா பழைய செய்தித்தாள் துண்டொன்றில் பாண் துண்டுகள் இரண்டையும் ஒரு குவளை பால்தேநீரையும் கொண்டு வந்து அவளிடம் நீட்டினாள். இதை எதிர்பார்க்காத சித்திரா திகைப்புடன் சில கணங்களை கழித்து விட்டு சமகால நினைவு வந்தவளாக எழுந்து நின்று “நன்றி சின்னம்மா” எனக் கூறியவாறு அதனைப் பெற்றுக் கொண்டு அமர்ந்தாள். இப்போது திகைப்பு அவளிடமிருந்து இடம் மாறி சித்திரா சின்னம்மா என்றழைத்த திருமகளிடம் போய் குந்திக் கொண்டது.

“நன்றி எல்லாம் சொல்லுறாயே” என திருமகளின் வாய் புகழ்ந்து பேசினாலும் “தாய் கூலிக்கு வேலைக்கு வருகுது. பெட்டையின்ரை கதையைப் பார்” என்று மனம் கரித்து உமிழ்ந்தது.

“நன்றி சொல்ல வேணும் எண்டு ரீச்சர் சொல்லித் தந்தவ” கபடமின்றி சித்திரா பதிலளித்தாள். “இந்தா காசு”

சித்திரா கை கழுவி வரவும் அம்மா ஐம்பது சதக் குத்தி ஒன்றை அவளிடம் நீட்டினாள். சித்திராவின் மனத்தை மகிழ்வு பந்தாடியது. மனதை நெருடிய ஐயம் பயம் அனைத்தும் பறந்திருந்தன..

“நன்றி அம்மா”

“உன்ரை பேரென்ன? சித்திராவோ?”

பறக்க நிமிர்ந்த சிட்டு பூனையின் குரல் தடுக்க நின்று திரும்பியது. அவளுடைய பதில் தனக்கு அவசியமற்றது எனும் பாவனையில் அம்மா தொடர்ந்தாள்.

“நாளைக்கு இன்னும் வெள்ளணவாய் வா. இங்கை சாப்பாடு தரலாம். பின்னேரம் வந்து நேற்றையப் போல கூட்டி பாயை விரிச்சுப் போட்டு போ.”

“நாளைக்கு…”

“நாளைக்கு என்ன?”

“இ…ல்லை…பள்ளிக்கூடம் போறனான்”

“இண்டைக்குப் போற மாதிரி போகலாந்தானே?”

“அப்பிடியெண்டால் சரி”

“பெரிய படிப்புப் படிச்சுக் கிழிக்கப் போறா. பள்ளிக்கூடம் போக வேணுமாம்”

அவசரம் அவசரமாகப் பறந்த சித்திராவின் காதுகளை தொட்டுவிட முடியாத ஏமாற்றத்துடன் அந்தச் சொற்கள் காற்றுடன் கலந்தன.

சித்திரா தன் வீட்டிற்குப் போய் உடை மாற்றி பாடசாலை செல்ல நேரம் சென்றுவிட்டது. அதிபரைச் சந்தித்து மன்னிப்புக் கோரி வருங் காலத்தில் பிந்தி வரமாட்டேன் என்று உறுதியளித்தபோது மனம் குறுகுறுத்தது.

“நாளையும் தொடர்ந்தும் பெரியையா வீட்டிற்குப் போய்வர வேண்டும். நேரம் போய் விடும். அங்கே போவதில்லை என்று முடிவெடுத்தா லும் பணத்தட்டுப்பாடு படிப்பதைத் தடுக்கும். அம்மா அங்குதான் வேலைக்குப் போய் வருகிறாள். அவளுக்கு வேலையில் பிரச்சினைகள் வரலாம்.”

சித்திராவின் சின்ன மூளை அளவிற்கு அதிகமாகவே சிந்தித்தது. அன்று முழுவதும் அவளது படிப்பை இந்தத் தீர்வு தேடும் சிந்தனை ஊடறுத்துக்கொண்டிருந்தது. மாலையில் வேப்பம்பூ சேகரிக்கும்போதும் அதுவே தொடர்ந்தது.

மறுநாள் கையில் ஒரு புத்தகப்பையுடன் வந்து நின்ற சித்திராவைக் கண்டதும் பெரியம்மாவிற்குச் சிரிப்பு வந்தது.

“இங்கை ஒருதரும் பாடஞ்சொல்லித் தராயினம்”

தாயார் சொல்வதைக் கேட்ட திருமகள் விடயம் விளங்காது, காரணம் அறிய எட்டிப் பார்த்தாள். சித்திரா நின்றிருந்த கோலத்தைப் பார்த்து அவள் சிரித்த சிரிப்பு எள்ளலை எங்கும் தூவியது.

“வேலைக்கு வரச் சொன்னனாங்களோ? படிக்க வரச்சொன்னனாங் களோ?” எள்ளல் சொற்களாகித் தெறித்தது.

இந்த வரவேற்பு அந்தப் பிஞ்சு மனதை நசித்துக் குறுக்கியது. அவள் தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டு “நேற்றுப் பிந்திப்போய் அதிபரிட்டைப் போய் இனிமேல் நேரத்துக்கு வருவன் எண்டு மன்னிப்புக் கேட்டனான்” எனக் காரணத்தை விவரித்தாள். யார் என்ன சொன்னாலும் என்ன செய்தாலும் கணக்கில் எடுக்காமல் தன் படிப்பைத் தொடர்வதே அவளது நோக்காக இருந்தது. கையிலிருந்த பையை ஓரிடத்தில் வைத்துவிட்டு மளமளவென தன் வேலையைத் தொடங்கினாள்.

அதையும் சாப்பாட்டையும் முடித்த பின் வீட்டின் பின்புறமாக விருந்த கொட்டிலினுள் சென்று சீருடைக்கு மாறி பாடசாலைக்குப்

புறப்பட்டாள். திருமகளும் தாயும் எள்ளலிலிருந்து வியப்பிற்கு மாறிப்போய் அவளது செயற்பாடுகளைப் பார்த்துக்கொண்டு நின்றனர்.

வேப்பம்பூ காலம் கடக்க மற்றொரு வேலையாக மாறி ஒரே நடைமுறையில் சித்திராவின் பள்ளி வாழ்க்கை தொடர்ந்தது. ஆனால் நிம்மதியாக இருப்பதற்கு அவளுக்குக் கொடுப்பனவு இல்லைப் போலும். "ஐயா"; என சித்திரா மரியாதை கொடுத்துவரும் மணியத்தாரின் கண்கள் அவளது நடைமுறைகளைக் கவனித்துக்கொண்டே இருந்தன.

காலம் தன் கடமையைச் செய்து சித்திராவை வளர்த்துக்கொண்டு வந்தது. அவள் பெண்பிள்ளை அல்லவா? அதற்கான மெருகும் அவளுடலில் ஏறத் தொடங்கியது.

அன்று ஒரு வியாழக்கிழமை. காலை நேரம். "அம்மா! அம்மா!" என மரகதத்தின் குரல் கேட்டது. திருமகள் வெளியே வந்தாள். "சித்திரா பெரிய பிள்ளையாயிட்டாள். ஏதாவது வேலை கிடந்தால் செய்துபோட்டுப் போவம் எண்டு வந்தனான் அம்மா" என்றாள் மரகதம்.

"இங்கை அவளென்ன பெரிசாய் வேலை செய்யிறவளே? வந்து சாப்பிட்டிட்டுப் போகட்டும் எண்டெல்லோ வரச் சொல்லுறனாங்கள்"

மரகதத்திற்கு வேலை கொடுத்து சம்பளம் கொடுக்க அவளது மனம் இடம் கொடுக்கவில்லை. அத்துடன் சித்திராவுக்குப் பசி யாற்றினோமே அன்றி அந்தச் சிறுமியிடம் உழைப்பைக் கறக்கவில்லை என நிறுவவும் செய்தாள் திருமகள்.

"அப்ப வாறனம்மா."

"ஒருக்கா நில் மரகதம்"

வெளிச் செல்லத் திரும்பிய மரகதத்தை அம்மாவின் குரல் தடுத்து நிறுத்தியது.

"பெட்டி, கடகம் ஏதும் கொண்டந்தனியே?

அம்மா கேட்டாள்.

"இல்லை அம்மா."

"பின் கொட்டிலுக்கை பழங் கடகம் கிடக்கும் எடுத்துக் கொண்டு வா"

அவள் பின் பக்கம் சென்று பனையோலையால் இழைக்கப் பட்டு பனம்மட்டையின் நாரை பொருத்தி வலிதாக்கப்பட்ட விளிம்பு கொண்ட கடகம் ஒன்றைக் கொண்டு வந்தாள். உள்ளே எடுத்து வைத்திருந்த ஒரு கடகம் நிறைந்த நெல்லை சுட்டிக் காட்டிய அம்மா "அதை எடுத்துப் போடு" என்றாள். மரகதம் முகம் நிறைந்த மகிழ்ச்சியுடன் அதை எடுத்துக்

கடகத்தினுள் கொட்டினாள். “பத்துத் தேங்காய் தந்தால் கொண்டு போவியே?”

மரகதம் என்ன பதில் சொல்வதென முடிவு செய்யவியலாது தவித்தாள். கைக்கெட்டியதைக் கைவிட்டால் பின்னர் கிடைக்காமலும் போகலாம். எல்லாவற்றையும் கொண்டு செல்லவும் அவளால் இயலாது.

“உன்னாலை ஏலாட்டி நாகமுத்தனை வரச் சொல்லன்”

“வேண்டாம் அம்மா. அது வீட்டை கொண்டராது. எங்கையாவது வித்துப்போட்டு மூக்கு முட்டக் குடிச்சிட்டு வரும். நான் இதைக் கொண்டு போய் வைச்சிட்டு திரும்ப வந்து கொண்டு போறன். இந்தக் கடகத்தை எப்பன் பிடிச்சு விடுங்கோ சின்னம்மா”

ஒரு முடிவிற்கு வந்து செயற்பட ஆரம்பித்தாள் மரகதம். அவள் கடகத்தைத் தூக்கித் தலையில் வைக்க திருமகள் கைகொடுத்து உதவினாள்.

“நான் அவளுக்கேன் வீண் சம்பளம் எண்டு வேலை கொடுக்காமல் அனுப்பப் பாக்கிறன். நீங்கள் அவளைக் கூப்பிட்டு நெல்லு, தேங்காய் எண்டெல்லாம் அள்ளிக் கொடுக்கிறியள் அம்மா. இப்பிடிக் கொடுப்பீங்கள் எண்டு தெரிஞ்சிருந்தால் சித்திரா செய்யிற வேலையளைச் செய்விச் சிருக்கலாம்”

மரகதம் தலையில் கடகத்துடன் அப்பால் போய் மறைந்ததும் திருமகள் புகைந்தாள்.

“அவள் தேங்காயை விட்டிட்டிருக்காள். இப்ப திரும்பி வருவள். சொன்னால் வேலையைச் செய்வள். சித்திரா இங்கை வேலையள் செய்யாட்டில்கூட மரகதம் தன்ரை மகள் பெரியபிள்ளையாயிட்டாள் எண்டு வந்து சொன்னால் இப்பிடிக் குடுக்கிறது வழக்கம். அதைச் செய்யாமல் விடேலாது.” பரிமளம் தான் செய்ய வேண்டியதைத்தான் செய்திருப்பதாக உறுதிபட மகளுக்குக் கூறினாள்.

“இனி சித்திராவை பள்ளிக்கூடம் போக வீட்டிலை விடாதுகள்.”

“இங்கை வந்து வேலை செய்ய விடுங்கள். காசு அதுகளுக்குத் தேவை தானே”

“கூலி கொடுத்து அவளைக்கொண்டு என்ன செய்விக்கிறது?.”

தாயும் மகளும் சித்திராவின் எதிர்காலம் பற்றி இப்படி உரையாடிக் கொண்டிருக்கையில் சித்திராவும் அதை எண்ணி அழுது கொண்டிருந்தாள்.

இவர்களைப் பார்த்து காலம் சிரித்துக்கொண்டிருந்தது எவரது கண் களுக்கும் தெரியவில்லை.

## 3

ஏதோ அதிசயம் நடந்து விட்டது போன்று உற்றமும் சுற்றமும் மாறி மாறி சித்திரா வீட்டிற்கு வந்து அவளைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தது சித்திராவிற்கு இனம் புரியாத மிரட்சியையும் தவிப்பையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. வந்தவர்கள் எதில் பேச்சை ஆரம்பித்தாலும் என்னத்தைப் பேசினாலும் முடிவில் அவள் இனிமேல் பாடசாலைக்குச் செல்லக்கூடாது என்பதற்கு வந்து அதை நன்கு அழுத்திச் சொல்லிவிட்டுப் போனார்கள். இது சித்திராவின் மனநிலையை மேலும். பாதித்தது... ஏனென்று தெரியா மலேயே அழுகை அழுகையாக வந்தது. அவளிடம் பேசவந்தவர்கள் மேல் வெறுப்பும் கோபமும் கொப்பளித்தன. எதைச் சொன்னாலும் எரிந்து விழுந்தாள். அழுது கொண்டே இருந்தாள்.

“நான் பள்ளிக்கூடம் போகவேணும். இவை ஏன் நான் படிக்கிறதை மறிக்கினம்?”

எல்லோரும் போய்த் தொலைந்து விட்டார்கள். அம்மா சாப் பாட்டுடன் அவளிடம் வந்தாள்.

“நான் சாப்பிடமாட்டன்.”

“இந்த நேரத்திலை வசதியான வீட்டுப் பிள்ளையளுக்குச் சத்தான சாப்பாடு குடுப்பினம். உனக்கு என்னத்தைத் தரப் போறன் எண்டு கவலைப் பட கடவுளாய்ப் பார்த்து நெல்லுத் தந்தார். கிடைச்சதை சந்தோசமாய் சாப்பிடுறதை விட்டிட்டு ஏன் சாப்பிடமாட்டனெண்டு பிடிவாதம் பிடிக் கிறாய்?”

மரகதம் கோபமாகக் கத்தினாள்.

“நான் பள்ளிக்கூடம் போய் படிக்க வேணும். போக விடுவீங்கள் எண்டு சொன்னால்தான் சாப்பிடுவன்.”

“உன்னை பள்ளிக்கு போக வேண்டாமெண்டு ஆர் சொன்னது?”

“வந்தவை எல்லாரும் சொல்லுகினம்.”

“அவையே படிப்பிக்கினம்? நீ போய்ப் படி. நான் சொல்லுறன்.

நாங்கள் படிக்காமல் இருந்துதான் இப்பிடிக் கயிட்டப் படுகிறம். உங்களுக்கும் அந்த நிலமை வேண்டாம்.”

“இப்ப உனக்கு என்ன குறைச்சல்? இவளைப் படிப்பிச்சு என்ன பிரயோசனம்? உத்தியோகமே பாக்கப்போறாள்.? பெட்டையள் வீட்டு வேலையள் செய்தால் போதும்.”

வாசலில் நின்று தாயும் மகளும் பேசுவதை கேட்டுக்கொண்டிருந்த நாகமுத்தன். திடீரென வந்து கோபத்துடன் உச்சத் தொனியில் கத்தினான்.

“படிக்காததாலை தானே உன்னைக் கட்டி இப்பிடிச் சீரழியிறன். படிச்சிருந்தால் எங்கையும் வேலை செய்து சீவிக்கலாம் எண்ட துணிச்ச லிலை ஆமான ஒருதன் வருமட்டும் கட்டாமல் இருந்திருப்பன்.”

“ஓமோம். இருந்திருப்பாய். இராசகுமாரன் வந்து கட்டியிருப்பன்.”

“அரசகுமாரன் வேணுமெண்டனானே? குடிகாறனில்லாத குண மான புருசனாய் பார்த்து கட்டியிருப்பன்”

நாகமுத்தனின் கோபம் உக்கிரமடைந்தது கோபத்தைக் காட்டுவதற்காக அங்கிருந்த உணவுப் பண்டங்களை நிலத்தில் சிந்தினான். அதைத் தடுக்க வந்த மரகதத்திற்கு அவன் அடிக்க, அவள் கதற, வீடு அல் லோல கல்லோலப்பட்டது. அன்று எல்லோரும் பட்டினியாகப் படுத்தனர். சித்திராவிற்கு உறக்கமே வரவில்லை. பெற்றோரின் கதையாடல் மீண்டும் மீண்டும் மூளைக்குள் ஒலித்து சிந்திக்கத் தூண்டியது.

அம்மா படிக்காததால்தான் இப்படி ஓர் அப்பாவுடன் கஷ்டப்படு கிறாள். தாயின் கண்ணீர் சித்திராவின் ஆழ்மனதிற்குள் கல்வெட்டெழுத் தாய் பதிந்தது.

அத்துடன் பழைய ஞாபகமொன்றும் சேர்ந்து கொண்டது. இப்படி களேபரம் நடந்த நாளொன்றில் “ஏனம்மா இவரைக் கலியாணம் செய்தனீங்கள்?” என்ற சித்திராவின் கேள்விக்கு “பெண்பிளைக்கு ஒரு பாதுகாப்பு வேணுமெண்டுதான்” என்று அம்மா பதில் சொன்னாள். அது அன்றுஞ் சரி இன்றுஞ் சரி அவளுக்கு நகைப்பூட்டுவதாகவே இருக்கிறது.

நான் படிக்க வேண்டும். எப்படியாவது படிக்க வேண்டும்.

அந்த நினைவுடனேயே சித்திரா உறங்கிப்போனாள்.

ஒரு வாரம் ஓடி முடிந்தது. அன்று திங்கட்கிழமை. வழமை போல் முற்றத்தில் வந்து நின்று சித்திரா அழைத்த குரல் கேட்கவும் திருமகள் வெளியே வந்தாள். பாடசாலை செல்வதற்கு ஆயத்தமாக வந்து நின்ற சித்திராவைக் கண்டபோது பொச்சுத் தும்புக் குவியலில் பொறி விழுந்தது போல் அவளுள் புகை மண்டியது.

இது இனியும் படிக்கப் போகுதே?

பக்கென்று வயிற்றினுள் பற்றியெரிந்த சுவாலை "இனியும் படிக்கப்போறியேடி?" என்ற சிடுசிடுக்கும் சொற்களாக வெளிக் கிளம்பி அதை எதிர்பார்க்காத சித்திராவிற்குள் கொதிக்கக் கொதிக்க உள்ளிறங் கியது.

நான் படிக்கக் கூடாதெண்டு சட்டம் ஒண்டும் வரேல்லையே அம்மா?

சித்திராவினுள்ளே பொங்கிக் கொண்டிருந்த கோபம் உச்சங் கண்டது. அதேவேளை பரிமளம் வெளியே வரவும் கஷ்டப்பட்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"சித்திரா வேலைக்கோ?"

அவள் வேலைக்கு வந்து விட்டதால் மகிழ்ச்சியடைந்த பரிமளத்தின் குரலில் அந்தச் சந்தோஷம் வெளிப்பட்டது.

"ஓமம்மா"

பதில் சொல்லிக் கொண்டே புத்தகப் பையை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு தான் வழமையாகச் செய்யும் வேலைகளைத் தொடங்கினாள். பாடசாலைக்குச் செல்லும் ஆயத்தங்களுடன் சித்திரா வந்திருப்பதை பரிமளமும் அவதானித்தாள். பழைய பாதையிலேயே வாழ்க்கை பயணிக் கத் தொடங்கியதனால் மனதுக்குள் புத்துணர்வொன்று நறுமணமாய்ச் சூழ்ந்து சித்திராவை ஆனந்திக்கச் செய்யவே அவளது கரங்கள் வேகங் கொண்டன. சற்று முன்னதாகவே வேலைகளை முடித்துவிட்டு பாட சாலைக்குப் புறப்பட்டாள்.

அதே தடத்தில் நாட்கள் தொடர்ந்து சென்றன. பாதையொன்று திருப்பமின்றி தொடர்வதில்லையல்லவா? வாழ்க்கையிலும் அப்படியே.

ஆண்டு ஒன்பதுக்கு வந்து சேர்ந்திருந்தாள் சித்திரா. வறுமையிடம் சிக்குண்டு தப்பிப் பிழைத்து கல்வி கற்று வந்ததால் அவள் வகுப்பில் அதிதிறமைசாலி என்னும் நிலையில் இருக்கவில்லை. இயல்பாகவே அவளுள் ஒரு திறமை கோலோச்சிக்கொண்டிருந்ததனால் பின்வாங்கு மாணவியாகவும் கணிக்கப்படவில்லை. அவளது வகுப்பாசிரியராக துளசிதாசன் பொறுப்பேற்றிருந்தார்.

அவர் தொடர் கண்காணிப்பின் பின்னர் தன் வகுப்பு மாணவர்கள் குறித்து ஒரு கணிப்பீடு செய்து தனக்குள் பதிந்து வைத்துக்கொண்டார். தான் கூடிய கவனமெடுக்கவேண்டிய மாணவர்கள் என பலரைக் குறித்துக் கொண்டார். மிகவும் பின்தங்கியவர்களாயிருந்தும் சாதனையாக

தள்ளுப்பட்டு அடுத்த வகுப்பிற்குள் நுழைந்துள்ளவர்கள். திறமையிருந்தும் போதிய வசதியின்மையால் அதனைக் காட்டமுடியாதவர்கள் என அவர் மாணவர்களை வெவ்வேறு வகையாகப் பிரித்துக் கொண்டபோது சித்திராவும் அவரது கவனத்தைப் பெற்றாள்.

ஒரு தந்தையின் பரிவோடு ஆசிரியர் அவளை அணுகியபோது சித்திரா தனக்குள்ள பிரச்சனைகளை மெல்ல மெல்ல அவருக்குக் கூறி ஆறுதல் பெற முற்பட்டாள். துளசிதாசனும் தந்தை போல் அன்பு காட்டும் ஆசிரியராக அவளை வழி நடத்த ஆரம்பித்தார்.

சித்திரா பெரியையா வீட்டில் வழமை போல் காலையில் வேலைகள் செய்து வந்தாள். வேலைகள் படிப்படியாகக் கூடி வந்தன. அவள் இடையிடையே பாடசாலைக்குக் கொடுக்கவேண்டிய பணத்தொகைகளை அம்மாவிடம் கேட்டு வாங்கிக்கொண்டாலும் அவள் செய்யும் வேலைகளுக் கேற்ற கூலி அவளுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்பது இருவரின் அறிவிற்கும் தெரிந்தேயிருந்தது. தான் கல்வியைத் தொடர அம்மாவின் உதவி முக்கிய காரணம் என்ற நன்றி உணர்ச்சி சித்திராவை மௌனமாக்கி யிருந்தது.

இப்போது இடையிடையே பெரியையா அவளின் வேலைகளை மேற்பார்வை செய்யத் தொடங்கியிருந்தார். அது மெல்ல மெல்ல அதிகரிப் பதை சித்திரா கவனிக்கவில்லை. பெரியையா அவளது வேலைகளில் குற்றங் கண்டு கண்டிப்பதில்லை. அதனால் அவரின் மேற்பார்வை அவளுக்கு வெறுப்பூட்டவில்லை. இடையிடையே அவளைப் பாராட்டவே செய்தார். பாராட்டி முதுகில் தட்டிக்கொடுப்பார். தன் பணிகள் அவருக்கு உவப்பாக இருப்பதாக எண்ணி அந்தச் சிறுமி மகிழ்ந்தாள்.

இளமை அவளது உடலில் தன் வருகையை பறைசாற்றத் தொடங்கியிருந்ததை அவள் கவனித்திருந்தாலும் அதை பொருட்படுத்த வில்லை. ஆனால் பார்ப்பவர்களின் கண்களை ஈர்க்கத்தானே செய்யும்?

மரகதத்திற்கு மகிழ்ச்சி வந்தாலும் கோபம் ஏற்பட்டாலும் சித்திராவின் கன்னத்தைக் கிள்ளுவது அவளது வழக்கம். பெரியையாவும் இப்பொழுது சிலவேளைகளில் சித்திராவின் திறமையைப் பாராட்டும் போது கன்னத்தைக் கிள்ளுவார். தன் தாத்தா இருந்திருந்தால் இப்படித்தான் செய்திருப்பார் என்று சித்திரா எண்ணிக்கொள்வாள்.

அன்று பின் கொட்டிலினுள் உடை மாற்றும்போது ஏதோ சரசரப்புச் சத்தம் கேட்கவே சித்திரா திரும்பினாள். பெரியையா சிறுநீர் கழிப்பது தெரிந்தது. அவர் இவ்வாறு செய்து அவள் கண்டதில்லை. “பாவம். வயதான காலம். அவசரத்தில் பின் பக்கம்தானே என்று வந்திருக்கவேண்டும்” என

எண்ணிக் கொண்டு உடனடியாகவே திரும்பினாள். ஆனால் மறு நாளும் அதே நிகழ்வு. திடுக்குற்று நிமிர்ந்த கண்களிலே கொட்டிலின் மறைப்பிற் காகக் கட்டியிருந்த சாக்கின் ஓட்டை வழியே அவர் அவளையே பார்ப்பது தெளிவாகப்பட்டது.

அந்தக் கண்கள்?

ஓடிச்சென்று அம்மாவிடமோ சின்னம்மாவிடமோ சொல்வதற்கும் அவர்கள் வீட்டிலில்லை. மூன்று நாட்களுக்கு முன் பெறாமகள் வீட்டில் யாருக்கோ கலியாணம் என்று பெரியையாவைத் தவிர்ந்த எல்லோரும் போயிருந்தார்கள். சித்திராவின் மூளைக்குள் ஆபத்து எச்சரிக்கை ஓசை யொன்று கேட்பது போன்றிருந்தது. அவசர அவசரமாக பாடசாலை உடையை அணிந்து கொண்டு வெளியே வந்தாள்.

“சாப்பாடு ஒன்றுமில்லை. பிஸ்கற் இருக்கு. வந்து சாப்பிட்டுவிட்டுப் போ பிள்ளை.” கையில் பிஸ்கற் பொதியுடன் வாசலில் நின்றிருந்தார் பெரியையா.

“எனக்கு நேரம் போயிட்டுது” கூறிக்கொண்டே அவள் விரைந்து வெளியேறினாள். ஏதோ ஒரு ஆபத்திலிருந்து தான் தப்பி விட்டதான உணர்வு. பாடசாலையிலிருக்கும் போதும் உள்ளுக்குள் புரியாததான ஒரு நடுக்கம். அது அகலவே மறுத்தது. வீட்டுக்குப் போனதிலிருந்து எப்போது அம்மா வருவாள் என எதிர்பார்த்திருந்தாள். அம்மா வந்து தன் வேலை களைக் கவனித்து ஓரளவு ஓய்வு கண்டபோது நடந்தவற்றை அவள் மெல்ல மெல்லக் கூறினாள். மரகதம் கை வேலையை நிறுத்திவிட்டு மகளையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஆபத்தொன்று மகளை நெருங்குவது அவளுக்கு விளங்கியது. எதை எப்படி சொல்வது என்பது புலப்பட மறுத்துவிட திகைத்துப் போயிருந்தாள். சொல்லி முடித்துவிட்டு சித்திரா, அம்மாவின் பதிலை எதிர்நோக்கி அமைதியாகக் காத்திருந்தாள்.

“பெரியையா நினைச்சது நடக்காட்டால் சாம்பலாக்கிப் போடுவர்.”

அவள் தனக்குத்தானே சொல்லிக்கொண்டாளா? மகளுக்குக் கூறினாளா? ஆனால் அது நிச்சயம் நடைபெறும் என்று அவள் கருதிய ஒன்று. அன்றைய நாள் முழுவதும் ஏக்கத்துடன் காத்துக் கிடந்த சித்திராவின் மனத்தினுள் அம்மாவின் வார்த்தைகள் இறங்கி ஆழமாகப் பதிந்தன. அம்மா இப்படிச் சொல்வதால் இது ஏதோ மிகுந்த பிரச்சனை யான விடயம் என்பதையும் விளங்கிக் கொண்டாள். கலை வந்து கூறியது போல் சில சொற்களை உதிர்த்த மரகதம் மௌனமாகிப் போயிருந்தாள். சித்திரா அம்மாவின் அடுத்த வார்த்தைக்காகக் காத்திருந்தாள்

“இனி என்ன செய்யப் போறாய்?”

சிறிது நேரத்தால் சுயநிலைக்கு வந்தவளாக மரகதம் மகளிடம் கேட்டாள்.

“எனக்குத் தெரியேல்லை அம்மா.” சிந்தனையுடன் பதிலளித்தாள் மகள்.

“நீ சின்னப்பிள்ளை. உனக்கு விளங்காது. நான் சொல்லுறதைக் கேள். நாளைக் காலையிலை விடியவும் குஞ்சம்மா வீட்டிலை போயிரு. நடந்த கதையொண்டும் அவைக்குத் தேவையில்லை. நான் ஆசுப் பத்திரிக்கு மருந்தெடுக்க போறன் எண்டு சொல்லிப்போட்டுப் போறன். என்ரை சுகத்தைப் பாத்துத்தான் பள்ளிக்குப் போறதெண்டு குஞ்சம்மா வீட்டாருக்குச் சொல்லு. வெளியிலை தலை காட்டாதை. அங்கை வாறவை யின்ரை கண்ணிலை உன்ரை தலைக் கறுப்புத் தெரியாமல் இருந்துகொள்.”

அம்மா ஏன் இப்படிச் சொன்னாள்? அவளுடைய திட்டம் என்ன? பெரியையா ஏன் அப்படி நடந்துகொண்டார்? அவரைப் பற்றி அம்மா சொன்னதன் கருத்து என்ன?

இரவு முழுவதும் யோசித்தும் சித்திராவுக்கு எதுவும் புரியவு மில்லை. உறக்கம் வரவுமில்லை. அதிகாலையில் இருள் கலையுமுன் மரகதம் எழுந்துவிட்டாள். இரவு நாகமுத்தன் வீட்டிற்கு வராதது அவளுக்கு வாய்ப்பாக அமைந்து விட்டது. தேநீர் தயாரித்து சித்திராவுக்கும் கொடுத்து தானும் குடித்துவிட்டு, மகளை அழைத்துக்கொண்டு குஞ்சம்மா வீட்டிற்குப் புறப்பட்டாள். இருள் அவர்களை மறைத்துக்கொண்டது.

மரகதத்தின் சிறியதாயின் மகள்தான் சித்திரா “குஞ்சம்மா” என அழைக்கும் பாக்கியம். அவளது வீடு அரை மைல் தொலைவிலிருந்தது. திட்டமிட்டபடியே பாக்கியம் வீட்டில் சித்திராவை விட்டுவிட்டு பேருந்துத் தரிப்பிடத்திற்கு மரகதம் போய்ச் சேர்ந்தாள். அவள் எதிர்பார்த்தவாறே காலை ஐந்துமணி பேருந்து சிறிது நேரத்தில் வந்து சேர்ந்தது.

மதியம் கடந்து சென்ற பின் மரகதம், பாக்கியத்தின் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். உணவு உண்ணாது சித்திரா அம்மாவுக்காகக் காத்திருந்தாள். மகளை அழைத்துச் செல்ல முற்பட்ட மரகதத்தையும் சித்திராவையும் வற்புறுத்தி மதிய உணவு உண்ணச் செய்தாள் பாக்கியம். சாப்பிட்டதுமே மகளையும் கூட்டிக்கொண்டு அவசர அவசரமாகப் புறப்பட்டு விட்டாள் மரகதம். அவள் வீட்டுக்குப் போகாது, பேருந்து தரிப்பிடத்திற்கு மகளை அழைத்துச் சென்றாள்.

“எங்கை அம்மா போறம்?”

பேருந்தில் ஏறி அமர்ந்த பின்னர்தான் சித்திரா தாயிடம் அந்தக் கேள்வியைக் கேட்டாள். நேற்றிலிருந்து நடப்பவை அனைத்தையும்

மீண்டும் மீண்டும் கணம் கணமாக நினைவுபடுத்திப் பார்த்தாலும் குழப்பம் ஒன்றுதான் மேலே திரண்டெழுந்து நின்றது. ஏதோ விளங்குவது போலிருந்தாலும் எதுவுமே புரியவில்லை என்பதுதான் உண்மை.

மரகதம் சுற்றுச்சூழலை நோட்டம் விட்டாள். சுற்றிவர மனிதத் தலைகள். அவற்றின் காதுகளும் கண்களும் அவளது பதிலைப் பொறுக்கி யெடுத்து மூளையுள் பட்டம் கட்டி பறக்கவிடத் தயாராக இருந்தன. அவள் சைகை மூலம் மகளின் பேச்சைத் தடை செய்தாள். மௌனமாகவே அவர் களின் பயணம் தொடர்ந்தது. இருள் சூழ்வதற்கு சிறிது நேரம் இருக்கும் போது அவர்கள் ஓரிடத்தில் பேருந்திலிருந்து இறங்கி, குச்சொழுங்கை யொன்றில் இருந்த வீட்டின் முன் போய் நின்றார்கள். மிகுசுவை நிறுவனம் என்ற பெயர்ப் பலகை அங்கே பொருத்தப்பட்டிருந்தது. மரகதம் வீட்டின் கதவைத் தட்டினாள். உள்ளே நிசப்தத்தின் ஆட்சி நிலவியது. அவள் ஒருவித கலவரத்துடன் மீண்டும் கதவைத் தட்டினாள்.

அவள் அன்று முழுவதும் பட்ட பாடெல்லாம் பலனற்றுப் போய் விடுமோ?

“ஆரது?”

உள்ளிருந்து மெலிதாக ஒரு குரல். அது நிம்மதியை மரகதத்திடம் அழைத்து வந்தது. கதவைத் திறந்த உருவம் குரலைப் போலவே மெலிந்ததாக இருந்தது. சித்திரா முன்பின் பார்த்திராத ஒரு பெண். தலை நரைத்து வலுவிழந்து முதுமையும் நோயும் ஆட்கொண்ட கோலத்தில் அந்தப் பெண் நின்றிருந்தார்.

“நான் மரகதம் வந்திருக்கிறேன்மா.”

சித்திரா அந்த மாதைப் பார்த்த வேளையில் அவரது பார்வையும் இவள் மேல் பரவி அளவெடுத்தது.

“உள்ளுக்கு வாங்கோ”

அவரின் பின்னே இவர்களும் உள்ளே சென்றனர். நடுத்தரமான வீடு. வரவேற்பு அறை நாற்காலிகளில் அவர்களை அமருமாறு கூறியபோது சித்திராவுள் எழுந்த வியப்பு அநதப் பெண்ணை விஸ்வரூபங் கொள்ளச் செய்தது. அவர்களின் அருகிலிருந்த மற்றொரு நாற்காலியில் அவரும் அமர்ந்து கொண்டார். அவரது முகத்தில் நிறைந்திருந்த அன்பும் அருளும் உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கிறது என சித்திரா எண்ணினாள்.

“இதுதான் உன் மகளா?”

என மரகதத்திடம் கேட்டவாறே, சித்திராவின் பக்கம் திரும்பி “உன்னுடைய பேர் என்ன பிள்ளை?” என்று கேட்டார் அந்தப் பெண்.

“சித்திரா”

எழுந்தவாறே பதிலளித்தாள் சித்திரா.

“இரும் இருந்து கொண்டு கதைக்கலாம். நான் உன்னுடைய அம்மம்மா மாதிரி. பயப்படத் தேவையில்லை. இருமெண்டு சொல்லுற னெல்லே”

சித்திரா தாயைப் பார்த்தாள். இருக்கும்படி மரகதமும் சொல்லவே அவள் தயக்கத்துடன் அமர்ந்தாள்.

“அம்மம்மா சொல்லுற வேலையள் எல்லாம் செய்ய வேணும். இனி அவதான் உனக்கு அம்மா அப்பா எல்லாம். எக்காரணங் கொண்டும் எங்கடை ஊர்ப்பக்கம் வந்திடாதை. பெரியையாவின்ரை கண்ணிலை பட்டியோ உன்னை முடிச்சுப்போடுவர்.”

தாயின் அறிவுரை அவளுக்கு விளங்கியும் விளங்காமலும் இருந்தது. அவளுடைய மனதினுள் ஆயிரம் கேள்விகள் அணிவகுத்து நின்றன. முதலாவது வினா அவள் இனி பள்ளிக்கூடம் போக முடியுமா? என்பதுதான். சித்திராவின் ஆர்வம் வினாவை வெளியே இழுத்தெடுத்தது. மரகதத்தின் கண்கள் கலங்கின.

“என்னாலை முடிஞ்சவரைக்கும் பாடுபட்டனடா. இலவசக்கல்வி எண்டு தான் சொல்லுறாங்கள். ஆனால் அதைக் கிடைக்காமல் செய்ய எத்தினையோ கையள் இருக்கடா.” அம்மா சொல்லிய தத்துவம் விளங்கா விட்டாலும் தன் கல்வி பறி போய்விட்டதென்பது மட்டும் அவளுக்கு விளங்கியது.

“இருட்டுதம்மா. நான் போகவேணும். இங்கை இவளை விட்டது ஒருதருக்கும் தெரியக்கூடாது. அந்தாள் சும்மா விடுற ஆளில்லை. இவளிலை கண் வைச்சிட்டுது. என்ரை பிள்ளையை உங்களை நம்பித்தானம்மா விட்டிட்டுப் போறன்.”

மரகதம் அப்பெண்ணின் காலில் விழுந்து வணங்கினாள்.

“இதென்ன காரியம் செய்யிறாய்?”

பதறி எழுந்த அவர் “நீ ஒன்றுக்கும் யோசியாதை. அவளை என்ரை பேரப்பிள்ளையாய் வைச்சிருப்பன்” என்றபடி மரகதத்தின் கண்ணீரைத் துடைத்து விட்டார். மரகதம் மகளின் பக்கம் திரும்பி அவளைக் கட்டி யணைத்து முத்தமிட்டாள். அம்மாவின் கால்களை இறுகக் கட்டிக் கொண்ட சித்திரா வீறிட்டழுதாள்.

“என்னை விட்டிட்டுப் போறீங்களா அம்மா? வேண்டாம். போக வேண்டாம். நானும் உங்களோடை வாறன். பள்ளிக்கூடம் போகாம

இருக்கிறன். பெரியையா வீட்டை போகாம இருக்கிறன்.”

“நீ போகாட்டிலும் அந்தாள் தேடி அலையுமே”

“ஏனம்மா?”

“நேரம் போகுதடா. நான் போக வேணும்.” விளக்கங் கொடுக்கத் தயங்கி பேச்சை திசை திருப்பினாள் மரகதம்.

“நாளைக்கு வருவீங்களே?.”

“நாளைக்கு வரமாட்டன். வாற கிழமை வாறன்.”

பொய் சொல்ல மனமின்றி, உண்மையைக் கூறி மகளைச் சமாதானஞ் செய்வது கடினமென்ற நிலையில் எதையோ சொல்லி மகளின் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு வெளியேறிச் சென்றாள் மரகதம். இருளில் மறைந்து விட்ட தாய் சென்ற திசையையே பார்த்துக் கொண்டு நின்றாள் சித்திரா. சிறிது நேரம் அப்படியே நிற்கவிட்ட அம்மம்மா அவளை ஆதரவாக அணைத்து உள்ளே அழைத்துச் சென்றார்.

எவ்வளவு சமாதானப்படுத்தியும் சித்திரா அழுது கொண்டே இருந்தாள். தன் கட்டிலின் அருகிலேயே சித்திராவிற்கும் ஒரு கட்டிலைப் போட்டு படுக்க வைத்தார் அம்மம்மா. வெறும் தரையிலோ அன்றி பழந்துணியின் மேலோ பாயிலோதான் அவள் இதுவரை படுத்திருக்கிறாள். இன்று இப்படி மெத்தையும் தலையணையுமாய் படுக்கை அமைந்தும் அது அவளின் புலனுணர்விற்குத் தென்படவில்லை. சாப்பிடவும் மறுத்துவிட்டு அழுது கொண்டே படுத்திருந்தாள். அம்மம்மாவாலும் உறங்க இயல வில்லை. இப்படியே இரவு கழிந்தது.

# 4

நீண்ட நினைவுத் தொடரை காட்சிப்படுத்தி அது தந்த உணர்ச்சிகளின் வசப்பட்டு சித்திரா கண்கள் கலங்க அமர்ந்திருந்தாள். அம்மாவின் ஞாபகம் மனம் முழுவதும் வியாபித்துக்கொண்டது. அம்மா வின் ஆவல் நிறைவேறிய நிறைவு அம்மாவை நிச்சயம் சந்தோசப்பட வைத்திருக்கும். ஆனால் அம்மாவுக்கு என்ன ஆயிற்று? இந்த இடத்தில் மட்டுமல்ல. இன்னும் பல்வேறு காலங்களிலும் நடந்த நிகழ்வுகளை, சிலர் அவ்வப்போது தெரிவித்தவற்றை வைத்து ஊகிக்கவே அவளால் முடிகிறது.

அம்மாவை சித்திரா பிரிந்த அன்றைய மிகுதி நாள் நிகழ்வுகளும் அத்தகையனவே. வேதனைப் பெருமூச்சு ஒன்றுடன் கலந்து அந்தக் கற்பனை எழுந்து வந்தது.

மரகதம், வேறு வழி தெரியாது மகளை விட்டு வந்தாலும், பிரிவை அவளாலும் தாங்க இயலவில்லை. மீண்டும் எப்போது சித்திராவை காணமுடியும் என்பதுகூட நிச்சயிக்க இயலாத நிலையில் மகளைப் பிரிய நேர்ந்தது வேதனையில் வேக வைத்தாலும் அதையாவது செய்ய முடிந்ததே என்ற ஆறுதலும் வெயிலினிடையே வீசிய காற்றாக ஆறுதலளித்தது

சித்திரா சிறுபிள்ளைத் தனமாக உட்கிடை புரியாமல் சம்பவத்தைக் கூறினாலும் மரகதத்துக்கு அதன் ஆழ, அகலம் நன்கு விளங்கியது. தன் மகளின் கழுத்தில் மரணத்தின் கரம் விழுந்து விட்டது. அந்த மனுசனிடம் அகப்பட்டால் சும்மா விடுமா? சுவைத்து கசக்கி சக்கையாய் பார்க்கச் சகிக்காத சவமாக, அவளை எப்படி மீட்டெடுப்பது என்ற யோசனையில் மூழ்கித் தவித்தபோதுதான் கருணா அம்மாவின் முகம் வந்து நின்றது.

கருணா அம்மாவின் தாயார் மரகதத்தின் ஊரைச் சேர்ந்தவர். இங்கு வாழ்ந்தபோது மரகதத்தின் அம்மா அவர்களுக்கு உதவியாக வேலைகள் செய்வாள். அதனால் அவர்கள் வேறூர் சென்றாலும் மரகதத்தின் தாய் அவர்களின் வீட்டிற்குச் சென்று உதவிகள் செய்து வந்தாள். தாயின் பின் இவளும் சென்று வந்தாள். அப்படிச் சென்றிருந்த போதுதான் தன் “மிகுசுவை நிறுவன” வேலைகளில் உதவிக்கு ஒரு பெண்

வேண்டும் என கருணா அம்மா கேட்டிருந்தார். சித்திராவை கருணா அம்மாவுக்கு உதவி செய்ய அனுப்பினால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. அவளின் கல்வி கற்கும் ஆசை நிறைவேறாது போகும். அதைவிட சித்திரா தப்பிப் பிழைக்க வேண்டியது முக்கியம். இவளை அங்கு விட முடிவு செய்து அம்மாவிடம் வந்தபோது அவரும் சம்மதித்தார். மீண்டும் போய் மகளை அழைத்து வந்து அம்மாவிடம் ஒப்படைத்துவிட்டு வீடு திரும்பினாள். அது மனதில் ஓர் ஆறுதலை ஏற்படுத்தியிருந்தது மரகதம். தன் வீட்டு முற்றத்தில் கால் வைத்த பொழுது இரவு நெடுநேரம் ஆகியிருந்தது. நாகமுத்தன் வந்திருக்கக் கூடாது என்ற பிரார்த்தனையுடன் வந்தவளுக்கு வாசலிலே ஏமாற்றம் காத்திருந்தது.

"எங்கையடி படுத்துக் கிடந்திட்டு வாறாய்?"

போதையேறிய நாகமுத்தனின் கோபக் குரல் அவளை வரவேற்றது. பதில் சொல்லி அவனுடைய கோபத்தை மேலும் உச்சத்திற்கு ஏற்றாது மரகதம் மௌனமாக நின்றாள். உள்ளே போக முடியாது அவன் வாசலில் குந்தியிருந்ததால் அவள் வெளிப் புறமாகவே நிற்கவேண்டியதாயிற்று. "என்னடி" எனத் தொடங்கி காது கூச அவன் கொட்டிய வார்த்தைகளை அவள் வழமை போலவே பொறுத்துக் கொண்டாள்.

"அவளெங்கை உன்ரை வாரிசு? அவளையும் கொண்டு போய் பழக்குறியோ? என்னடி? நான் கத்திறது கேக்கேல்லையே? உனக்கென்ன காது செவிடோ? அல்லது வாய் ஊமையோ? வாயைத் திறவனடி"

எட்டி அவளின் கொண்டையைப் பிடித்து ஒரே இழுவையில் தன்னருகே கொண்டுவந்து அடிக்க ஆரம்பித்தான். தாங்க முடியாத நிலையில் மரகதம் கதறத் தொடங்கினாள்.

"பெரியையா வீட்டையும் போகேல்லையாம். எங்கையடி போட்டாள்?"

அவனது உறுமல், பெரியையா நன்றாக ஊற்றிக் கொடுத்து உருவேற்றி விட்டிருக்கிறார் என்பதை மரகதத்திற்குப் புரியவைத்தது. அவன் மிருகமாக மாறிக் கொண்டிருந்தான். அதைத் தவிர்க்க வழியறியாது அவள் தவித்தாள். வெறி கொண்ட அவன் திடீரென கைக்குக் கிட்டிய பெரிய தடியொன்றால் அவளின் தலையில் அடிக்க குருதி பீறிட்டுப் பெருக் கெடுத்தது. அவள் கதறக்கூட இயலா நிலையில் உணர்வடங்கி சரிந்தாள். வெறியடங்கா நிலையில் காலால் அவளை உதைத்து உருட்டினான் அவன். வழமையான சண்டைதானே என்று அயலும் அசட்டை செய்தது. முற்றத்து மண்ணில் ஏதேதோ புலம்பியவாறு நாகமுத்தன் வீழ்ந்து கிடந்தான். கையிலிருந்து நழுவிய தடியும் அவனருகே கிடந்தது.

இரவு விரைந்து விடிந்தது. நாகமுத்தனுக்குப் பெரியையா எதை ஊற்றிக் கொடுத்தாரோ தெரியவில்லை. முறுகலும் முணுமுணுப்புமாக மயக்கம் தெளியாமல் அவன் கிடந்தான். மரகதம் உணவு போட்டு வளர்த்த நாய் அவளை மணந்து பார்த்து கீச்சுக்கீச்சென ஒருவித சத்தம் எழுப்புவதும் குரைத்துக் கொண்டே படலைக்கு ஓடுவதுமாக தவித்துக் கொண்டு திரிந்தது. மரகதத்தின் உயிர் பிரிந்து எறும்புகளும் இலையான்களும் மொய்க்கத் தொடங்கியிருந்தன.

பெண்ணுக்கு வாழ்க்கை முழுவதும் துணையாகவும் பாதுகாப்பாக வும் இருப்பதற்கு ஏற்ற ஓர் இளைஞனை தெரிவு செய்து திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று எண்ணியே திருமணம் செய்து வைக்கின்றனர். காப்பவனாக இருப்பான் என்று நம்பி கட்டிக்கொண்ட கணவன் காலனாகி யிருந்தான். அவள் திருமணமாகாமலே இருந்திருந்தால் நன்றாக வாழ்ந்திருந்திருப்பாள்.

கடைக்கு அவசரமாகப் போய்க்கொண்டிருந்த லீலா நாகமுத்தன் வீட்டை அண்மிக்கவும் நாய் ஓடிவந்து அவளுடைய காலில் விழுந்து மறித்தது. “மரகதம் சாப்பாடு தரேல்லையே? பசிக்குதே?” எனக் கேட்டவாறு அதைக் கடந்து போக முயன்ற லீலாவின் சட்டையைக் கௌவி இழுத்து அது ஊளையிட்டது. நாயின் அசாதாரண செயல்கள் லீலாவின் மூளையுள் ஐய ஊற்றொன்றைச் சுரக்கச் செய்தன. கடைக்குச் செல்லும் அவசரத்தை யும் அவசியத்தையும் அவ்விடத்திலேயே நிறுத்தி வைத்து விட்டு அவை லீலாவை நாகமுத்தனின் படலையைத் திறக்க வைத்தன. காலடி எடுத்து வைத்ததுமே உள்ளங்காலிலிருந்து உச்சிக்கு மின்சாரம் பாய்ந்தது. கால்கள் மரகதத்தை நோக்கி ஓடின. “இனி நீ என்ன செய்தும் பலனிருக்காது” என அவளில் ஊர்ந்தவை லீலாவுக்கு எடுத்துக் கூறின.

“ஐயோ! ஐயோ! இஞ்சை ஓடி வாருங்கோ. மரகதத்தைச் சாக் கொல்லிப்போட்டாங்கள்”

லீலாவின் அவலக் குரலைக் கேட்டவர்கள் எல்லோரும் அங்கு வந்து குவிந்தார்கள். அவர்களின் கலகலப்பு நாகமுத்தனுக்கு விழிப்பைக் கொண்டு வந்து சேர்த்தது. என்ன நடக்கிறது? என்ன நடந்தது என்ற எதையும் புரிந்துகொள்ள இயலாது அவனுக்கு மண்டை கனத்தது. அவன் மெல்ல எழுந்து உட்கார்ந்தான். பெரியையா வீட்டிற்குப் போனதும் அவர் இருக்க வைத்து போத்தலெடுத்து ஊற்றிக் குடிக்கும்படி தந்ததும் சித்திராவைப் பற்றி குறை கூறியதும் நினைவிற்கு வந்தன. பின்னர் நடந்தவை எதுவும் தெளிவற்றுக் குழப்பமாக… எதுவும் புரியாமல் சுற்றிவரப் பார்த்தான்.

வந்து கூடியவர்களில் பலர் வேடிக்கை பார்த்துக்கொண்டு

நின்றாலும் சிலர் துரிதமாகச் செயற்பட்டனர். அவர்களால் நடந்ததை ஊகிக்க முடிந்தது. இருவர் சைக்கிளில் காவல் நிலையத்திற்கு முறையிடச் சென்றனர். அக்காலத்தில் வீடுகளிற்கூட தொலைபேசி வசதி கிடையாது. சிலர் நாகமுத்தனைச் சூழ நின்று நடந்தவை பற்றி விசாரித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அவன் வேறெங்கும் ஓடிவிடாது அங்கேயே அவனை இருத்தி வைத்திருப்பதில் கருத்தாயிருந்தனர். துவைத்துக் காய விட்டிருந்த சேலையொன்றைக் கொண்டு வந்து ஒருவன் மரகதத்தின் சடலத்தை மூடினான்.

சுமார் மூன்று நான்கு மணித்தியாலங்களின் பின்னர் காவல்துறை யினர் வந்து சேர்ந்தனர். அவர்கள் வழமையான விசாரணைகளை நடத்தி சடலத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கே கிடந்த தடியைக் கவனமாகக் கை படாது எடுத்துக் கொண்டனர். நாகமுத்தன் விலங்கிடப்பட்டு ஜீப்பில் ஏற்றப்பட்டான

கருணா, சித்திராவிடம் மிகுந்த அன்பு காட்டினார். அவரின் நிர்வகிப்பில் ஐந்து பெண்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். ஒரே வேலையை அவர்கள் செய்வதில்லை. உணவுப் பண்டங்கள், பலகார வகைகள் எல்லாவற்றையும் தரமாகச் செய்தார்கள். திருமணம், பிறந்தநாள் போன்ற பல்வேறு விருந்துபசார நிகழ்ச்சிகளுக்கு அவரவர் விரும்பும் பலகார வகைகளை, தேவையான அளவு செய்து கொடுப்பார்கள். இட்லி, தோசை, அப்பம், இடியப்பம் போன்ற உணவு வகைகளையும் இதே போல் முன்னேற்பாடு செய்து பெற்றுக்கொள்ளலாம். நியாயமான விலை. சில கடைகளுக்கு நாடோறும் உணவுப் பொருட்களைச் செய்து விநியோகித் தார்கள். வேப்பம்பூ காலத்தில் வடகம், பனம்பழ காலத்தில் பனாட்டு என்று காலங் கருதி வற்றல், ஊறுகாய் வகைகளையும் செய்வார்கள்.

வியாபாரம் விரிவாக்கம் பெறுகையில் கருணாவை நோய்கள் பீடிக்கத் தொடங்கின. தன்னுடனிருந்து சகல வேலைகளையும் நிர்வகிக்க நம்பகமான ஒருவர் கருணாவிற்குத் தேவைப்பட்டார். அது குறித்தே மரகதத்திடமும் சொல்லி வைத்திருந்தார் கருணா.

அவர் செய்த தொழிலுக்கு சரியான நிர்வகிப்பு அத்தியாவசியமாக இருந்தது. ஒரே பொருளை பெருமளவில் செய்து ஒரே சீரில் விநியோகிப் பதற்கே சிறந்த முகாமைத்துவம் தேவைப்படுகிறது. இது அப்படியல்ல. மாத இறுதியில் தேவையான பொருளுக்கு மாதத் தொடக்கத்திலேயே ஒருவர் கோரிக்கை கொடுத்திருப்பார். அது சிறிது காலத்திற்குள்ளே பழுதடையும் பொருளாக இருக்கும். மற்றொருவர் மாத நடுப் பகுதியில் வந்து நான்கு நாட்களுக்கு இடையில் வேறொரு பண்டம் வேண்டும் என்று கேட்பார். இப்படியான, மிகக் கவனமெடுத்து செயற்படவேண்டிய தொழில்.

வாடிக்கையாளர் அதிகரிக்க அதிகரிக்க தொழிலை முன்னேற்ற சிறந்த நிர்வகிப்பு தேவைப்பட்டது.

சித்திரா திறமைசாலி. அத்துடன் கருணா ஏற்கனவே அதற்கான பதிவு முறைகள், செயல் முறைகள் போன்றவற்றை உருவாக்கி நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்ததால் அவற்றை இலகுவில் விளங்கிக் கொண்டு பணியாற்றத் தொடங்கினாள்.

தொடராக வந்துகொண்டிருக்கும் வேலைகளும் அம்மம்மாவின் அன்பும் சித்திராவை தம்முள் மூழ்க வைத்திருந்தாலும் அம்மாவின் அணைப்பிற்கான ஏக்கம் அவளுள் சுரந்த வண்ணமிருந்தது.

ஏன் அம்மா ஒரு மாதத்திற்கும் மேலாக வரவில்லை?

இந்தக் கேள்வி எழ ஆரம்பித்த வேளை இதுவரை அவளுக்கு ஆறுதல் கூறிவந்த கருணாவிற்கும் மனதினுள் கலவரம் குவியத் தொடங்கியது.

இவ்வளவு காலம் வராமல் இருக்க மாட்டாளே! மகளைப் பார்க்க ஓடி வந்திருப்பாளே! ஒருவேளை தான் வந்து மகளின் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுக்க நேர்ந்துவிடும் என்று பயந்து வராமலிருக்கிறாளோ?

கருணாவும் காரணம் தேடி குழம்பினார். சித்திரா இப்போது தனிமையிலிருக்கும் வேளைகளில் அழுது கொண்டிருந்தாள். அவர்களின் தவிப்பை வேதனையாக மாற்றுவதற்கு அன்று காலம் கூடிவந்தது.

கருணா வீட்டு முன்னறை ஓர் அலுவலகம் போன்று இயங்கிக் கொண்டிருந்தது. ஒரு வாடிக்கையாளருக்கு பொருட்களை சரி பார்த்துக் கொடுத்துவிட்டு நிமிர்ந்த சித்திரா வாசலருகே நின்றவரைப் பார்த்து திகைத்து விட்டாள். அவர் துளசிதாசன் சேர். அவளை அங்கே எதிர்பார்க்க வில்லை என்பதை அவரது பார்வையும் உணர்த்தியது. கருணா இருந்த இடத்தை நோக்கி அவர் சென்றார். ஒரு பெண் அவரைப் பின் தொடர்ந்தாள். கருணாவின் முன் ஒருவர் அமர்வதற்கான இருக்கை மட்டுமே இருந்தது. சித்திரா, நாற்காலி ஒன்றை எடுத்துக்கொண்டு சென்று அவர்கள் இருப்ப தற்கு வசதியாக வைத்தவாறு “வணக்கம் சேர்” என புன்முறுவலுடனும் பணிவுடனும் கூறினாள்.

“வணக்கம் சித்திரா. நீர் இங்கேயா இருக்கிறீர்? பெரிய சந்தோசம். உமக்கு என்ன நடந்துதோ என்று பயந்து போனன். நல்ல இடத்திலே வந்து சேர்ந்திட்டீர்.”

“உங்களுக்கு இவளைத் தெரியுமா? நல்லதாய்ப் போச்சு”

துளசிதாசனும் சித்திராவும் உரையாடுவதைக் கண்டு கருணா

துளசிதாசனிடம் கேட்டார்.

“என்னுடைய மாணவிதானே. தாயும் தகப்பனும் இப்பிடிப் போக இவளுக்கு என்ன நடந்துதோ என்றதுதான் எல்லாருக்கும் கவலையா யிருந்தது.”

அவர் கூறியதிலிருந்து ஏதோ நடந்திருக்கிறது என்பது கருணா, சித்திரா இருவருக்கும் விளங்கியது.

“வந்த காரியத்தைப் பார்த்திட்டு மற்றதுகளைக் கதைப்பம்”

நல்ல விடயமாக இருக்காது போன்றிருந்ததால் சித்திராவின் முன் கதைப்பதைத் தவிர்த்தார் கருணா. அவர் தன்னை அங்கிருந்து அகற்ற முனைகிறார் என்பதைப் புரிந்து கொண்டு குழப்பத்துடன் தனது மேசைக்கு சித்திரா திரும்பினாள்.

“இவள்தானா நீங்கள் சொன்ன பிள்ளை?”

“ஓமம்மா. வேலைக்கு வேறு பிள்ளை வந்துவிட்டுதோ?”

“இவள் இங்கை இருக்கலாம். வேலையும் செய்யலாம். அது சரி. குழந்தை ஒண்டு இருக்கெண்டு சொன்னனீங்கள்.”

கருணாவின் கடைசி வசனம் ஒருவித அழுத்தத்துடன் இழுபட்டு வெளி வந்தது.

“உங்களோடை கதைத்த பின் கூட்டிவருவமென்று வீட்டிலே விட்டுவிட்டு வந்திருக்கிறா. பிள்ளையைக் கண்டதும் ஒவ்வொருதர் ஒவ்வொரு கதை. சில வேளை பத்மா அழவும் தொடங்கிவிடும். அதுதான்...”

“அப்பிடியெண்டால் திரும்ப போய்த்தான் வரவேணும்”

“ஓமம்மா” என துளசிதாசன் பதிலிறுக்கவும் மனதினுள் துருத்திக் கொண்டு வெளியே குதிக்கத் தயாராய் நின்ற வினாவை வெளிவர கருணா அனுமதித்தார்.

“சித்திராவை உங்களின்ரை மாணவி எண்டு சொன்னீங்கள். அப்படியெண்டால் சித்திராவுடைய தாய், தகப்பனைத் தெரியுமோ?”

“நான்தானே வகுப்பாசிரியர். இடைக்கிடை கூப்பிட்டு கதைப்பேன். பிள்ளை நல்ல திறமைசாலி. வீட்டுச் சூழ்நிலை சரியில்லை.”

“இப்ப தாயைச் சந்திக்க முடியுமோ?”

“என்ன இப்படிக் கேட்கிறீங்க? சித்திரா உங்களோடு இருக்கிறாள். ஒன்றும் தெரியாத மாதிரிக் கேட்கிறீங்க!”

திகைப்பு அவரது குரலை ஆக்கிரமித்திருந்தது. அவர் என்ன சொல்லப்போகிறாரோ என்ற பதற்றம் உள்ளே வியாபிக்க “எனக்கு ஒன்றும்

தெரியாதே. என்ன நடந்தது?" எனக் கருணா கேட்டார்.

"அவளுடைய தகப்பன், தாயைக் கொலை செய்து போட்டான்"

"சித்திராவின்ரை தாயையோ?"

கருணா சிறிதும் எதிர்பார்க்காத தகவலால் அதிர்ந்து போய்க் கேட்டார்.

"ஓமோம். குடிச்சுப்போட்டு வந்து அடித்திருக்கிறான். மண்டை யிலை பட்டிருக்கு. இரவு நடந்தது. வழமையாய் சண்டை நடக்கிறதாலை ஒருதரும் போய்ப் பார்க்கேல்லை. ஆள் முடிஞ்சு போச்சு."

கருணாவின் கண்கள் அவரது ஏவுதலின்றியே சித்திராவிடம் சென்றன. "இந்தப் பிள்ளைக்கு இதை எப்பிடிச் சொல்லப்போறன்? என்ன மாதிரி அவளைத் தேற்றப் போறன்!" என்றவாறே மனமும் ஓடிச் சென்று அவளைச் சுற்றியது. "எனக்கு நடந்ததொண்டும் தெரியாது மாஸ்ரர்" என வாய் புலம்பியது.

"அவளைக் கொண்டு வந்து விட்டவை சொல்லவில்லையா? சித்திராவுக்குத் தெரியாதா?"

துளசிதாசன் கேள்வி மேல் கேள்வியாக எடுத்து வைத்தார்.

"அவளுக்கும் தெரியாது. அவளைக் கொண்டு வந்து விட்டதே தாய்தான். அதுக்குப் பிறகுதான் இது நடந்திருக்க வேணும். அந்தப் பிள்ளை, அம்மா ஏன் வரேல்லை எண்டு தேடிக்கொண்டிருக்கு. அந்தப் பிள்ளைக்கு எப்பிடி இதைச் சொல்லுறது? வரேல்லை எண்டதுக்கே அழுது கொண்டிருக்கிறாள்."

கருணா தன் வேதனையில் சிறிய அளவை வெளியே எடுத்து வைத்து கண் கலங்க நின்றார்.

அதைக் கேட்ட துளசிதாசனது மனமும் வேதனைப்பட்டது.

"கடவுள் ஏதோ வழி காட்டுவார். இந்தப் பிள்ளை வந்தால் அவளுக்குக் கொஞ்சம் ஆறுதலாயிருக்கும். நீங்கள் அதுக்கானதைப் பாருங்கோ."

தன்னை சில மணித் துளிகளுள் நிதானப்படுத்திக்கொண்ட கருணாவைப் பார்த்து வியந்தவாறு துளசிதாசன் பத்மாவுடன் சித்திராவின் பக்கம் திரும்பாமலே புறப்பட்டார்.

# 5

துளசிதாசன், பத்மாவுடனும் குழந்தை கவிதாவுடனும் கருணா வீட்டிற்கு வந்து சேர்ந்த வேளையில் அங்கு புயல் சூறாவளியாகி ஓய்வு கண்டு கொண்டிருந்தது. சித்திரா, கதறுவதிலிருந்து விம்மலுக்கு வந்திருந் தாள். ஓர் அறை பத்மாவிற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பத்மாவை அவ்வறைக்கு அழைத்துச் சென்று, தேவையான உதவிகளைச் செய்யும் பொறுப்பை சித்திராவிடம் ஒப்படைத்தார் கருணா.

“மாஸ்ரர், எனக்கு ஒரு உதவி செய்வீங்களா?”

அவர்கள் போகும்வரை பார்த்திருந்த கருணா துளசிதாசனிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்தார்.

“என்னம்மா? என்ன செய்யவேண்டும்? என்னால் இயலுமான தென்றால் செய்வேன். உங்களுக்குச் செய்யாமல்? நீங்கள் எவ்வளவு உதவி செய்கிறீர்கள்!”

“அதுகளை விடுங்கோ மாஸ்ரர். சித்திராவுக்கு படிக்க வேணும் எண்டு ஆசை. தாயும் படிப்பிக்கத்தான் விரும்பினவள். அதை எப்பிடியும் நிறைவேற்றுவம் எண்டு யோசிக்கிறன். அவளின்ரை பாடசாலை விடுகைப் பத்திரம் இருந்தால்தான் இங்கை ஒரு பள்ளிக்கூடத்திலை சேர்க்கலாம்.”

“அது எடுத்துத் தரலாம்”

“அதிலை ஒரு பிரச்சனை இருக்குது அவள் இங்கை இருக்கிற விசயம் ஒருதருக்கும் தெரியக்கூடாது.”

“ஓமோம். பொலிஸ்காரர் பாடசாலைக்கும் வந்தவைதான்”

“அதை விடவும் ஒரு காரணம் இருக்கு என்னெண்டு கேளா தேங்கோ.”

“நான் கேட்கவில்லை அம்மா. ஆனால் ஒரு மாதமளவிலை பொறுக்க வேண்டும். பிறின்சிபல் ஒரு நீண்ட விடுமுறையிலை போகப் போறார். அந்த நேரம் சரிவரலாம்”

“ஏதோ அவளுக்கு படிக்கிற பாக்கியம் இருந்தால் எல்லாம்

சரிவரும் நீங்கள் இருந்து மத்தியானம் சாப்பிட்டுப் போகலாம் மாஸ்ரர்."

"உங்களுக்கு ஏன் வீண் சிரமம். இப்ப வெளிக்கிட்டால் இரண்டு மணியளவிலே வீட்டுக்குப் போய் விடுவேன்."

கருணாவின் உபசரிப்பை துளசிதாசன் மறுத்தார். அந்த வேளையில் தேநீருடன் பத்மா வந்தாள். பின்னே கவிதாவைத் தூக்கியவாறு சித்திரா வந்தாள். அதைக் கண்ட கருணாவின் முகத்தில் மலர்வு பரவியது. அவர் எதிர்பார்த்ததும் இதையேதான். அவளது வேதனை வடிய கவிதா வுடன் நேரம் போவது வழியமைக்கும என்பது அவரது கணிப்பு. இவ்வளவு விரைவில் குழந்தை சித்திராவுடன் ஒட்டிவிடும் என்பதுதான் எதிர்பாராத ஒன்று.

"அதற்கிடையில் வீட்டுக்காரியாகி எனக்கு தேநீர் கொண்டு வருகிறாயே. சந்தோஷம் பத்மா" என மகிழ்ச்சி தெரிவித்தார் துளசிதாசன்.

"எங்கள் எல்லாருக்கும் தேநீர் தயாரித்தார்கள். உங்களுக்கும் அம்மாவுக்கும் கொடுக்கச் சொல்லி என்னிடம் தந்தார்கள்" என பத்மா காரணத்தைத் தெரிவித்தாள்

"இது பத்மாவுடைய வீடு தானே."

கருணா சிரித்துக் கொண்டே கூற, பத்மாவின் முகத்திலும் அச்சிரிப்பு கால் பதித்தது. பத்மா அங்கு காலூன்றி விடுவாள் என்ற கணிப்பு துளசிதாசனுள் நிம்மதியை உருவாக்கியது.

துளசிதாசன் பல கோணங்களிலும் சிந்தித்தே பத்மாவை கருணா வுடன் விடுவதற்கு முடிவெடுத்தார். கருணா தனக்கு உதவிக்கு ஒருவர் வேண்டும். "பெண்ணென்றால் நல்லது" என அவரைச் சந்தித்தபோது கேட்டிருந்தார். பத்மா படும் வேதனையை பார்த்தவேளையில் அவருக்கு கருணா கேட்டது நினைவிற்கு வந்தது. பத்மா அதனை விரும்புவாளா என்பதை முதலில் அறிய முனைந்தார்.

பத்மா உயர் தரம் வரை படித்திருந்தாள். கருணாவுடன் பணி செய்ய விரும்புவாளா? என்ற சந்தேகம் அவருக்கேற்பட்டது. ஆனால் அவள் சம்பளம் பார்த்து பதவிநிலை எல்லாம் பார்த்து வேலை தேடும் நிலையி லில்லையே. அவளது மனம் ஆறி தேறக்கூடிய ஒரு புகலிடம் அவளுக்குத் தேவைப்பட்டது. அதனாலேதான் அவர் வீட்டில் உதவிகள் செய்ய ஒப்புக் கொண்டாள். இப்போது ஊரிலிருக்கவியலாத பிரச்சனை. அதற்கு இது ஏற்ற இடமாக அவருக்குத் தோன்றியது.

"பத்மா, உன்னுடைய பிரச்சனைகளெல்லாம் தெரியவராத தூர இடம். அம்மாவுக்கு உண்மைகளை சொல்லுவம். வேறை ஒருவருக்கும் சொல்லத் தேவையில்லை. அம்மாவுக்கு மறைக்கிறது பிழை. கேட்கிற

வைக்கு ஒரு புதுக் கதையைச் சொல்லலாம். அதோடு பழங்கதை உன்னைப் பாதிக்காது. வியாபாரப் பொருட்கள் உற்பத்தி வேலை. விருப்பமா என்டு யோசிச்சுச் சொல். அதுக்குப் பிறகுதான் அவவிடம் கேட்பன்”

துளசிதாசனுக்கு உடனடியாக எதையும் கூற பத்மாவிற்கும் இயல வில்லை. “யோசித்துச் சொல்கிறேன்” என அவகாசம் கேட்டுக்கொண்டு திரும்பி விட்டாள். முடிவெடுப்பதும் சிரமமாகவே இருந்தது. இந்தச் சூழலில் வாழ்வதைவிட நரகத்தில் வாழலாம் என்ற எண்ணம் பத்மாவிற்கு நெடுங் காலத்திற்கு முன்னரே தோன்றிவிட்டது. பெற்றோரைப் பிரிவதுதான் பெருந் துன்பமாக பயமுறுத்தி வந்தது. அவர்கள் அவளைப் பற்றிய கவலை யினாலேயே போய்ச் சேர்ந்து விட்டார்கள். அவளுக்கும் இறந்துவிட வேண்டும் போலிருக்கிறது. இப்போது அவளுடைய வாழ்க்கையைப் பற்றி கவலைப்பட்டுப் பயனில்லை. மகள் கவிதாவின் எதிர்காலம் பாதிக்கப் படக்கூடாது என்பதே பத்மாவின் பிரார்த்தனை. அக்குழந்தை மறுவற்ற வளாக வளர்வதற்கு தன்னால் இயன்றதைச் செய்ய வேண்டியதுதான் அவளுக்கிருக்கும் பிரதான கடமை.

அவள் எடுக்கப்போகும் முடிவினால் நிகழக் கூடியவை, அவற்றால் ஏற்படக்கூடிய நன்மைகள், தீமைகள் முதலிய பலவற்றையும் இரண்டு நாட்களாக சிந்தித்து, சிந்தித்து கருணாவுடன் போயிருந்து அங்கு பணியாற்றுவது என்ற முடிவிற்கு பத்மா வந்தாள்.

“எனக்கு ஒரு திறமையான பெண்பிள்ளை உதவிக்குக் கிடைக் கிறது பெரிய சந்தோஷம். அதோடு அந்தப் பிள்ளை இங்கேயே இருந்தால் இன்னும் நல்லது.”

பத்மா சம்மதித்ததும் கருணாவிடம் வந்து அவளைப் பற்றி விவரம் தெரிவித்த துளசிதாசனிடம் இப்படி தன் மகிழ்ச்சியை கருணா பகிர்ந்து கொண்டார். ஆனாலும் அவர் மேலும் உரையாடும்போது பத்மாவை அவர் பார்த்து பேசிய பின்னர் தீர்மானத்திற்கு வர விரும்புவது போலத் தோன்றியது. அந்த ஊகத்தின் அடிப்படையில் பத்மாவை அழைத்து வருவதாகக் கூறி துளசிதாசன் திரும்பினார்.

பத்மா அந்த இடத்திலேனும் நிம்மதியாக வாழவேண்டும் என்பதுதான் இப்போது துளசிதாசனின் பிரார்த்தனையாக இருந்தது.

நிறுவன வேலைகளை பழகுவது பத்மாவுக்கு சிரமமாய் இருக்க வில்லை. கருணாவின் வழிகாட்டல் முழுமையாகக் கிடைத்தது அவளுக்குப் பேருதவியாக அமைந்தது. சித்திராவும் இணைந்து செயற்பட்டாள். கருணா விற்கு வேலைச் சுமை பெருமளவு குறைந்ததால் உடல் நலத்தில்

முன்னேற்றங் காணப்பட்டது.

ஒரு திருமணத்திற்காக தின்பண்டங்கள் செய்வதில் எல்லோரும் அன்று தீவிரமாகவிருந்தனர். ஏதாவது பேசிக்கொண்டு வேலை செய்வது அவர்களின் வழக்கம். அதன் காரணமாக வேலை தாமதப்படுவதோ, பிரச்சனைகள் ஏற்படுவதோ இல்லாவிட்டால்சரி என்பது கருணாவின் கருத்து. அதனால் வேலை செய்யுமிடம் கலகலப்பாகவே இருக்கும். இப்போது கவிதாவின் மழலையும் விளையாட்டும் கலந்து ஒலித்தது.

பத்மா வந்தது முதலே கவிதாவின் தந்தை எங்கே என்ற கேள்வி சித்திரா உட்பட எல்லோரது மனங்களிலும் இருந்து வந்தது. இன்று ஒரு பெண் பத்மாவிடம் அது குறித்து விசாரித்தாள்.

"கவிதாவின்ரை அப்பா எங்கை? ஊரிலையோ? அல்லது வெளி நாட்டிலையோ?"

"அவர் எங்களைத் தவிக்க விட்டிட்டுப் போயிட்டார்."

பத்மா கவலையுடன் பதிலளித்தாள்.

"என்ன நடந்தது?" தகவல் அறியும் ஆவலுடன் அவள் தொடர்ந்து கேட்க "பேசாமலிரு. இவவுக்கு விடுப்புக் கேக்கிறதுதான் வேலை. அந்தப் பிள்ளையின்ரை கவலையை ஏன் கிளறுறாய்?" என்று உடனிருந்த மற்றொரு பெண் கோபத்துடன் குற்றங் கண்டாள்.

"நடந்தது நடந்து முடிஞ்சுது. கவலை மாறாது. அவ கேட்டதாலை ஒண்டும் ஆகப்போறதில்லை. இண்டைக்கில்லாட்டிலும் என்டைக்கோ உங்களுக்குச் சொல்லத்தானே வேணும். கவிதா பிறக்க முதலே அவர் ஓமானிலை வேலை கிடைச்சு போனவர். இவள் பிறந்த உடனை லீவு கிடைக்க வந்து பார்ப்பன் எண்டு சொன்னவர். லீவு கிடைக்க முதல் அவர் ஓட்டிக்கொண்டு போன பெரிய லொறி அக்சிடென்ற் பட்டு..."

பத்மா அழ, அவளது கவலையை கிளற விரும்பாதவள் கட்டியணைத்து ஆதரவவாக கண்ணீரைத் துடைத்தாள்.

"நாங்கள் உடலைக் கூட பார்க்கக் கிடைக்கேல்லை. எல்லாம் அங்கையே முடிஞ்சுது."

"இப்படிக் கற்பனை செய்ய எப்படி இயன்றது?"

மனம் வியந்ததேயன்றி சஞ்சலப்படவில்லை. சித்திராதான் அக்கதையைக் கேட்டு கலங்கி நின்றாள்.

# 6

வாகீசன் படிப்பதற்காக வந்தமர்ந்து ஒரு மணி நேரத்திற்கும் மேலாகி விட்டது. புத்தகங்களையும் எழுதிய குறிப்புகளையும் மாறி மாறி மேசை மீது எடுத்து வைத்ததுதான் கண்ட பயன். மூளை எதையும் கிரகிக்க முடியாது சோர்ந்து கிடந்தது. அது சோர்வா? கோபமா? பொறாமையா? அவனால் இனங்காண இயலவில்லை. அன்று வகுப்பில் நடந்ததை அவனது மனதினால் தாங்க முடியவில்லை. அவன் அதை எதிர்பார்க்கவேயில்லை.

அந்த மாணவி ஆண்டின் இடைநடுவில் வகுப்பில் வந்து அமர்ந்த போது அங்கிருந்த எல்லோரது பார்வைகளும் அவள் மீதே குவிந்தன. அதனால் அவள் சங்கடப்படுவது அப்பட்டமாகத் தெரிந்தது. கல்வியைத் தொடர்ந்து கற்காது இடையே வந்து சேர்ந்ததால் சிரமப்படுகிறாள் என்பதையும் சகமாணவனான வாகீசன் அவதானித்தான். பரிதாபமாக இருந்தாலும் அது பற்றி வாய்விட்டு ஏதாவது ஒரு வார்த்தை கூறினாற் கூட அது எத்தனையோ வதந்திகளை உருவாக்கிவிட்டுவிடும் என்பதனால் அவன் செயலற்று இருந்தான். மாணவிகளுள் எவரும் அந்த புதியவளுக்கு உதவும் எண்ணமற்று இருந்தார்கள். புதியவளின் பின்புலத்தை ஆராய்வ திலேயே எல்லோரும் கவனஞ் செலுத்தியது போலத் தோன்றியது. உதவி அதிபர் மாருதவல்லி அந்தப் புதியவளில் அக்கறை காட்டி அடிக்கடி அவளை அழைத்து உரையாடி வந்தார். இதனால் அவளுடைய விடயத்தில் அதிகம் மூக்கை நுழைக்காமல் அவர்கள் சிறிது ஒதுங்கி நின்றனர்.

அன்றொரு நாள் “வாகீ, வாகீ” என அழைத்தவாறு அவனது அப்பா வந்தார்.

வேலையிலிருந்து வந்ததுமே அப்பா தன்னை ஏன் கூப்பிடு கின்றார்? என்ற ஆராய்வுடன் அப்பாவிடம் விரைந்தான் வாகீசன்.

“உன்னுடைய வகுப்புக்கு புதுப்பிள்ளை ஒண்டு வந்து சேந்திருக்கோ?”

அப்பாவின் கேள்வி அவனைத் திடுக்கிட வைத்தது. அப்பா ஏன் அதைப் பற்றிக் கேட்கிறார்? இது அவருக்கு எப்படித் தெரிந்தது? ஏதும்

பிரச்சனை…? அப்படி எதுவும் நடக்கவில்லையே. கேள்வி காதில் விழுந்த கணத்திலேயே அது அவனது மூளையைக் குடைந்தெடுத்தது. திகைப்புடன் பதிலெதுவும் சொல்லத் தோன்றாமல் வாகீசன் நின்றான்.

"அந்தப் பிள்ளை இவ்வளவு நாளும் பள்ளிக்கூடம் போக முடியாமல் போச்சாம். அதாலை இவ்வளவு நாளும் படிப்பிச்சதை எப்படியும் படிக்க வேணுமாம். உன்னுடைய குறிப்புகளை கருணா அம்மா வாங்கித் தரச்சொன்னா. உன்ரை படிப்பு குழம்பாமல் ஒவ்வொண்டாய் தரட்டாம்."

"கருணா அம்மாவோ!"

வாகீசனின் குரலில்  ஆச்சரியமும் குழப்பமும் கூடி வெளிவந்தன. தன் தந்தை பணியாற்றும் மிகுசுவை நிறுவன தலைவருக்கும் அந்த சித்திராவுக்கும் என்ன தொடர்பு?

"ஓமோம். சித்திராவுக்கு உறவு ஒருதருமில்லை. ஆரோ கொண்டு வந்து அம்மாவோடை விட்டிருக்கினம். அதெல்லாம் எங்களுக்கு என்னத்துக்கு? இப்ப உன்னாலை இயலுமெண்டால் ஒரு கொப்பி தா. கையோடை கொண்டுபோய் கொடுத்திட்டு வாறன். இப்படி வாங்கிப் படிக்கிறது வேறை ஒருதருக்கும் தெரியக்கூடாது எண்டு அம்மா சொன்னவ. தெரிஞ்சால் தேவையில்லாத கதைகள் வரும் எண்டு அவ நினைக்கிறா. இப்பவெண்டால் வேலையாட்கள் இருக்காயினம்."

விரிவான விளக்கமொன்றை தந்தை சொல்லவும் வாகீசன் கொப்பியொன்றைக் கொண்டுவந்து கொடுத்தான்.

"சித்திரா, நீர் கேட்ட குறிப்புக் கொப்பி. படிச்சுப் பார்த்து பிரயோசனமோ எண்டு சொல்லும்." என்றபடி கருணா தந்த கொப்பியைக் கண்டதுமே சித்திரா மகிழ்ச்சியடைந்தாள்.

கருணா அம்மாவின் முயற்சியால் பாடசாலைக் கல்வி மீண்டும் கிட்டிய மகிழ்வுடன் சென்ற அவளால் தொடர்ந்து மகிழ்ச்சியுடன் வகுப்பி லிருக்க முடியவில்லை. நீண்ட காலம் படிப்பைப் பற்றிய எண்ணமே இல்லா திருந்த அவளுக்கு ஆசிரியர்கள் கற்பித்த எதுவுமே விளங்கவில்லை. திகைப்பு திக்குமுக்காடச் செய்தாலும் போராடியே பழக்கப்பட்ட அவளுக்கு அதற்கு தீர்வு தேடவேண்டும் என்ற பேரார்வம் மூளைக்குள் புகுந்து கொண்டது. கருணாஅம்மாவின் வழிகாட்டுதல் பயன் தரும் என்ற எண்ணம் தோன்ற அவரிடம் சென்று தன் பிரச்சனையைக் கூறினாள்.

"ஒண்டுக்கும் யோசிக்கவேண்டாம். எல்லாம் வெல்லலாம்"

சிரித்தபடி கூறி அனுப்பிவைத்தார் அம்மா. சித்திராவின் மனதினுள் நிறைந்திருந்த சஞ்சலம் பறந்துவிட நிம்மதி அங்கு குடிபுகுந்தது.

அதன் பயனாக கைக்கு வந்த குறிப்புக் கொப்பியைத் திறந்த சித்திராவின் கண்முன் வாகீசன் என்ற பெயர் நின்று சிரித்தது.

"வாகீசனுடைய கொப்பியா? எப்படியம்மா? இவர்தான் வகுப்பிலேயே கெட்டிக்காரன். ஒண்டு தவறாமல் எல்லாப் பாடங்களிலும் முதலிடந்தான்."

"அப்பிடியா? அப்போ இதைப் படித்துவிட்டுத் தாரும். அதைக் கொடுத்துவிட்டு மற்றதை வாங்கித் தரலாம். ஆனால் ஒண்டு. இந்த விசயம் ஒருவருக்கும் தெரியவரக் கூடாது. பாடசாலையிலை இதைப் பற்றி இரண்டு பேரும் கதைக்கக் கூடாது"

அம்மாவின் குரலில் கலந்து வந்த கண்டிப்பை அவளின் மனம் உணர்ந்துகொண்டது. அம்மாவின் நிபந்தனையை அவள் கவனமாகக் கடைப்பிடித்தாள். சித்திரா படிக்க முனைந்தபோது இருள் நிறைந்து புலப்படாதிருந்த பகுதிகளெல்லாம் மெல்ல மெல்லத தெளிவுறத் தொடங்கின. அவளின் நிமிர்வு ஆசிரியர்களை ஆச்சரியப்படவைத்தது.

எதிர்பாராது வாகீசன் எதிர்ப்பட நேர்கையில் சித்திராவை அறியா மலே நன்றியுணர்ச்சி கண்களில் ததும்பும். ஆசிரியர்கள் பாராட்டும் வேளை களிலும் சில நாட்களில் அவளிடம் கேட்காமலேயே கண்கள் அவனுக்கு நன்றி சொல்லப் பறந்துவிடுவதுண்டு. ஏனையோர் என்ன எண்ணியிருப் பார்களோ? என சித்திரா பயப்படுவாள். ஆனால் அவர்களோ "என்னாலும் இயலும் பார்" என்று அவள் வாகீசனுக்கு சவால் விடுவதாகக் கற்பனை செய்துகொள்வார்கள்.

குறிப்புகளை ஓரளவு படித்து இனிமேல் தேவைப்படாது என்ற நிலை அண்மித்துக்கொண்டிருந்தவேளையில் தன் கைக்கு வந்த கொப்பியைத் திறந்த சித்திராவுக்கு அதிர்ச்சியொன்று அதனுள் அமர்ந் திருந்தது.

திருநீறு, குங்குமம் இரண்டும் சிறு சிறு பொலித்தீன் பொதிகளாக .அவற்றைச் சுற்றியபடி ஒரு மஞ்சள் நூல்.!

இது ஏன் இதற்குள்?

கண்ணில் பட்டதும் மனம் தாறுமாறாக ஓடத் தொடங்கியது. மஞ்சள் நூல் ஏன் இதனுள் வைக்கப்பட்டது? வாகீசன் வைத்திருப்பானா? அப்படியென்றால் தவறுதலாகவா? வேண்டும் என்றா?

எந்தச் சிக்கல் வந்தாலும், கருணா அம்மாவிடம் ஓடிச் சென்று அதனைக் கூறி, தீர்வு காணும் சித்திரா இதனைக் கூற தயங்கினாள். அவளுக்கே புரியாத ஏதோ ஒன்று, இதனை மறைத்து வைத்து காரணம் கண்டறிய விரும்பியது.

ஆனால் கற்பனைகளாகவும் கனவுகளாகவுங்கூட மகிழ்ச்சி சில மணி நேரமே அவளுடனிருக்கும். சித்திராவுடன் இணைந்திருக்க ஏனோ மகிழ்ச்சி விரும்புவதில்லை. தன் மனதுள் பொத்தி வைத்திருந்து, விதவிதமான கற்பனைகளை உருவாக்கி மகிழ எண்ணியவளுக்கு ஏமாற்றம் கொடுப்பதற்கான செய்தியை பத்மா காவி வந்தாள்.

"இப்ப தந்த கொப்பிக்குள்ளை சாமிப் பிரசாதம் கிடந்ததாம். அதை வாங்கி வரச் சொல்லி அம்மா சொல்லிவிட்டவ."

குற்ற உணர்வு படாரென சித்திராவை இறுக்கி நெரித்தது. அதிலிருந்து அவளை விடுவிப்பதற்கென்ற பாவனையில் மூளை பொய்யொன்றை உருவாக்கி அவளது நாவிற்கு அனுப்பி வைதததது.

"நான் இன்னும் கொப்பியைத் திறந்து பார்க்கேல்லை." கூறிய படியே சித்திரா கொப்பியைத் திறந்தாள். உள்ளே மஞ்சள் நூல் சுற்றிய சாமி பிரசாதம் சித்திராவை கவலையாகப் பார்த்து சிரித்தது.

பத்மா அதைக் கண்டதும் எடுத்தாள். சித்திராவுக்கு உள்ளே எங்கோ வலித்தது.

ஏன்? எதற்கு வலித்தது? மஞ்சள் நூலைக் கண்ட கணத்தில் அவளுடைய மனதினுள்ளே புகுந்த கள்ளம் என்ன? எதுவும் அவளுக்கு விளங்கவில்லை. ஆனால் தொடர்ந்து வந்த நாட்களில் தனிமை கிட்டும்போது அவளின் நினைவில் நூலுடன் வாகீசனும் வந்தான்.

மகிழ்வின் நிழல்கூட அவளது அருகில் தொடர்ந்து வர விரும்புவ தில்லை என சித்திரா நம்புவதற்கு காரணமாக மற்றொரு சம்பவமும் நிகழ்ந்தது.

அன்று அப்படி நடக்கும் என்று வாகீசனோ சித்திராவோ எதிர் பார்க்கவில்லை. முதல் நாள் சாதாரணமாக வகுப்பில் நடத்தப்பட்ட பரீட்சை விடைத் தாள்களை திருத்தி ஆசிரியர் கொண்டுவந்து மாணவர்களிடம் கொடுத்த பின் கூறியவைதான் அதிர்வலைகளை இருவரிடமும் ஏற்படுத்தின. சோதனையில் அதிக புள்ளிகளை சித்திரா பெற்றிருப்பதாக அவர் அறிவித்து அவளை மிகவும் பாராட்டினார். இதை அவள் எதிர்பார்க்கவில்லை. அவளது கண்கள் ஒரு கணம் வாகீசனின் பக்கம் சென்று பட்டென்று மீண்டன. ஏற்கனவே படிப்படியாக முன்னேறிவந்த சித்திரா இரண்டாம் இடத்தை எட்டியிருந்தாள். இதனால் ஏனைய மாணவர் களுக்கு அது எதிர்பார்த்த ஒரு விடயமாகவே தோன்றியது. ஆனால் சித்திராவுக்கோ தான் வாகீசனுக்குத் துரோகம் செய்துவிட்டதான குற்ற உணர்வு தோன்றி அரிக்கத் தொடங்கியது.

ஆசிரியர் அந்த அறிவிப்பின் பின்னர் சிறிது நேரத்தால் வாகீசனை

அருகே அழைத்து அவனது விடைகளைப் பார்வையிட்டு அவன் விட்டிருந்த பிழைகளுக்கான காரணங்களையும் ஆராய்ந்தார். அடுத்தடுத்த பாடங்கள் நடந்து பாடசாலை விட்டபின்னர் வாகீசன், வீடு வந்து வழமையானவற்றை செய்துமுடித்து படிப்பதற்கென்று இருந்தபோதுதான் ஆழத்தில் அமிழ்ந்து கிடந்த உணர்ச்சி சீறிக்கொண்டு வெளிக்கிளம்பியது.

"நான் பின்தள்ளப்பட்டுவிட்டேன். அதுவும் சித்திராவால்..."

"அவள் திறமைசாலியாக இருப்பதால் எனக்கென்ன பிரச்சினை? என்னை அவள் திறமையற்றவனாக்கவில்லையே? இப்படி ஒரு போட்டி இருந்தால் இன்னும் முன்னேறவேண்டும் என்ற உற்சாகம் வரும்; என்றெல்லாம் அறிவுபூர்வமாக சிந்தித்துப் பார்த்தும் மனம் அவற்றை யெல்லாம் புறந்தள்ளிவிட்டு ஓடிச் சென்று ஒரு மூலையில் முடங்கிக் கொண்டது.

வாகீசனால் படிக்கவே இயலவில்லை.

சித்திராவும் மன உறுத்தலால் உழன்றுகொண்டிருந்தாள். மன்னிப்பு கோரவும இயலாது. கதைக்கக்கூடாது என்ற தடை அதற்கு இடமளிக்காது. யோசித்து யோசித்து சாத்தியமாகக்கூடிய வழி எதுவுமே தென்படாது போய்விட விடிகாலைப் பொழுதில் "இனிமேல் அவனை விஞ்சும்படியாக எதுவும் செய்வதில்லை" என்ற முடிவுக்கு மட்டுமே அவளால் வரமுடிந்தது.

இந்த முடிவினால் பயனில்லை என்றே சித்திராவுக்குத் தோன்றியது. வாகீசன் தன்னை வெறுப்பதாக அவளுடைய உள்ளுணர்வு கூறிக்கொண்டிருந்தது. வாகீசன் வெறுப்பை வெளிப்படுத்தா விடினும் உள்ளத்துள் படர்ந்திருப்பதாக சித்திரா உணர்ந்தாள். அவ்வாறான எண்ணம் ஏற்பட்டதற்கான காரணமும் அவளுக்குப் புரியவில்லை. அவனது உதவி காரணமாகத் தோன்றிய நன்றி உணர்ச்சியைவிட வேறுமேதோ ஒன்று அவளது மனதினுள் புகுந்துகொண்டுள்ளது போலவும் தோன்றியது.

அடிக்கடி தலைகாட்டும் வாகீசனின் நினைவு.

அவனது குறிப்புகளை எடுத்தால் அதை விட்டுவிட்டு அவனைப் பற்றிய நினைவுகளுள் மூழ்கி அதில் சுகங் காண முனையும் மனது.

இதுவரை அனுபவிக்காத ஏதோ ஒன்று தன்னுள் முகையவிழ்ப்ப தாக சித்திரா உணர்ந்தாள். அவன் தன்னைத் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாதென மனம் தவித்தது. தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்டுவிடுவதென அவள் ஒரு முடிவிற்கு வந்தாள். அதற்கான சந்தர்ப்பம் ஒன்றுக்காக சித்திரா காத்திருந்தபோதுதான் கருணா அம்மா வாகீசனின் குறிப்புக் கொப்பிகள் அனைத்தையும் கொண்டுவருமாறு சொல்லியனுப்பியிருந்தார்.

கையில் கொப்பிகளும் என்னவோ ஏதோ என்ற தவிப்பு மனதிலுமாகச் சென்ற சித்திராவின் காதுகளில் வாகீசனின் தந்தையின் பேச்சு தெளிவாகக் கேட்டது.

"அவனும் நல்லாய்ப் படிக்கிறான். அவையும் அவனைத் தாங்கள் படிப்பிக்கிறம் எண்டு கேக்கினம். இப்பிடி ஒரு சந்தர்ப்பம் வரேக்கை விடக்கூடாது."

இதைக் கேட்டதும் சித்திராவின் மனதுள் மகிழ்வு ஊறிப்பரவ ஆரம்பித்தது. அதே வேளையில் "அதற்கேன் என்னிடமிருந்து கொப்பி களை திரும்ப வாங்கவேண்டும்?" என்ற கேள்வியும் சேர்ந்து எழுந்தது.

"அவை வெளிநாட்டிலை எண்டு சொல்லுறீங்கள். பிறகேன் கொழும்பிலை படிக்கவைக்க வேணும்?"

அம்மாவின் கேள்வி அவளுக்கு மேலதிக விபரங்களைத் தெரியப்படுத்தியதுடன் ஒருவித தத்தளிப்பை ஏற்படுத்திவிட்டது. கால்கள் அசைய மறுத்தன.

"வாகீசன் படிப்பதற்கு வேறெங்கோ போகப்போகின்றானா?" இந்தச் செய்தி வெம்மையைக் கக்கி பரவிக்கொண்டிருந்த மகிழ்வை உறிஞ்சியெடுத்துவிட்டு தான் அவ்விடத்தை ஆக்கிரமித்துக்கொண்டது.

"இங்கை படிப்பு ஒரு சீரில்லை. ஒரு நாள் ஹர்த்தால். இன்னொரு நாள் ஊரடங்கு. இன்னும் என்னென்னவோ நடக்குது. படிப்பு நடக்கு தில்லை. வரவர பெடியளின்ரை நடவடிக்கையள் கூடுது. என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ? எண்டு எல்லாரும் பயப்படுகினம். சந்தர்ப்பம் சரிவந்தால் பிரான்ஸுக்குக் கூப்பிட்டிடுவினம். இல்லாட்டிலும் மேல் படிப்புக்குக் கூப்பிட்டிடுவினம்."

உரையாடலைக் கேட்டபடியே காலைப் பெயர்த்தெடுத்து உள்ளே சென்ற சித்திரா,அம்மாவிடம் கொப்பிகளை ஒப்படைத்தாள். "நான் படிக்காத பாடங்களைப் படிக்க பெரிய உதவியாயிருந்தது. மிகவும் நன்றி" வாகீசனை மனக் கண்முன் நிறுத்திக்கொண்டு நன்றியைத் தெரிவித்து விட்டு வெளியே அவள் வந்தாள்.

மனம் பதறிக்கொண்டிருந்தது. அதை ஒரு நிலைப்படுத்தி எதையும் செய்ய அவளால் இயலவில்லை. எப்படியோ இயங்கினாள். படிப்பதற்கு இயலவேயில்லை. படுக்கையில் படுத்ததும்.பழையவைகள் வந்து உள்ளே கடை பரப்பின. அடங்கிக் கிடந்த கண்ணீர் பெருக்கெடுத்தது. ஆதரவான கரமொன்று நெற்றியில் பதியவும் அவள் எழுந்து கட்டிலில் அமர்ந்தாள். அருகே பத்மா நின்றுகொண்டிருந்தாள்.

"ஏன் சித்திரா படிக்கேல்லையா? ஏதாவது சுகமில்லையா? ஏன்

இப்பவே படுத்திட்டாய்?"

பத்மா கருசனையுடன் கேட்டாள். ஒரு கணம் தன் மனத்தின் அவஸ்தைகளைக் கொட்டிவிட முயன்ற நாவை ஏதோ ஒன்று இழுத்து நிறுத்திவிட சித்திராவின் மூளை சற்று தன்னை சமநிலைப்படுத்தி இயங்கு நிலைக்கு வந்தது.

"தலை சரியாய் இடிக்குதக்கா."

"சாப்பிட்டியா?"

"ஓமக்கா. அதுக்குப் பிறகுதான்..."

காய்ச்சல் காயேல்லை. வயித்துக்கை ஏதும் செய்யுதோ?"

இல்லையக்கா"

வெய்யிலுக்கை திரிஞ்சனியோ?"

ஓமோம். நெற்போல் விளையாடினனாங்கள்"

"நீ படுத்திரு. இஞ்சி பிளேன் ரீ போட்டுக்கொண்டு வாறன்."

"வேண்டாமக்கா. ஏன் கஷ்டப்படுகிறியள். நித்திரைகொள்ள சுகம் வரும்"

"ஒரு கஷ்டமுமில்லை. நீ படு."

பத்மா கூறிக்கொண்டே வெளியேறினாள். "இப்படியானவளுக்கு பொய் சொல்கிறேனே" என மனம் வருந்தியது.

வாகீசன் கொழும்பிற்கு சென்றுவிட்டான் காலம் தன் போக்கில் ஓடிக்கொண்டிருந்தது. வாகீசன் விலகியதால் மனதைச் சூழ்ந்த கவலைப் புகைமூட்டம் அதனால் சிறிது சிறிதாகக் கலைந்துவந்தது. சித்திராவின் வாழ்க்கை அமைதியான தடத்தில் போய்க்கொண்டிருந்தது.

# 7

தீபாவளி அண்மித்துக்கொண்டிருந்தது. நிறுவனத்திற்கு சிற்றுண்டி வகைகளுக்கான கோரிக்கைகள் அதிகரித்திருந்ததால் பணியாளர்கள் அதிதீவிரமாக வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். தபாற்காரர் ஐந்தாறு கடிதங் களைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போனார். கடிதங்கள் வந்ததுமே அவற்றைப் பிரித்துப் பார்த்து அவசியமானது ஏதேனும் இருந்தால் கருணா விடம் கொடுப்பது, அல்லாவிடின் அவரது மேசையில் அவர் பின்னர் பார்வையிடுவதற்காகவென வைப்பது ஆகியவை பத்மாவின் வேலைகள். அதனால் கடிதங்களைப் பிரிக்கத் தொடங்கினாள் பத்மா. அவள் இவ்வேலையைச் செய்யத் தொடங்கியது முதல் கருணாவுக்கோ நிறுவனத்திற்கோதான் கடிதங்கள் வந்துள்ளன. அன்று மூன்றாவதாக எடுத்த கடிதம் சித்திராவுக்கு முகவரியிடப்பட்டிருந்தது.

“இவளுக்கு யார் கடிதம் அனுப்பியிருப்பார்கள்?”

பத்மாவை கேள்வி குடைந்தது. சித்திரா பாடசாலைக்குப் போய் விட்டாள். வந்த பின்னர்தான் கடிதத்தைக் கொடுக்கலாம். அதை விட்டு விட்டு ஏனையவற்றைப் பார்த்துமுடித்தாள் பத்மா.

சித்திராவின் வருகைக்காகக் காத்திருந்த பத்மா அவள் வந்ததுமே அந்தக் கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள்.

“என்னக்கா இது?”

“உனக்கு வந்த கடிதம்”

“எனக்குக் கடிதமோ? என்ன பகிடி விடுகிறீங்களே? எனக்குக் கடிதம் எழுத ஆரக்கா இருக்கினம்?”

“ஆரோ இருந்துதானே கடிதம் வந்திருக்கு. பார். சரியாய் உன்னுடைய விலாசம் எழுதியிருக்கு.”

“ஓமக்கா. ஆரெழுதியிருப்பினம்?”

முகவரியை பார்த்துக்கொண்டே சித்திரா கேட்டாள்.

“என்னைக் கேட்டால்? உனக்குத்தானே கடிதம் வந்திருக்கு..

விரிச்சுப் பார்த்தால் தெரியும். ஏன் வீணாய் மூளையைப் போட்டு உடைக்கிறாய்.?”

பத்மா கேட்டதும் சித்திரா குழப்பத்துடன் கடித உறையைப் பிரித்தாள். உள்ளே ஓர் அழகான வாழ்த்துமடல்! அதைப் பார்த்து இரசிக்கும் மனநிலையில் அவள் இல்லை. மனம் யார் என்று அவதிப்பட கண்கள் தேடின. முடிவில் கண்களும் மனமும் ஏமாந்து நின்றன.

“ஒரிடத்திலும் காணேல்லையே அக்கா.”

அவ்வளவு நேரமும் அதைப் பற்றி அறிய அவாவி நின்ற பத்மா உடனே சித்திராவிடமிருந்து வாழ்த்துமடலை பிடுங்கியெடுத்துத் தேடினாள். ஒரே முடிவுதான்.

அனுப்பியவரின் பெயரோ உறவுமுறையோ முகவரியோ வேறு எந்தவித தகவலோ அதில் குறிப்பிடப்படவில்லை. சித்திராவுக்கு குழப்பத்தை ஏற்படுத்த யாரோ அனுப்பியுள்ளார்களோ? இருவரும் எதுவும் விளங்கிக்கொள்ள முடியாது நின்றனர். பத்மா தன் வேலையைக் கவனிக்கத் திரும்பினாள்..

சித்திரா இயந்திரகதியில் நாளாந்தம் செய்யும் வேலைகளைச் செய்தாளாயினும் மூளை அந்தக் கடிதத்திலேயே ஒட்டிக்கொண்டிருந்தது. யாரோ தனது கையாலேயே செய்த வாழ்த்துமடல். வெண்மை நிறங் கொண்ட அட்டையை அழகாக வெட்டி, மடித்து முன் பக்கத்தில் இரு மலர்கள். மலர்ந்து சிரிக்கும் செவ்வரத்தம்பூ இரண்டு இலைகளின் மத்தியில். செவ்வரத்தம்பூவின் அருகே அதன் ஓரிதழின் மேல் தன்னைச் சாய்த்து செம்மஞ்சள் றோசா. அட்டையைப புரட்டியபோது ஒரு பக்கம் செவ்வரத்தம்மலர் மறு பக்கம் றோசாமலர். செவ்வரத்தம்மலரைச் சுற்றி தீபாவளி என்று எழுதப்பட்டிருந்தது. அதே போல் றோசாவைச்சுற்றி வாழ்த்து என்ற அழகிய எழுத்துகள்.

அழகிய எழுத்துகள்!

சுறுசுறுவென அவ்வெழுத்துகள் சித்திராவின் மூளையுள் ஏறி ஞாபக தீபங்களை தம் முன் ஏந்திக்கொண்டன.

நாடோறும் பார்த்த எழுத்துகள்.

வாகீசன் . . .?

கைக்குக் கிட்டிய சாக்லேற்றை அவசர அவசரமாக மறைக்க முயலும் குழந்தையானது மனம். அவ்வேளையில் பத்மா வேலைகள் முடிந்து உள்ளே வந்தாள்.

“ஆராவது பெடியள் அனுப்பியிருப்பாங்களோ?”

விட்டுவிட்டுப் போன இடத்தில் வந்து நிற்பது போல் கேள்வியொன்றும் அவளுடன் வந்து நின்றது.

"எனக்குத் தெரியேல்லை"

குழந்தை சாக்லேற்றை மறைப்பதில் மும்முரமானது.

சிறிய மௌன இடைவெளியின் பின் பத்மா பேச ஆரம்பித்தாள். தயக்கம் அதனுடன் ஒட்டியிருந்து எட்டியெட்டிப் பார்த்தது.

"உன்னைப் பிழையாய் நினைக்கிறன் எண்டு யோசிக்காதை. உன்னை என்ரை தங்கச்சியாய்தான் நினைச்சுப் பழகிறன். அதாலை சொல்லுறன். இது ஆரோ பெடியளின்ரை விளையாட்டுத்தான். உனக்கு ஆளை இப்ப தெரியாமலிருக்கலாம். ஆனால் ஆள் வெளிப்படும். அப்ப நீ கவனமாயிருக்க வேணும் சித்திரா. அவன் கூடாதவனாய்த்தான் இருப்பான் எண்டு சொல்ல வரேல்லை. நல்லவனாயும் இருக்கலாம். நல்லவனோ கெட்டவனோ. உணர்ச்சி வசத்தாலையோ விதி வசத்தாலையோ ஏதும் நடந்துவிட்டால் பாதிக்கப்படுகிறது பெண்தான். இலை முள்ளிலை விழுந்தாலும் முள் இலையிலை விழுந்தாலும் சேதப்படுவது இலைதான் எண்டு உதாரணம் சொல்லுவினம். உனக்கு இப்ப இது சரியாய் விளங்காது. எவ்வளவு கவனமாயிருந்தாலும் எவ்வளவு திடமாயிருந்தாலும் சில வேளைகளிலை காலை வாரிப்போடும். "அது நெருப்பு. கவனமாயிரு." எண்டு அறிவு எச்சரித்துக்கொண்டிருக்கும்போதே குளிர் அந்தச் சூட்டுக்குக் கிட்டப் போகச் செய்து எங்களைச் சாம்பலாக்கிப் போடும். எனக்கேதோ இதைச் சொல்லவேணும் போலை இருந்ததாலை சொல்லுறன்... சொல்லி வழி காட்ட உனக்கு அம்மாவும் இல்லை."

"நான் அப்படி சாம்பலானவள்" என்பதையும் சொல்லி கதறியழாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் பத்மா.

முகத்தைப் பார்த்தவாறு பத்மா கொட்டித் தீர்த்த்வற்றை அவதானித்துக் கொண்டிருந்தாள் சித்திரா. பத்மா சொல்லியவற்றை தெளிவாக விளங்கிக்கொள்ள இயலாது அவளது அறிவு தவித்தது. தொடர்ந்து கேள்விகள் கேட்டுத் தெளிவு பெறவியலாதபடி பத்மா, கவிதாவைத் தேடிக்கொண்டு செல்வது போன்ற பாவனையுடன் புறப் பட்டிருந்தாள். தன் குமுறல்களைக் கொட்டிவிடக் கூடாதென்பதுதான் அதற்கு உண்மைக் காரணமாயிருந்தது.

"உனக்கு அம்மாவுமில்லை"

சித்திரா தனக்குள்ளேயே சிந்தித்து விளங்கிக்கொள்ள முயன்று தோற்றபோது பத்மாவின் குரல் காதினுள் ஒலித்தது. எனினும் சிநதித்தாள். முழுமையான தெளிவு கிட்டவில்லை. ஒன்று மட்டும் அவளுக்குப் புரிந்தது.

இது இத்துடன் நின்றுவிடாது .தொடரக்கூடும். அப்போது அவள் கவனமாக இருக்கவேண்டும் என்று அக்கா நினைக்கிறாள். அதை அவளுக்கு சொல்ல வேண்டியது தன் கடமை என உளப்பூர்வமாகக் கருதுகிறாள் அக்கா. சந்தர்ப்பம் கிடைக்கும்போது அக்காவிடம் தன் சந்தேகங்களைக் கேட்க வேண்டும் என தீர்மானித்துக்கொண்டாள்.

எதிர்பார்த்த சந்தர்ப்பம் வரமுன்னரே வேறோன்று வந்துநின்றது. சித்திராவின் வகுப்பில் படிப்பவள் என்றாலும் அவளுடன் அதிகம் பழகாத அந்த மாணவி தனது பிறந்த தின வைபவத்திற்கு வருமாறு அழைத்தபோது என்ன செய்வதென சித்திரா சிறிது தடுமாறிப்போனாள்.. அவளது தோழி களோ உறவினரோ பிறந்த தினம் கொண்டாடி அவளை இதுவரை அழைத்த தில்லை. அத்துடன் அவளது வாழ்க்கை ஓர் அஞ்ஞான வாழ்க்கையாக தற்போது இருப்பதால் வேறெங்கும் போய்வர அவள் விரும்பவில்லை. எங்கேனும் செல்வதற்காய் அனுமதி பெற கருணாவிடம் அவள் சென்றதில்லையாயினும் இதுவே அவரது கருத்தாகவும் இருக்குமென சித்திரா நம்பினாள். ஆனாலும் அழைத்தவுடன் மறுப்புத் தெரிவிக்க ஏனோ அவளால் இயலவில்லை. தன் தோழிகளுடன் உரையாடியபோது எல்லோரையும் அவள் அழைத்ததாகவும் தெரியவில்லை. இந்த அழைப்பு சந்தேகத்துக்கிடமான பரிசுப் பொதியாக அவளுடைய உள்ளுணர்விற்குத் தோன்றியது. பரிசு இல்லாமல் வெடிகுண்டாக இருந்துவிட்டால் . .?

இரண்டு நாட்கள் கழிந்த பின்னர் அவளிடம் போய், விழாவிற்கு வர இயலாதிருப்பதாகக் கூறி சித்திரா மன்னிப்புக் கோரினாள். அப்போது அவள் தெரிவித்த செய்தி சித்திராவுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. தனக்கு சித்திராவை அழைக்கும் எண்ணம் இருக்கவில்லை என்றும் தன் உறவுப் பையன் ஒருவன் மூலம் வாகீசன் சித்திராவை அழைக்குமாறு கேட்ட தனாலேயே அழைத்ததாகவும் அவள் தெரிவித்தாள். இதை நம்புவதா? விடுவதா?

வாகீசன் எந்த சந்தர்ப்பத்திலும் அவளுடன் பேசுவதற்குக்கூட முயன்றது கிடையாது. தற்செயலாகக் கிடந்த சுவாமி பிரசாதம், எதையும் குறிப்பிடாது வந்த வாழ்த்து மடல் ஆகியவற்றை வைத்து கற்பனை செய்து காதல் என நம்பலாமா? அவன் விரும்பும் அளவிற்கு அவளிடம் எதுவு மில்லையே.

ஆனால் அவனது பாடக் குறிப்புகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது எவருக்கும் தெரியாது. அவனிடமிருந்து ஏதோ ஒரு தகவல் வெளி வந்திருக்காமல் சித்திராவை அழைக்குமாறு அந்தப் பையன் கேட்டிருக்க வியலாது. அப்படியானால் வாகீசன் உண்மையிலேயே அவளை அழைக்குமாறு கேட்டிருப்பானோ?

எதுவும் புலனாக மறுத்தது. முன்னதாகவே எச்சரிக்கை செய்த பத்மாவிடம் இதைத் தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணம் வரவே சித்திரா அவளிடம் சென்று நடந்தவற்றை விவரித்தாள். பத்மா அவற்றைக் கேட்டதுமே அதில் ஏதோ ஆபத்து இருப்பதாக உணர்ந்தாள். பாட சாலைக்குப் போகும்போதும் வரும் வேளையிலும் வேறு பல சந்தர்ப்பங் களிலும் கட்டவிழும் மொட்டுகள் பல இல்லை... இல்லை முகிழ்த்துவரும் அரும்புகள் உட்பட குரங்குகளிடம் சிக்கி கசங்கித் துகள்களும் துண்டங்களுமாய் நிரைகளாய் நீளத்திற்குக் கிடந்து பத்மாவுக்குப் பயங் காட்டின. இறுதியில் சித்திராவும்..

“வேண்டாம். வேண்டாம். நீ அதுக்குப் போயிடாதை சித்திரா”

அவசர அவசரமாக பதற்றத்துடன் கூறினாள் பத்மா.

“நான் வரமாட்டன் எண்டு சொன்னபோதுதான் இந்தக் கதையை அவ சொன்னவ.”

“நல்ல முடிவு எடுத்திருக்கிறாய். வாகீசன் கூட ஏதாவது செய்ய லாம். அல்லது அவனுடைய பெயரைச் சொல்லி வேறை ஆராவது ஏதும் செய்ய யோசிச்சிருக்கலாம். ஒருதரையும் நம்ப ஏலாது. கவனம் சித்திரா.”

“வாகீசனுக்கு என் மேல் கோபம் இருந்திருக்குமோ?”

பத்மா சொன்னவற்றைக் கேட்டவேளை மனதுள் துருத்திய சந்தேகம் இது.

இந்தக் காலப் பகுதியில் வாகீசன் ஊருக்கு வந்துபோனதற்கான சுவடெதுவுமே தென்படவில்லை.

அதேவேளை மிகுசுவை நிறுவனத்தில், சித்திராவிற்கு அழைப்பு விடுத்த பெண்ணினுடைய அந்த உறவினனின் அக்காவும் பணியாற்றி வருவது எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. அப்பெண்கூட நிறுவனக் கதைகளை தாயாருடன் பகிர்ந்துகொள்கையில் அவற்றை தம்பியும் கேட்டு சித்திராவிற்குப் பொறி வைத்ததை அவதானிக்கவில்லை. பறவை வராது பொறியிலிருந்து தப்பியது அதனுடைய அதிர்ஷ்டம்.

வாகீசனின் நினைவுகள் மெல்ல மெல்ல மறந்து போய் மறைந்துவருகையில் ஒரு செய்தி.

வாகீசனை அவனது மாமியார் அழைத்து படிக்க வைத்து மகளுக்கு திருமணம் செய்துவைக்கப்போகிறாராம்.

நல்ல செய்திதானே? அதைக் கேட்டு அவளது மனம் ஏன் இப்படி வேதனைப்படுகிறது? அவளால் காரணத்தைக் கண்டுகொள்ள இயல வில்லை. தன் இதயத்துள் அரும்பொன்று முகையவிழ்க்க முனைவது அவளுகக்குப் புரியவில்லை.

# 8

திகிலும் திமிரும் கொடூரங்களும் கலவையாகி, இலங்கையில் தமிழர் வாழ்ந்த பிரதேசங்கள் எங்கும் அமைதிக்கும் நிம்மதிக்கும் கல்லறை கட்டிக்கொண்டிருந்தன. நாட்டில் இவ்வாறெல்லாம் நடக்கலாம் என்று பரவிய வதந்திகள் நிதர்சனமாகிக்கொண்டிருந்தன. ஆட்சியாளரின் பிடி இப்பிரதேசங்களில் வலுவிழந்துவந்தது. நிர்வாகக் கட்டமைப்பு தள்ளாடி யது. ஊரடங்குச் சட்டத்தைக்கூட வானிலிருந்து மட்டுமே கண்காணிக்க வேண்டிய நிலையில் அரசும் படைகளும் இருந்தன.

பெரும்பான்மையினரால் தமக்கான நியாயமான உரிமைகள் மறுக்கப்படுவதை பொறுத்துக்கொள்ள முடியாத இளைஞர்கள் போராட ஆரம்பித்து அது வலுவுற்றுவந்தது. இதனால் இயல்புநிலை பாதிக்கப்பட்டு மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகினர்.

கருணாவின் தொழில் முயற்சிகளும் பாதிப்புகளை எதிர் கொண்டன. ஏனைய பகுதிகளுடனான போக்குவரத்தில் ஏற்பட்டிருந்த தடைகள், இடர்ப்பாடுகள் காரணமாக அவர்களது உற்பத்திகளுக்கு தேவை யான பொருட்களின் விலைகள் பன்மடங்காகின. அல்லது பொருட்கள் கிடைக்காதுபோயின. கருணாவும் அன்றாட நிலைக்கு ஏற்றவாறு தன் தொழில்முயற்சிகளை மாற்றிக்கொண்டார். பனம்பண்டங்களை உற்பத்தி செய்வதில் கூடிய அக்கறை காட்டினார். வேறிடங்களிலிருந்து தின்பண்டங்கள் வராததால் இவை மளமளவென விற்றுத் தீர்ந்தன.

அவரது உற்பத்திகளுக்கு உதவிய பலர் கொழும்பிற்குச் செல்வதாகவும் இந்தியாவிற்குப் போவதாகவும் கூறி, விடைபெற்றுச் சென்றனர். கருணா புதியவர்களைச் சேர்க்காது உற்பத்தியை குறைத்துக் கொண்டார். பலரைச் சேர்த்துவைத்து வேலை செய்வதில் பல்வேறு சிரமங் களிருந்தன. அவற்றுள் ஒன்று வான் தாக்குதலுக்கு பாதுகாப்புக் கொடுப்பது. அடிக்கடி வானில் உலாவரும் உலங்கு வானூர்தி திடீர் திடீரென தாக்கத் தொடங்கும். குண்டுவீச்சு விமானங்களும் எவ்வேளை யிலும் வந்து குண்டுகளை வீசிவிட்டுச் செல்லும். உற்பத்திக்கான

பொருட்களை வாங்குவதைவிட அங்கிருக்கும் அனைவரும் வான் தாக்குதலிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு தேவையான பதுங்கு குளிகள் அமைக்கவேண்டியது அவசியமாக இருந்தது. எனவே வேலைக்கு வருவோரின் எண்ணிக்கை குறைவாக இருப்பதே நல்லதென கருணா தீர்மானித்தார். ஆனால் கஷ்ட காலம் தேடிவந்தது.

அன்று வந்த குண்டுவீச்சு விமானங்களுக்கு கருணாவின் மிகுசுவை நிறுவனமே இலக்காக இருந்திருக்கவேண்டும். பலர் உலவும் இடம் தீவிரவாதிகளின் இருப்பிடமாக வானத்திலிருந்து நோட்டமிட்டுப் பெறப்படும் தகவலைக்கொண்டு கணிக்கப்பட்டிருக்கவேண்டும். அதனால் கருணாவின் நிறுவனம் குறிவைக்கப்பட்டிருக்கலாம். விமானங்கள் சுற்றுவதாக அறிந்து அனைவரும் பதுங்கு குளிக்கு போகுமுன்னரே குண்டுகள் வீழ்ந்தபோதிலும் இலக்குத் தவறி பின்பக்கமாக விழுந்ததால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இதனால் திகிலுக்குப் பின்னான ஓர் ஆறுதல் கருணாவின் மனதில் ஏற்பட்டவேளையில் அந்தப் பரபரப்பு வந்து பரவியது. குண்டு விழுந்த இடத்திற்கு அருகே ஒரு ஆணும் பசுவும் கொல்லப்பட்டுக்கிடப்பதான செய்திதான் அது.

யாராயிருக்கும்?

“கோவன் விறகு வெட்டிக்கொண்டு நிண்டவன்...”

நடந்ததைப் பார்க்கப் போன ஒருவர் சொல்லத் தொடங்கியதை முடிக்கமுடியாது தவிக்கிறார். இரண்டு மாதங்களுக்கு முன் தனக்கு வேலை தந்தேயாகவேண்டும் எனக் கெஞ்சியபடி தன்முன் நின்ற கோவர்த்தனன் கருணாவின் நினைவிற்கு வந்தான்.

“பள்ளிக்கூடத்திலை ஒண்டாய்ப் படிச்ச பிள்ளையைக் காதலிச்ச னான் அம்மா. இரண்டு பேரின்ரை வீடுகளிலையும் எதிர்ப்பு. முந்தநாள் அவளை வரச்சொல்லி, கூட்டிக்கொண்டு ஓடிவந்திட்டன்.”

தனது கதையைச் சொல்லிக்கொண்டிருந்தவனின் முகத்தைப் பார்த்தார் கருணா. குழந்தைத் தன்மை மாறாத முகம். “இந்த வயதில் எனன காதல்!” என கருணாவின் மனம் கடிந்துகொண்டது. ஆனால் அவனது தொடர் கெஞ்சல் அவரது மனதை கரைத்துவிட்டது. கோவர்த்தனன் அங்கு வந்து வேலைசெய்ய ஆரம்பித்தான். அவனது பெயரைச் சொல்வதற்கு சிரமப்பட்ட சிலர் அவனது பெயரை கோவன் ஆக்கிவிட்டனர். ஒரு வேலையை ஒப்படைத்தால் குறை காண இடமின்றி செய்து முடிப்பான். நேரத்தை இழுத்து போக்குக் காட்டமாட்டான். அவனுக்கு வேலை கொடுக் காமல் இருந்திருந்தால் மரணம் அவனைக் கொண்டு சென்றிருக்காதோ?

கருணாவின் மனம் எதையெதையெல்லாமோ எண்ணித் தவித்தது.

அவனது மனைவி ஒரு சிறுமி. கல்வி கற்கவேண்டிய வயது. சித்திராவைப் போலில்லாமல் காதல், கலியாணம் என்று ஏதேதோ கற்பனைகளின் வசப்பட்டு அவற்றை நனவாக்கும் ஆசையுடன் வந்து, நிர்க்கதியாகி நிற்கிறாளே! இனி அவளது எதிர்காலம் என்னாகும்?

கருணாவின் கண்களில் திரண்டு சொரிந்த கண்ணீர் அவனுக்காக என்பதைவிட அதில் அவளுக்காகவே அதிகூடிய பங்கு இருந்தது. அவனது மரணக் கிரியையை நிறைவேற்றவோ, அவனது உடலைப் பார்த்து சம்பிர தாயத்துக்காகவெனினும் கண்ணீர் உகுக்கவோகூட இரண்டு பக்கங்களி லிருந்தும் எவரும் வரவில்லை என்ற செய்தியோடு கோவர்த்தனனின் நண்பன் வேற்குமரன் கருணாவிடம் வந்தான். அத்துடன் கோவர்த்தனனின் இறுதிக் கிரியைகளுக்கு உதவுமாறு கோரிக்கையொன்றையும் சேர்த்துக் கொண்டுவந்தான். கருணா அதனை ஏற்றுக்கொண்டார்.

சில நாட்களின் பின்னர் கோவர்த்தனனின் மனைவி செல்வி ஒருநாள், கருணாவைத் தேடிவந்து தனக்கு ஒரு வேலை தருமாறு கெஞ்சிக் கேட்டபோது, தான் பல உற்பத்திகளையும் அங்கு பணி செய்து கொண்டி ருந்தோரையும் குறைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதை விளக்கமாகக் கூறி வேலைக்கு எவரையும் சேர்க்க முடியாது என கருணா தெரிவித்தார்.

“அம்மா, இப்படியெல்லாம் நடக்குமெண்டு நானோ அவரோ கொஞ்சமும் நினைக்கேல்லை. இரண்டு பேருமாய் உழைச்சால் எப்படியோ வாழ்க்கை நடத்தப் போதுமாய் இருக்குமெண்டு நீனைச்சம். எனக்கு வேலை கிடைக்க முன்னமே இப்பிடி நடந்திட்டுது. அம்மா, அப்பாவின்ரை கோவமும் காலப் போக்கிலை போயிடும் எண்டு எதிர்பாத்தம். காலம் போக முதல் அவர் போயிட்டார். அவை கொதிச்சுக்கொண்டிருக்கினம். என்னைப் பார்க்கக்கூட மாட்டம் எண்டு சொல்லிப்போட்டினம். நான் ஏதாவது வருமானத்துக்கு வழி செய்யாவிட்டால் சாப்பாட்டுக்கு என்ன வழி? தற்கொலைதான் செய்யவேணும்.”

செல்வி தற்கொலை செய்வதாகக் கூறியபோது கருணாவின் உள்ளத்தை அக்கினிக் குண்டொன்று ஊடுருவியது போன்றிருந்தது.

“பைத்தியக்காரி மாதிரி கதைக்காதை பிள்ளை. ஒவ்வொரு தருக்கும் ஒவ்வொரு பிரச்சனை இருக்கும். அதைத் தாங்கித்தான் வாழுகினம். இப்பிடிச் சாகத் தொடங்கினால் உலகத்திலை ஒருதரும் இருக்காயினம். நீர் வந்து என்னோடை இரும். வேலையைப் பற்றி பிறகு யோசிப்பம்.” கருணா ஒரு முடிவுக்கு வந்தார்.

செல்வி வந்துசேர்ந்தபோது மிகுந்த மகிழ்ச்சியடைந்தவள் சித்திராவே சித்திராவைவிட செல்விக்கு இரண்டு அல்லது மூன்று

வயதுதான் அதிகமாயிருக்கும் போன்றிருந்தது. ஒத்த வயதினரிடையே ஏற்படும் ஒட்டுறவு இயல்பாகவே அவர்களிடையே ஏற்பட்டது. சித்திரா, பத்மாவுடன் பழகும்போது ஒருவித மரியாதை கொடுத்து வந்தாள். அதனால் பத்மா தன்னிலிருந்து சற்று உயரத்தில் இருப்பதான உணர்வு சித்திராவிற் கிருந்தது. செல்வி தன்னையொத்தவள் என்ற ரீதியில் சித்திரா அவளைச் சந்தித்ததுமே கருத ஆரம்பித்திருந்தாள்.

பத்மாவும் சித்திராவும் அங்கு செய்யும் வேலைகளை செல்வியும் சேர்ந்து செய்யத்தொடங்கினாள். சித்திரா தன் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்தாள். கோவர்த்தனனுடன் புறப்பட்டு வரும்வரை செல்வி பாடசாலைக்குச் சென்றுவந்ததாக அவள் சித்திராவுக்குக் கூறியிருந்தாள்.

அவளும் தன்னுடன் பாடசாலைக்கு வந்து படிக்கலாமே என்ற எண்ணம் சித்திராவுக்கு ஏற்பட்டது. கபடமின்றி "நீங்கள் திரும்பவும் படிக்கத் தொடங்கலாந்தானே செல்வி அக்கா" என சித்திரா செல்வியிடங் கேட்டாள். அதற்கு அவள் பதிலொன்றும் சொல்ாமல் தான் செய்துகொண்டிருந்த பயற்றம் உருண்டை உருட்டும் வேலையில் மிகுந்த அக்கறை காட்டுவது போல் அமர்ந்திருந்தாள். "என்னக்கா, உங்களைத்தான் கேக்கிறன்;; என்றாள் சித்திரா. தியானத்திலிருந்து விழித்தவள் போன்று "என்ன கேட்டனி?" எனக் கேட்டாள் செல்வி.

"என்னோடை சேர்ந்து பள்ளிக்கூடம் வந்து படிக்கலாமே எண்டு கேட்டனான்"

"எனக்குப் படிக்க விருப்பமில்லை. நீ படிப்பு படிப்பு எண்டு எப்படித் தான் ஆசையாய் படிக்கிறாயோ எண்டு யோசிக்கிறனான்."

"அப்படிச் சொல்லாதையுங்கோ. படிக்கவேண்டிய காலத்திலை படிக்கவேணும் அக்கா... வாழ்க்கையிலை முன்னேற படிப்பு அவசியம். முதலிலை படிக்காமல் இருக்கிறது சந்தோசமாயிருக்கும். பிறகு காசு தேவைப்படேக்கைதான் படிக்காமல்விட்டது பிழை எண்டு விளங்கும் காசு உழைக்க மட்டுமில்லை. எங்களுடைய திறமைகளை வளர்க்க, நாங்கள் முன்னேற எல்லாத்துக்கும் படிப்பு அவசியம் அக்கா"

"எப்பிடித்தான் படிக்கிறியளோ? எனக்கெண்டால் விருப்பமே யில்லை. கோவனோடை குடும்பம் நடத்திறது சந்தோசமாயிருந்துது. அது இப்பிடிப் போகுமெண்டு ஆர் நினைச்சது."

சொல்லிக்கொண்டிருக்கையிலேயே செல்வியின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. அது சித்திராவின் பேச்சை இடைநிறுத்தியது.

திடீரென வாகீசனின் நினைவு ஏதோ ஒன்றால் இழுத்துவரப்பட்டு சித்திராவின் ஆழ் மனதிலிருந்து எட்டிப்பார்த்தது.

ஏன்?

அவனிருந்திருந்தால் இப்படி ஒரு விசர் சித்திராவுக்கும் வந்திருக்குமோ? இந்தச் சந்தேகத்தைத் தொடர்ந்து பயங்கரம் ஒன்றி லிருந்து தப்பிவிட்டதான ஆசுவாசம் மனதுட் பரவியது.

சித்திரா, செல்வியின் கல்வி பற்றி சிந்தித்தது கருணாவின் காது களை எப்படியோ சென்றடைந்துவிட்டது.. கோவர்த்தனன் கொல்லப் பட்டதையே நினைத்து செல்வி கவலைப்பட்டுக்கொண்டிராமல் அவளது மன உணர்வுகளை மடை மாற்ற பாடசாலைக்குச் சென்று பயில்வது உதவும் என கருணா கருதினார். செல்வியை அழைத்து இது பற்றிக் கேட்பதே நல்லது என எண்ணி அவளை அழைத்து தன் அபிப்பிராயத்தை விளக்கமாகக் கூறினார்.

“அம்மா, நீங்கள் சொல்லுறது என்னுடைய நன்மைக்குத்தான். ஆனால்...”

பதில் சொல்லத் தொடங்கிய செல்வி எதையோ கூறமுடியாது தயங்கினாள்.

“உனக்கு படிப்பு ஏறாதெண்டு நினைக்கிறாயோ? முதல் பள்ளிக்கூடம் போகத் தொடங்கு. பிறகு மற்றதுகளை யோசிப்பம்.”

அவளை பாடசாலைக்கு அனுப்புவது என்ற முடிவை கருணா தளர்த்தத் தயாரில்லை என்பதை அவரது குரலிலிருந்த உறுதி புலனாக்கியது.

“இல்லை அம்மா. எனக்கு இரண்டு மாதம் சுகமில்லாமல் வரேல்லை. . .அதாலை... இ...

செல்வி மேற்கொண்டு தொடரமுடியாது தடுமாறினாள். ஆனால் கருணாவிற்கு விடயம் விளங்கிவிட்டது.

“கடவுளே! இந்த சின்னப் பிள்ளைக்கு ஒரு குழந்தையா? இது என்ன சோதனை!”

கருணா செல்வியின் எதிர்காலத்தை நினைத்துப் பார்த்து கலங்கி நின்றார். சொல்லவே தடுமாறுகிறாளே. இது அவளது வாழ்க்கையையே தடுமாறவைக்கப் போகிறதே. இப்படி அவளை சிக்கச் செய்தது என்ன?

மெல்ல மெல்ல, இவ்விடயம் சித்திராவிடம் வந்து சேர்ந்தபோது, அவளுக்கு முழுமையாக எதுவும் புரியவில்லை. ஒரு குழந்தை செலவி அக்காவின் வயிற்றில் வளர்கிறது.

எப்படி?

சித்திரா புதிருக்கு விடை காண முற்பட்டாள். “செல்வி அக்கா

விடமே கேட்டறியலாமே.”

முடிவு கண்ட திருப்தியில் மூளை ஓய்வு கொண்டது. சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தாள் சித்திரா.

ஒரு நாள் செல்வி தலை சுற்றுவதாகக் கூறி படுத்திருந்தாள். சாப்பிட்ட உடனேயே சத்தி வந்தது. அதனால் எதையும் உட்கொள்ள அவள் மறுத்ததால் அவளுக்கு அருகேயிருந்து தேநீரை குடிக்கச் செய்யுமாறு சித்திராவை பத்மா அனுப்பியிருந்தாள். சித்திரா சென்று பார்த்தபொழுது, செல்வி சோர்ந்து படுத்திருந்தாள். என்ன நடந்தது இவளுக்கு? என்று பதறிப்போய் அருகே சென்று, காய்ச்சல் காய்கிறதா என்று தொட்டுப் பார்த்தாள்.

செல்வி கண் திறந்து பார்த்தாள். சித்திராவின் கையிலிருந்த கோப்பையைப் பார்த்ததும் “எனக்கு ஒண்டும் வேண்டாம்.” என அழத் தொடங்கினாள்.

“என்ன வருத்தம் அக்கா உங்களுக்கு?”

“எனக்கு ஒரு வருத்தமுமில்லை. வயித்திலை பிள்ளை வந்ததாலை தான் இப்பிடியாம்”

இருவருக்குமே இது புதிய செய்தியாகவே இருந்தது. பல வினாக்கள் தொடராக சித்திராவின் மனதில் தோன்றியபோதிலும் தனக்குத் தரப்பட்ட வேலையை செய்வதில் அவளது கவனம் நிலைத்துக் கிடந்தது.

“எழும்பி இருங்கோ அக்கா. தேத்தண்ணிகூடக் குடிக்காமல் இருந்தால் கூடாது. இதைக் குடியுங்கோ”

சித்திராவின் உருக்கமான வேண்டுதலுக்காக கையில் கோப்பையை வாங்கிய செல்விக்கு தேநீரின் வாசனை நாசியுள் புகுந்ததுமே வயிற்றைக் குமட்டியது.

“என்னக்கா இது? இப்பிடி கஷ்டப்படுறீங்கள்!”

சித்திரா வெளிப்படையாகச் சொல்லியதை, செல்வி பல தடவைகள் தனக்குள் கேட்டு வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறாள். இன்பமோ துன்பமோ தானே அநுபவிக்கும்போதுதான் அதை சரியாக உணர முடிகிறது. பார்த்தோ, கேட்டோ கற்பனை செய்கையில் அது சரியானதாக இருப்பதில்லை. தாயொருவர் குழந்தையைப் பெற்றெடுப் பதை எப்படியெப்படியெல்லாமோ நடித்தும் எழுதியும் உள்ளவற்றைப் பார்த்தும் கேட்டும் கற்பனை செய்தவை அநுபவமாகையில் எவ்வளவு வேறுபடுகிறது!

“என்னக்கா யோசிக்கிறீங்கள்?”

“கலியாணங்கட்டின பிறகு குழந்தை பிறந்தால் பிரச்சனை இருக்காதெண்டு நினைச்சன். அது பிழை எண்டு இப்ப விளங்குது.”

செல்வி கூறியது சித்திராவின் மனதில் ஏற்கனவே இருந்த சந்தேகங்களின் வரிசையில் மேலும் பல சந்தேகங்களையும் சேர்த்து விடுகிறது. அவற்றுள் ஒன்று அவளது நாவிலிருந்து புறப்பட்டது.

“கலியாணம் செய்யாமல் பிள்ளை பிறக்குமோ?”

எனக்கும் இந்தச் சந்தேகம் வந்ததுதான் பிறகு விசயம் விளங்கின தாலைதான் கோவனைக் கலியாணம் செய்யச் சொல்லி பிடிவாதமாய் நிண்டனான்.”

கையிலிருந்த தேநீர் கோப்பையை அருகிலிருந்த மேசையில் வைத்துவிட்டு கதையைத் தொடர்ந்தாள் செல்வி. அவள் தேநீரை வைத்ததைக் கவனிக்காது கதையைக் கிரகிக்கத் தொடங்கினாள் சித்திரா. கதை இதுதான்.

செல்வியின் அயல் வீட்டில் அவளது மாமியின் குடும்பத்தினர் குடியிருந்தனர். ஒரு நாள் அங்கு புதிதாக ஒரு சிறுமி வந்து நிற்பதை அவள் அவதானித்தாள். புதியவள் அங்கே தொடர்ந்து இருந்ததால் அவள் யாரென விசாரித்தாள் செல்வி. மாமாவின் உறவுப் பெண் என மாமி அறிமுகஞ் செய்தாள். மாதங்கள் சில சென்றுமுடிய அச்சிறுமி கருவுற்றிருப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அவளது தாயும் கணவரும் வெளிநாடுகளில் பணியாற்றுவதனால் கருவுற்றிருக்கும் அவளை தாம் அழைத்துவந்து, கவனித்து வருவதாக மாமி கூறினாள். மேலும் சில மாதங்கள் கடந்த நிலையில் ஒரு நாள் மாமி வீட்டில் அசாதாரண பரபரப்பு! காவல் துறை யினரும் வாகனத்தில் வந்திறங்கி, ஏதோ தேடி, விசாரணை நடத்துவது போன்று தோன்றியது. மாமி வீட்டிலிருந்த பரபரப்பு சிறிது தணியவும் ஊரில் கிசுகிசுப்பு அலைமோதியது.

மாமாவின் உறவுப்பெண் ஏமாற்றப்பட்டு கருவுற்று விட்டதால் அவளுடைய அயலுக்கு தெரியவரக்கூடாது என்பதற்காக மாமா தனது வீட்டிற்கு அழைத்து வந்து வைத்திருந்தார். கருவைக் கலைக்க அவர்கள் எடுத்த முயற்சிகள் எல்லாம் நிறைவேறாது போக குழந்தை பிறந்ததும் அதை கொன்று புதைத்துவிட்டார்கள். யாரோ காவல்துறைக்கு இதை அறிவித்துவிட, அவர்கள் வந்து தேடி, சடலத்தையும் கண்டுபிடித்து விட்டார்கள்.

இந்த வதந்தியை வெவ்வேறு மனிதர்கள் வாயிலிருந்து கேட்ட போதுகளிலும் சிலவற்றை அம்மாவிடம் விபரங்கள் கேட்டறிந்த வேளை களிலும் செல்விக்கு பல விடயங்கள் விளங்கின. அப்போதுதான்

குழந்தையொன்று பிறப்பதற்கு கலியாணம் என்ற சடங்கு அவசியமில்லை. ஆண், பெண் உடலுறவாலேயே குழந்தை உருவாகிறது என்பதை அவள் அறிந்துகொண்டாள்.

சித்திரா தேநீரை குடிக்கச் செய்யவேண்டும் என்பதையும் மறந்து செல்வி கூறியவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

"பிள்ளை பிறக்க கலியாணம் தேவையில்லை. ஆனால் கலியாணம் நடக்காமல் பிள்ளை பிறந்தால் தாயும் பிள்ளையும் படும் பாடு பெரும் பாடு. இதாலைதான் அப்பிடி வந்த பிள்ளையைப் பெற்று வளர்க்க எல்லாரும் பயப்பிடுகினம்."

"அதுக்காக தாயே பிள்ளையைக் கொலை செய்யிறது அல்லது எங்கேயாவது எறிகிறது பிழைதானே? தாயொருதி இப்படி செய்யலாமா?"

செல்வி சொல்லி முடிக்குமுன்னர் சித்திரா குறுக்கிட்டாள்.

"பெத்து வளர்க்கேக்கை படுகிற கஷ்டம் முதலிலையே கொண்டு போட்டிருக்க வேணும் எண்டு நினைக்கச் செய்யுதே."

"முதலே கவனமாயிருக்கலாந்தானே?"

"எல்லாம் அனுபவிச்சால்தான் தெரியும்"

செல்வி கூறியதன் அர்த்தம் விளங்காது சித்திரா தடுமாறுகையில் செல்வி தொடர்ந்தாள்.

"எனக்கே ஏன் இது வந்துதோ எண்டிருக்கு. ஒருவேளை கோவன் இருந்திருந்தால் எங்கடை பிள்ளை எண்டு சந்தோசப்பட்டிருப்பமோ என்னவோ. ஆனால் இப்ப இதையிட்டு சந்தோசப்பட இயலேல்லை. என்னுடைய வயசுப் பிள்ளைகளோடை சேர்ந்து விளையாட, கோயில் குளத்துக்கு போய்வர ஆசையாயிருக்கு."

"சின்னப் பிள்ளையாயிருக்கும்போது குழந்தை பிறந்தாலும் அவளுக்கு தான் தாய் என்ற மனநிலையை விட சிறுமிக்கான மனோ பாவந்தான் இருக்குமோ?"

செல்வியின் பேச்சு சித்திராவை இவ்வாறு சிந்திக்க வைத்தது. தேநீரை மறந்து அவள் இச்சிந்தனையில் ஆழ்ந்தாள்.

"தன் குழந்தை என்ற பாசம் உள்ளே இருந்தாலும் அதனை அலட்சியப்படுத்தி விளையாட்டுத் தனமாக நடக்கும் தன்மையும் சிறுவயதில் இருக்குமோ? அதனால்தான் குழந்தையை ஒரு பொம்மையை எறிவது போன்று தூக்கியெறிய இயல்கிறதோ என்னவோ?"

திடீரென செல்வி தேநீர் குடிக்காதது நினைவிற்கு வந்தது. எழுந்து கோப்பையை எடுத்து "முதலிலை இதைக் குடிச்சிட்டு பிறகு கதையுங்கோ"

என வற்புறுத்தினாள். அவளது வற்புறுத்தலுக்காக அதை வாங்கிக் குடித்தாள் செல்வி வயிற்றைக் குமட்டத் தொடங்கியது. வயிற்றினுள்ளே இருக்கும் அவ்வளவும் வாயினூடாக வெளிவரப்போகிறதோ என அவளுக்குத் தோன்றியது.

குழந்தையுடன் கொஞ்சி விளையாடும்போது பெற்றெடுக்கும்வரை பட்ட வேதனைகளெல்லாம் மறந்துபோய்விடும் என்று அம்மா சொல்வது உண்மையாக இருக்காது என்று செல்விக்குப் பட்டது.

நான் நன்றாக வாழவேண்டும் என்பதற்காக என் அம்மா எவ்வளவு கஷ்டங்கள் பட்டாள்! என்னைக் காப்பாற்றுவதற்காக கடைசியில் உயிரை விட்டாள் தாய் அன்பே உருவானவள்.

மாங்கனி மிகுந்த சுவையுடையது. அது நன்றாக முற்றி பழுக்கும் போதுதான் மாம்பழத்தின் சுவை நிறைவாகவிருக்கும். எவ்வளவு முற்றாது பிஞ்சாக இருக்குமோ அந்த அளவிற்கு அது சுவை குன்றியதாக இருக்கும். விளையாடி மகிழும் பருவத்தில் தன் காம உணர்ச்சியைத் தீர்ப்பதற்கு உபயோகித்து குழந்தையைப் பெற்று பாலூட்டி வளர்க்கச் செய்தால் மாம்பிஞ்சை பழுக்க வைத்த கதை போலத்தானாகும்.

அவசரமாக எழுந்த செல்வி குமட்டிக் குமட்டி உவாந்தி எடுத்த சத்தம் சித்திராவின் சிந்தனையை இழுத்து நிறுத்தியது. அவள் ஓடிச் சென்று செல்வியை அணைத்துத் தாங்கிக்கொண்டாள்.

.

# 9

ஈருருளியின் வேகத்தை அதிகரிக்க முயன்றாள் சித்திரா. மாலை நேரம் கடந்துபோய்க்கொண்டிருந்தது. முன்னர் சென்றிராத கடையை தேடிப் பிடித்து நிலுவை பற்றி உரையாடி முடிவொன்றுடன் திரும்ப நிச்சயம் இருள் சூழ்ந்துவிடும் என அறிவு அச்சுறுத்தியது. அவளையொத்த அவசரத்திலேயே ஏனையோரும் இயங்கிக்கொண்டிருந்தனர். வாகன நெரிசலினால் அவளது வேகம் மேலும் மட்டுப்படுத்தப்பட்டது. “கொஞ்சம் முந்தி  வெளிக்கிட்டிருக்கலாம்” என்று மனம் பச்சாத்தாபப்பட்டது.

இதையும்விட முன்பாகப் புறப்பட்டிருக்க முடியாது. அவள் பாட சாலையிலிருந்து வந்ததுமே அம்மா உடன் வருமாறு கூறியதாக பத்மா தெரிவித்தாள். அதிகம் தாமதிக்காது சித்திரா கருணா அம்மாவிடம் சென்ற போது அவர் உடனடியாக இக்கடன் அறவீட்டைச் செய்யவேண்டுமென அபிப்பிராயப்பட்டார். சித்திரா சென்று உடை மாற்றிமுடியுமுன்னரே அறைக்கு தேநீர் வந்தது. அதை அருந்தியவுடன் அவள் புறப்பட்டுவிட்டாள்.

அவள் தேடிச் செல்லும் கடை சந்தைக்கு முன் பக்கம் அமைந்திருப்பதாக அம்மா கூறியிருந்தார். எனவே கண்டுபிடிப்பது இலகு வாக இருக்கும் என்ற நம்பிக்கை அவளுக்கிருந்தது. சந்தை அண்மித்ததும் ஈருருளியிலிருந்து இறங்கினாள் சித்திரா. நடந்து செல்வது கடைகளின் பெயர்ப் பலகைகளை கவனிக்க வசதியாக இருக்குமென அவள் கருதி னாள். அவள் நினைத்தது போலவே “அரங்கன் பல்பொருள் அங்காடி” அவளது பார்வைக்குள் சிக்கியது. ஈருருளி பாதுகாப்பு நிலையமும் அருகிலேயே தென்பட்டதால், அங்கு போய் ஈருருளியை வைத்துவிட்டு கடைக்குச் சென்றாள்.

சிறுவனொருவன் ஏனோ தானோவென்று கடையினுள் நின்றிருந் தான். பெயரிலிருந்த பல்பொருட்களை கடையினுள் காணவில்லை. அங்குமிங்குமாக சில பொருட்கள். இதற்கு எப்படி கடனடிப்படையில் இரு தடவைகள் பொருட்களை வினியோகித்தார்கள்? நீண்ட கால வாடிக்கை யாளர். ஆனால் கடை  இப்படி கிடக்கிறதே!

“திருவரங்கன் அண்ணை இருக்கிறாரோ?”

சிந்தனை ஓடிக்கொண்டிருக்கையிலேயே அங்கு நின்ற சிறுவனிடம் சித்திரா கேட்டாள்.

“அண்ணை ஆஸ்பத்திரிக்குப் போட்டார்”

“அவருக்கென்ன வருத்தம்?”

ஒருவர் நோயுற்றிருக்கிறரே என்ற அனுதாபத்தைவிட விபரமறியும் தேடல், அவளது மனோவியல்பையும் விஞ்சி அவளை செயற்பட வைத்தது. தங்கள் கடனை மீளப் பெற இயலாதுபோய்விடுமோ என்னும் தவிப்பே அவளது கேள்வியில் மேலோங்கி நின்றது போலிருந்தது.

“அவருக்கொண்டுமில்லை. அவரின்ரை அந்தா அண்ணை வந்திட்டார்.”

சிறுவனின் பார்வை சென்ற திசையில் சித்திராவின் கண்களும் போய், திருவரங்கனை அடையாளங் கண்டுகொண்டன. உயர்ந்த, அதற் கேற்ற உடல்வாகு கொண்ட வாட்டசாட்டமான உருவம். “ஆள் பாதி. ஆடைபாதி.” என ஒருவரின் தோற்றத்தை மதிப்பீடு செய்வதற்கு கூறுவார்கள். அந்த மிகுதிப் பாதி அலங்கோலமாகிக் கிடந்தது. உடை, நீரைக் கண்டு நீண்ட நாட்களாகியிருக்க வேண்டும்.

“இவரின் லட்சணந்தான் கடையிலும் தெரிகிறது.”

சித்திராவின் மனதினுள்ளே நிகழ்ந்த கணிப்பீடு இது.

“தம்பி, ஆரும் வந்தவையோ?”

அவன் வரும்போதே கேள்வியுடன் வந்தான்.

“இந்த அக்கா மட்டுந்தான் இவ இப்பதான் வந்தவ.”

“அக்காவுக்கு என்ன வேணும்?”

திருவரங்கனுக்கு சித்திராவைவிட நான்கைந்து வயது கூட இருக்கும்போலிருந்தது. ஆனாலும் சிறுவனை அடியொற்றியோ மரியாதை கருதியோ அவளை “அக்கா” என்றழைத்தான்.

“கருணா அம்மா அனுப்பினவ.”

“அம்மாவோ?”

வேதனை, வெட்கம் எல்லாம் அந்த “அம்மாவோ?”வில் குழைந்து கிடந்ததை சித்திராவின் மனநிலை, அவளை கவனிக்க விடவில்லை.

“நீண்ட கால நிலுவை. காசு வாங்கிவரச் சொன்னார்.”

சித்திராவின் குரலில் சற்று காரம் கலந்திருந்தது. சிறுமியொருத்தி யின் முன்னே கடன்காரனாக நிற்க நேர்ந்ததை அவன் பெரியதொரு

அவமானமாகக் கருதினான். தன் மனதை சமநிலைப்படுத்திக்கொண்ட அவன் “நான் காசைத் தராமலிருக்கிறது பிழைதான். திடீரென்டு ஒரு கஷ்டம் வந்திட்டுது... கொஞ்ச நாள் பொறுத்துக்கொள்ளுங்கோ. நிச்சய மாய்த் தருவன்.” என கெஞ்சும் குரலில் கேட்டான்.

“நன்றாக வியாபாரம் நடக்கிற நாட்களிலே கஷ்டங்கள் பிரச்சினை கள் வாற நேரத்துக்கெண்டு ஒரளவு காசை ஒதுக்கி வைச்சிருக்க வேணும். இப்போ அது பயன்பட்டிருக்கும்”

“அதெல்லாம் முடிஞ்சு கடையின்ரை முதலையும் முழுங்கிக் கொண்டிருக்கிற செலவக்கா.”

“அப்படியென்டால் எப்படி கடன கட்டப்போறீங்கள்?”

“சீட்டொண்டு போட்டிருக்கிறன். இரண்டு தவணையாய் எடுக்கப் பாக்கிறன். கூடின கழிவுக்கு எடுக்க மனம் வரேல்லை. அடுத்த முறை எப்படியிருந்தாலும் எடுக்கத்தான்வேணும்.”

இதுவரையான உரையாடல் திருவரங்கனை பட்டறிவும் திறமையும் உடையவனாகவே இனங் காட்டியது. ஏமாற்றுபவனாகவும் தெரியவில்லை. அதனால் “உங்களுக்கு என்ன பிரச்சனை?” எனக்குச் சொல்லலாம் என்றால் சொல்லுங்கள்;; என தயக்கத்துடன் கேட்டாள் சித்திரா.

“என்னுடைய பிரச்சனையை நான்தான் தீர்க்கவேணும். மற்றவை யிடம் சொல்லி அனுதாபம் பெற்று வாழ எனக்கு விருப்பமில்லை. நீங்கள் கேட்கிறதாலே சொல்கிறன். என்னுடைய அம்மாவுக்கு கான்ஸர். குடலிலை. அப்பா இல்லை. அம்மாதான் எல்லாம். கடை போட்டுத் தந்தது மட்டு மில்லை. தேவைக்கு கடைக்கு வந்து உதவிகளும் செய்வா. அவ படுத்தது எனக்குப் பெரிய தாக்கம்”

“எனக்கு விளங்குது. உங்களைக் கவலைப்பட வைச்சிட்டன். மன்னியுங்கோ.”

சித்திராவினுள் அவளது கடந்த காலம் ஓடோடி வந்து நின்று திருவரங்கனின் பேச்சை இவ்வாறு இடைநிறுத்த வைத்தது. “நான் கருணா அம்மாவிடம் காரணத்தைச் சொல்லுறன்.” என கூறியபடியே அவள் நடக்கத் தொடங்கினாள். “உன் கண்களில் கண்ணீர் வெளிவருமுன் புறப்படு” என மனம் அவளது முதுகில் தள்ளி அனுப்பியது.

“அம்மாவை கருணாஅம்மாவுக்குத் தெரியும்.தயவுசெய்து, கொஞ்சம் பொறுக்கச் சொல்லுங்கோ”

அவளுக்குக் கேட்கவேண்டும் என்பதற்காக அவசர அவசரமாக கடைக்கு வெளியே வந்து திருவரங்கன் கூறியவை அவளைப் பின்

தொடர்ந்து காதுகளுட் புகுந்தன.

கருணா அம்மாவிடம் சென்று நிகழ்ந்தவற்றை ஒப்புவித்தாள் சித்திரா.

“பாவம். அவன் நல்ல பிள்ளை. சரியான கஷ்டத்துக்குள்ளை மாட்டுப்பட்டிட்டான் போல. கொஞ்சம் விட்டுப் பார்பம்.”

அனைத்தையும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த கருணா இறுதியில் எடுத்த தீர்மானம் இது. ஏற்கனவே “தவறேதும் செய்து விட்டேனோ? இவ்வளவு கடுமையாக பேசியிருக்கக் கூடாதோ?” என் றெல்லாம் உள்ளத்துள் எழுந்த ஐயங்களுள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த சித்திராவுக்கு சஞ்சலம் அதிகரித்தது.

“நான் கதைச்சது பிழையோ அம்மா??”

தன் கலக்கத்தை சட்டென வார்த்தைகளாக்கினாள் சித்திரா. அம்மா சொல்லியதை தவறாகப் புரிந்துகொண்டு செயற்பட்டுவிட்டேனோ என்ற தவிப்பும் அம்மாவுடனான உரையாடலை மீட்டுப்பார்க்கச் செய்தது.

“பிழை உம்முடையதில்லை. என்னுடையதுதான். நான் முழுமை யான விபரஞ் சொல்லியிருக்கவேணும். எனக்கும் ஒரு சந்தேகம் வந்திட்டுது. நாங்கள் வாடிக்கையாளரைப் பற்றி வைத்திருக்கிற கணிப்பீடு சில வேளையில பிழைச்சும் போறதாலை கவனமாய் இருக்கவேண்டி இருக்கு. திருவரங்கன் தன்னுடைய பிரச்சனைகளைச் சொல்லி தவணை கேட்டிருக்கவேணும். அப்படிச் செய்திருந்தால் எனக்கும் சந்தேகம் வந்திருக்காது. உம்மையும் அனுப்பியிருக்கமாட்டன். எப்படி இருந்தாலும் இதுவரை அவனுடைய கொடுக்கல் வாங்கல் நல்லாயிருந்ததைச் சொல்லாதது என்னுடைய பிழைதான்.”

கருணாவின் விளக்கம் மனதிற்கு ஓர் ஆறுதலைத் தந்தாலும் உள்ளே சிறு முட்கூர் உறுத்திக்கொண்டே இருந்தது

திருவரங்கனின் உள்ளத்திலும் சித்திரா பாதிப்பை ஏற்படுத்தி யிருந்தாள். அவளை நிமிர்ந்து நிற்க வைத்திருந்த ஆளுமை அவனிடம் வியப்பையும் அதன் காரணமாக ஈர்ப்பையும் ஏற்படுத்தியிருந்தது. தன்னை ஆகர்ஷித்தவள் முன் தான் குறுகி நின்றதான தாழ்வுணர்ச்சியுள் அவன் ஆழப் புதையுண்டு கிடந்தான். அதிலிருந்து மீண்டெழ வேண்டும். பேருருவம் பெற்று விண்தொட்டு நின்று சித்திராவை வியக்கவைக்க வேண்டும். இப்படி எத்தனையோ ஆசைகள் தோன்றி அவனுக்கு உத்வேகங் கொடுக்க முயன்றன.

ஏன் அவளை வியக்கவைக்கவேண்டும்? அந்த ஆர்வம் ஏன் ஏற்படுகிறது?

## 10

மைவிழி பிறந்து இரண்டு மாதங்கள் கடந்துவிட்டதால் அவளையும் தூக்கிக்கொண்டு வெளியில் வந்து உலவி தன்னாலியன்றவற்றை செய்ய செல்வி ஆரம்பித்திருந்தாள் சித்திரா பாடசாலைக்குச் செல்லும்போது வாசல்வரை வந்து வழியனுப்பிவைப்பதை வழமையாக்கியிருந்தாள். மைவிழி பிறந்தவேளையோ என்னவோ நாட்டில் நிலவிய போர்ச் சூழல் மாறி அமைதி பரவ ஆரம்பித்திருந்தது. இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டு இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்திருந்தது. இயல்பு நிலை திரும்புவதாக மக்கள் நம்பத் தொடங்கியிருந்தனர். கருணாவின் நிறுவனம் உற்சாகமாக ஓடத்தொடங்கியிருந்தது. முற்கூட்டியே கேட்ட போது பலகாரம் செய்துகொடுக்க இயலாதவாறு பொருட்களில்லாது தடுமாறும் நிலை மாறிவிடும் என்ற நம்பிக்கை துளிர்விட்டிருந்தது. அதனால் வந்த வாடிக்கையாளரை திருப்பி அனுப்பாது கவனிக்கும் பொறுப்பை கருணா பத்மாவிடம் கையளித்திருந்தார்.

அதே வேளையில் கருணாவிடம் வந்தடைந்த முதுமை நோய்களையும் கொண்டுவந்து அவளிடம் சேர்த்திருந்தது. நிறுவனத்தை கொண்டு நடத்த தேவையான பயிற்சிகளை பத்மாவிற்கும் சித்திராவிற்கும் அளிக்கத் தொடங்கியிருந்தார் கருணா. தான் பொறுப்புகளிலிருந்து விலகியிருந்து கொண்டு அவர்களிடமே முழு நிர்வாகத்தையும் விட்டிருந்தார். தேவையான ஆலோசனைகளை வழங்கி நெறிப்படுத்துவார்.

சித்திரா படிக்கவேண்டும் என்ற உறுதியுடனிருந்தாள். பல்வேறு சந்தர்ப்பங்களில் அவள் கல்வியைத் தொடர முடியாது தடைகள் ஏற்பட்ட போதும் அவளது உறுதி கல்வியைத் தொடர வழிவகுத்திருந்தது எனினும் தன் வயதொத்தவர்களைவிட அவள் பின்தங்கியே படிக்க நேர்ந்தது. அவளது ஆர்வத்தைப் புரிந்துகொண்ட கருணா, சித்திரா கல்வி பயிலத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதில் கவனமாகவிருந்தார். அதனால் அவளிடம் அதிக பொறுப்புகள் கொடுக்கப்படாவிட்டாலும் அவள் அங்கு வந்த காலம் முதல் நிறுவன வேலைகளில் ஈடுபட்டு வந்ததால்

இயல்பான திறமை நிறுவன நிர்வாகத்தையும் கொண்டு நடத்தக்கூடிய ஆற்றலை அவளுள் வளர்ந்துவந்தது.

நாட்டு நிலை மாற்றமுற்றதால் வர்த்தக நிலையங்களும் தம் வியாபார தேவைகளுக்கும் நிறுவனத்தின் உற்பத்திகளை கோர ஆரம்பித்தன. வேலைகள் அதிகரிக்கவும் பத்மா மேலதிக வேலைப் பழுவால் நெருக்கீடுகளுக்கு முகங்கொடுப்பதை கருணா அவதானித்து விட்டு வெளி வியாபாரப் பொறுப்பை தான் கவனிக்க ஆரம்பித்தார். நேரே சென்று பணஅறவீடு செய்வது போன்ற வேலைகளை அவராலும் செய்யவியலாத வேளைகளில் சித்திரா அவருக்கு உதவியாகவிருந்தாள்.

கருணா, செல்வியிடம் அதிகம் பொறுப்புகளை ஒப்படைக்க வில்லை. ஆரம்பத்தில் செல்வியும் சித்திரா போன்று தன்னுடன் இருப்பாள் படிப்பாள் எனக் கருதிய கருணா நாட்கள் கடந்துபோகையில் அவளை அவதானித்து படிப்படியாக தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டார். செல்வி யும் சித்திராவும் ஒருங்கே இணை பிரியாது சேர்ந்து திரிந்தாலும் ஒத்த குணாதிசயங்கள் அவர்களிடையே இல்லை என்ற முடிவிற்கு வந்திருந்தார். வேற்குமரன் உறவு கொண்டாடி செல்வியிடம் வந்துபோவதும் கருணாவிற்குப் பிடிக்கவில்லை.

கோவர்த்தனனின் நண்பன் என அறிமுகப்படுத்தப்பட்ட வேற்குமரனை தன் சித்தியின் மகன் என்று தற்போது செல்வி சொல்வதும் கருணாவின் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. அவனுடன் செல்வி பேசிப் பழகும் முறை சகோதர பாவத்தில் பழகுவதாக கருணாவுக்குத் தோன்றவில்லை. ஐயுறவுடன் காலம் கழிவதை கருணா விரும்பவில்லை. அவளுடன் பேசி அறிவுரை கூறி வழிப்படுத்தவேண்டியது தன் கடமை என்ற முடிவிற்கு வந்தார்.

“செல்வி, எங்களுடைய சமுதாயத்தில் பெண்கள் கவனமாக இருக்கவேண்டும். கொஞ்சம் சறுக்கினாலும் எங்களைக் கொண்டுபோய் ஆழ் குளிக்குள் தள்ளி சித்திரவதை செய்துகொண்டே இருப்பார்கள். அதே நேரம் எத்தனையோ ஆசைகளைக் காட்டி, சுவர்க்கத்துக்குக் கூட்டிக் கொண்டு போகிறோம் என்டு சொல்லி நரகத்துக்கு அனுப்ப நிறைய ஆட்கள் இருக்கிறார்கள். நாங்கள்தான் கவனமாயிருக்கவணும். நல்லாய் உதவி செய்து பாசமாய் பழகுவினம். பிரச்சனை ஏதும் வந்தால் ஆட்களைக் காணேலாது. நீர் ஏற்கனவே கஷ்டப்படுகிறீர். கவனமாய் இரும்”

கருணா கூறிக்கொண்டிருக்கையில், கவிதாவைத் துரத்தி விளையாடும் மைவிழியைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தாள் செல்வி பொறுமையுடன் அவளைப் பார்த்தவாறு “நீர் இப்படிச் சிரிச்சுக் கொண்டிருக்கவேண்டும் எண்டுதான் இதைச் சொல்கிறன். கேட்டு

நடந்தால் உமக்குத்தான் நல்லது." என அழுத்திக் கூறினார் கருணா. செல்வி தலை குனிந்தவாறு அமைதி காத்தாள். கருணா பேச்சைத் தொடராது எழுந்து உள்ளே சென்றுவிட்டார்

முறுக்கு செய்வதில் கருத்தாயிருந்த சித்திராவின் முதுகின்மீது மைவிழி வந்து சாய்ந்து கழுத்தைக் கட்டிக் கொண்டபோது தான் சித்திரா வின் விழிகளுக்குச் செல்வியைத் தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

"மைகுட்டியின்ரை அம்மா எங்கேடா? செல்லக்குட்டி ஆரோடை வந்தவள்?"

தன் தேடல் வெற்றி பெறாததனால் குழந்தையிடம் கேட்டுப் பார்த்தும் பயனற்றுப் போக சித்திரா தன் வேலையை அருகே நின்றவளிடம் ஒப்படைத்துவிட்டு மைவிழியைத் தூக்கிக்கொண்டு செல்வியைத் தேடி உள்ளே சென்றாள். அவர்களின் அறையுள் நாற்காலியில் செல்வி அமர்ந் திருந்தாள். அவளுடைய கண்கள் ஜன்னலினூடாக வெளியே வெறித்துக் கொண்டிருந்தன. அழுதிருக்கிறாள் என்பதை முகம் கூறியது.

இப்படி அவள் அழுதுகொண்டிருப்பதை அடிக்கடி சித்திரா காண நேர்வதால் பதற்றமடையவில்லை. முதன்முதலில் கண்டபோதுதான் பதறி விட்டாள். என்ன ஏதென்று செல்வியிடம் விசாரித்தபோது அவள் கோவனின் நினைவு வந்துவிட்டதாகக் கூறினாள்.

"அம்மா போய்விட்ட பின்பு எனக்கு ஒருவருமில்லாமல் போன மாதிரிததான் செல்வி அக்காவின் நிலைமையும் ஆகிப்போய்விட்டது. பாவம். எனக்கென்றாலும் படிப்பு, வேலை என்று நேரம் போகிறது. பாவம் செல்வி அக்கா" என சித்திரா நினைத்துக்கொள்வாள்.

"அக்கா மைக்குட்டி பலகாரம் செய்கிற இடத்துக்கு வந்திட்டாள். நீங்கள் அவளோடை விளையாடிக்கொண்டிருந்தால் கவலைப்படாமல் இருக்கலாம்."

"எனக்கு சந்தோசமாயிருக்க விதியில்லை. நான் அழவேணும் எண்டுதான் எல்லாரும் ஆசைப்படுகினம்." கோப நெருப்பில் தோய்ந்து வந்து கொட்டிய சொற்கள் சித்திராவை உருகச் செய்தன.

"என்னக்கா நடந்தது? ஏன் இப்படிக் கதைக்கிறீங்கள்?"

"அம்மாவும் அப்பாவும் என்னைப் பார்க்க ஆசைப்படுகினமாம்."

"அது சந்தோசமான விசயந்தானே? அதுக்கேன் அழுகிறீங்கள்?"

"கருணாம்மா என்னைப் போகவிடமாட்டன் என்கிறா."

"அம்மாவோ! உங்களிட்டை நேரை சொன்னவவோ?"

செல்வி கூறியதை நம்பவியலாது சித்திரா கேட்டாள். அதற்குப்

பதிலாக செல்வியின் முகத்தில் ஏளனம் ததும்பியது.

“நான்தான் அம்மா அப்பாவைப் போய்ப் பாக்கப்போறன் என்டு அவவிட்டை கேட்டனான். விடமுடியாதெண்டு எனக்குத்தான் சொன்னவ.”

“அம்மா அப்பிடிச் சொல்லமாட்டாவே.” சித்திராவின் மனதிலிருந்த நம்பிக்கையீனம் சொற்களாக வெளிவந்தது.

“எங்களைப் போகவிட்டால் அநாதைகளை பாதுகாக்கிறேன். என்டு வேசம் போடேலாதே.”

மீண்டும் தீப் பொறிகள்.

“என்ன நடந்ததென்டு விவரமாய்ச் சொல்லுங்கோ.;;

“வேற்குமரனிட்டை என்னைப் பாக்க விருப்பமாயிருக்கெண்டு அம்மாவும் அப்பாவும சொல்லிவிட்டவை. போய்ப் பாக்க என்டு நான் கேட்க, கருணாம்மா போகவிடமாட்டன் என்டு சொல்லீட்டா.”

“நீங்க கேட்கையிலை வேற்குமரன் நிண்டவரோ?” என சித்திரா குறுக்கிட்டு கேட்டாள்.

“நிண்டவர். அவரைக் கூப்பிட்டும் அம்மா ஏதோ விசாரணை நடத்தினவ.”

“ஏதோ எண்டு சொல்லுறீங்கள். உங்களுக்குத் தெரியாதோ?”

“என்னை வெளியாலை விட்டுப்போட்டு தனிய வைச்சுத்தான் கதைச்சவ. அவரும் கதைச்சதெல்லாத்தையும் எனக்குச் சொல்லேல்லைப் போல.”

புகையும் சினம், தலைகாட்டிய கவலை எல்லாம் செல்வியின் பேச்சினுள் கலந்து கிடப்பதாய் சித்திராவுக்குத் தோன்றியது. தன்னிட மிருந்து கீழிறங்க முயற்சித்த மைவிழியை இறக்கிவிட்டு செல்வி கூறிய அனைத்தையும் மூளைக்குள் ஏற்றி கோவைப்படுத்திப் பார்த்துக்கொண்ட சித்திரா, “நான் அம்மாவிட்டைக் கதைச்சுப் பார்க்கட்டோ?” எனக் கேட்டாள். யார் குற்றினாலும் அரிசியானால் சரி என்ற மனநிலையிலிருந்த செல்வி அதற்கு ஒப்புதல் அளித்தாளெனினும் சாதகமான பதில் கிடைக்குமென சிறிதேனும் நம்பவில்லை.

கருணாவைத் தேடிப் போகும்போது சித்திராவின் உள்ளத்துள் சில சந்தேகங்கள் எழ, அவற்றுக்கான பதில்களை தானே சிந்தித்துத் தேடிக் கண்டுகொள்ள முயன்றுகொண்டிருந்தாள்.

மகள் அநாதரவாக நின்ற வேளையில் இரங்காத பெற்றோருக்கு இப்போது ஏன் காணும் ஆசை ஏற்பட்டது?

அப்போது, செல்வி அவர்களுக்குச் சொல்லாது ஓடிவந்த கோபம்

ஆறிவிடாத அண்மைக் காலம். இப்போது, நிலைமை வேறு. காலம் போக, கோபம் குறைந்து வர, பேரப் பிள்ளையைப் பற்றியும் கேள்விப்பட மனம் மாறியிருக்கலாம்.

அந்த கஷ்ட காலத்திலும் பின்னர் குழந்தையைப் பெற்றெடுத்த வேளையிலும் பொறுப்பை ஏற்று பேருதவி செய்த கருணா அம்மாவைப் பற்றி இப்படியெல்லாம் பேச எப்படி செல்வியால் இயல்கிறது?

பெற்றோரை பார்க்க முடியாதுபோன மனத்தாக்கம் காரணமாக இருக்குமோ?

பெற்றோரும் மகளும் சந்திப்பதை அம்மா தடுக்கவேமாட்டார் என்று முழுமையாக நம்பிய சித்திராவின் மனம் தோன்றிய சந்தேகங் களுக்கெல்லாம் சமாதானங்களை கண்டுகொண்டிருந்தது. ஆனால் அம்மாவின் பதிலைக் கேட்டதும் சாய்ந்து கிடந்த சந்தேகங்கள் தலை நிமிர்ந்ததுடன் நெஞ்சு நிமிர்த்தியும் நின்றன.

சித்திரா சிறிதும் எதிர்பார்க்காத பதில்.

மைவிழியின் கதறல் எல்லோர் மனங்களையும் உருக்கிக் கொண்டிருந்தது. பிறந்தது முதல் தாயைப் பிரிந்தறியாத குழந்தை அவள். கவிதாவுடன் விளையாடவிட்டு போக்குக் காட்டிவிட்டு வேற்குமரனுடன் போய்விட்டாள் அம்மா. விளையாட்டினிடையே தாயைத் தேடத் தொடங்கி யவள், அம்மாவைக் காணாததால் விம்மி வெடித்து வீரிட்டழ ஆரம்பித்தவள் தான் இன்னும் ஓய்ந்தபாடில்லை. பத்மாவும் சித்திராவும் மட்டுமன்றி நிறுவனத்தில் பணியாற்றும் மைவிழிக்கு பழக்கமானோரும் மாறி மாறி எவ்வளவோ முயன்றும் அவளது அழுகை ஓயவில்லை.

“பச்சைக் குழந்தையை விட்டிட்டு போக அந்தப் பிள்ளைக்கு எப்பிடி மனம் வந்துதோ?”

“தாய்தகப்பனை பார்க்க ஆசையாயிருக்கும்தான். ஆனா தன்ரை பிள்ளையைப் பற்றியும் யோசிக்க வேணுமெல்லோ?”

“அதுவும் குழந்தை பெத்தாலும் சின்னப்பிள்ளைதானே. விவரம் விளங்கேல்லை.”

“பிள்ளையையும் கொண்டுபோயிருக்கலாமே?”

“அவை குலாவுறத்துக்கு இடைஞ்சல் எண்டு நினைச்சிருப்பள்.”

மைவிழியின் கதறல் அங்கிருந்தோரின் விமரிசனத்திற்குக் காரணமாகி ஏளனப் பேச்சுக்கும் வழிவகுத்தது.

கதறலின் உச்சம் செல்வதும் மீள்வதுமாய் அழுது அழுது களைப் பினால் உறக்க நிலைக்கு இழுத்துச் செல்லப்பட்டிருந்த குழந்தையின்

வாய்க்குள் பாற் போத்தலை மெல்ல செலுத்தி, அவள் உமிழ்ந்து குடிப்பதற்கேற்றதாகப் பிடித்துக்கொண்டு அருகில் அமர்ந்தாள் சித்திரா. குழந்தையைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இன்னுமே விம்மல் தணியாமல் வியர்வை கசிய படுத்திருந்த மைவிழியை ஆதரவாக வருடி தலையைக் கோதிவிட்டாள் சித்திரா.

மகளை விட்டுவிட்டு இப்படி செல்வி போவாள் என சித்திரா எதிர் பார்க்கவில்லை. கருணா அம்மாவும் அவ்வாறே கருதியிருக்கவேண்டுமென அவளுக்குத் தோன்றியது. அவர் ஏன் செல்வி பெற்றவர்களைப் போய்ச் சந்திப்பதை விரும்பவில்லை என்பது சித்திராவுக்குப் புரியவில்லை. செல்வியிடம் கேட்டுவிட்டு கருணாவிடம் பேசச் சென்றபோதும் அனுமதி கிடைக்கும் என்ற பரிபூரண நம்பிக்கையுடனேயே சித்திரா சென்றாள். ஆனால் எவ்வளவு எடுத்துக்கூறியும் அம்மா அனுமதி தர பிடிவாதமாக மறுத்துவிட்டார். காரணத்தையும் வெளியிடாது “நீர் சின்னப்பிள்ளை. உமக்கு விளங்காது” என்று சொல்லியதை அவளால் ஏற்கமுடியாதிருந்தது. ஆனால் அப்போதும் செல்வி அம்மாவைப் பற்றிக் கூறிய காரணத்தை அவளது மனம் ஏற்க மறுத்தது. போவதானால் குழந்தையை விட்டுவிட்டுப் போகட்டும் என அம்மா விதித்த நிபந்தனை செல்வி போகாது தடுப்பதற்கே என்பது சித்திராவின் ஊகமாயிருந்தது.

எல்லோரது எதிர்பார்ப்பையும் பொடியாக்கி மகளைப் பிரிந்து செல்லவென செல்வி வந்து நின்றபோது தனது முடிவு மிகமிகச் சரியான தென கருணா நினைத்துக்கொண்டார்.

குழந்தையுடன் செல்வியைக் கூட்டிச் செல்லவென வந்த வேற்குமரனுக்கு அவள் தனியே வந்தது ஒருவித நிம்மதியைத் தந்தது. செல்வி எதிர்பார்த்த குடும்ப வாழ்க்கை மீளவும் கிடைக்கப்போகும் கற்பனை அலைகளின் ஆர்ப்பரிப்பின் இடையில் மைவிழியின் பிரிவு, அவளது மனதின் எங்கோ ஒரு மூலைக்கு அடித்துச் செல்லப்பட்டு ஒதுங்கிக் கிடந்தது.

மீண்டும் வந்து மைவிழியை அழைத்துச் சென்று மகளாக்கிக் கொள்ள வேற்குமரனும் விரும்பவில்லை. கருணா அமமாவின் முன்னால் போய் நிற்கும் துணிவு செல்விக்கும் இருக்கவில்லை.

பத்மாவின் இரண்டாவது மகளாக மைவிழி வளரத் தொடங்கினாள்.

# 11

மழை பொழிந்து ஊர் செழிக்கப்போகிறது எனக் மகிழ்வோடு காத்திருந்தபோது புயல் வரும் அறிகுறிகள் புலனாகத் தொடங்கியது போன்று வந்திருந்த பாரதப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே முறுகல் நிலை உருவாகி அது படிப்படியாக உச்சிக்கு ஏறி படீரென மோதல் மூண்டது. இதனால் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து கொண்டி ருந்தவர்களது கற்பனைகள், எதிர்பார்ப்புகள், திட்டங்கள் அனைத்தும் திசை மாறின.

நண்பர்கள் என நம்பியிருந்தவர்கள் திடீரென கொடிய பகைவராக மாறிவிட்டதை அறியாது அவர்களை எதிர்கொண்டு கொடூரங்களைச் சந்தித்து மக்கள் பதைத்துக் கிடந்தனர். பரபரப்பான பல செய்திகளும் அதேசமயம் வதந்திகளும் அடிக்கடி வந்துகொண்டிருந்தன. எதற்கும் தயாராக இருக்குமாறு கருணா எல்லோருக்கும் அறிவுறுத்தியிருந்தார். ஆனால் அவருக்கும் முடிவு செய்ய முடியாத விடயங்களும் இருந்தன.

கோவில் போன்ற பொது இடங்களில் அனைவரையும் சென்று இருக்குமாறு மட்டுமே அறிவிப்புகள் வந்தன. பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கு எந்த இடமும் இருக்கவில்லை. பொட்டலமாகவோ பெட்டி யிலடைத்தோ வைக்கக்கூடியதாக இருந்தால் கைகளில் கொண்டு சென்று விடலாம். ஆனால் நிறுவனத்தின் பொருட்களை எங்கே பாதுகாப்பாக வைக்கலாம் என்பதைத் தீர்மானிக்க இயலவில்லை.

எறிகணை வீச்சும் துப்பாக்கிச் சூடும் அண்மித்து வருவதை செவிப் புலன் உணர்ந்தது. கருணா அங்கிருந்த அனைவரையும் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்புவதில் தீவிரமானார். அப்பிரதேசத்து மக்கள் பாது காப்பாக இருப்பதற்கென குறிப்பிடப்பட்ட இடமான பிள்ளையார் கோவில் அவர்களுக்கு அருகாமையில் அமைந்திருந்தது. எல்லோரையும் அனுப்பி விட்டு தான் மட்டும் அங்கு தங்கியிருக்க கருணா தீர்மானித்திருந்தார். குறித் தொதுக்கப்படாத இடங்களில் இருந்தவர்கள் முதியவராகவோ, நடமாட இயலாத நோயாளராகவோ இருந்தபோதிலுங்கூட கொல்லப்படுவதாக

கதையடிபடுவதால் கருணா தங்கியிருப்பது ஆபத்தானது என எல்லோரும் வலியுறுத்தி அவரையும் அழைத்துச் சென்றுவிட்டனர்.

போதாத இடமொன்றுள் அடைந்துகிடந்த பட்டி மந்தையாக ஐந்து நாட்கள் அவர்கள் உழன்றனர். ஆறாம் நாள் ஊரடங்கு ஏழு மணித்தி யாலங்கள் தளர்த்தப்பட்டு தத்தம் இடங்களுக்கு போய் பார்க்க அனுமதித்தார்கள்.

புயல் புகுந்து போய்விட்ட பழத்தோட்டத்திற்குச் சென்ற உணர்வு அவர் களுள் பீறிட்டது. நிறுவனத்தின் நிலையைக் கண்டு கருணா கலங்கி நின்றார். அவர்கள் தேனீக்களாய்ச் சேகரித்து உருவாக்கிய தேன்கூடு குரங்குகளிடம் அகப்பட்டு சிதைந்துகிடந்தது.

அங்குமிங்குமாக வெவ்வேறு இடங்களில் கிடந்த பொருட்களை இனங் கண்டு எடுத்துவந்து தமது இடத்தில் சேர்த்தார்கள். எடுத்த பொருட் களை பாதுகாப்பாக வைக்க இயலவில்லை. எல்லா கதவுகளும் உடைக்கப் பட்டிருந்தன. உட்புறமாக இருந்த அறையொன்றுள் அவற்றை வைத்து விட்டு முகாமுக்குத் திரும்பினார்கள். அடுத்த நாள் போகலாம் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்த அவர்களின் எதிர்பார்ப்பு ஏமாற்றமாய் முடிந்தது. மூன்று நாட்களின் பின்னர் ஊரடங்கு நீக்கப்பபட்டவேளை சென்று பார்த்தால் அத்தனை பொருட்களும் அள்ளிச் செல்லப்பட்டிருந்தன. மீண்டும் தேடியபோது அவை கண்களிற் படவில்லை. பொருட்களை வாங்குவதும் கஷ்டமாக இருந்தது. பழைய பொருட்களைத்தான் வாங்க வேண்டியிருந்தது. அவை களவெடுத்த பொருட்களாகவும் இருக்கக்கூடும் என்று பயப்படவேண்டியும் இருந்தது.

நிறுவனம் சார்ந்தோருக்கு உணவு தயாரிக்கவோ வேறு தேவை களுக்கோ பயன்படுத்த பெரிய பாத்திரங்களே தேவைப்பட்டன. போரிட்ட இரு பகுதியினருக்கும் பாவனைக்கு பெரிய பொருட்களே தேவைப்பட்டன. அதனால் நிறுவனத்திடமிருந்த பொருட்களை அவர்கள் எடுத்துச் சென்றிருந்தனர். அதனால் அவர்கள் சில பொருட்களையேனும் வாங்க வேண்டியது அவசியமாகவிருந்தது. பழைய பொருட்களே கிடைத்தன. வாங்கிவந்த பொருட்களைப் பார்துவிட்டு “அந்தப் பெரிய பித்தளைச் சட்டி சரியாய் எங்களிட்டை இருந்த சட்டி மாதிரியே இருக்கு” என்றாள் பத்மா.

அதைப் பார்த்த கருணாவுக்கும் ஐயம் ஏற்பட்டது. முகாமிலிருந்து முதல் நாள் வந்தபோது தேடியெடுத்த பாத்திரங்களுள் அதுவும் இருந்தது. பின்பு வந்தபோது தொலைந்துபோயிருந்தது.

“அதை ஒருக்கால் பார்ப்பம்” என்றவாறே கருணா கையை நீட்டினார். கைக்கு வந்த பாத்திரத்தைத் திருப்பி விளிம்பைப் பார்த்தார்.

அதில் "மிகுசுவை" என்று எழுதியிருந்தது. கள்வர்களும் குடியிருப்பாளர் இல்லாத வீடுகளில் களவாடியுள்ளார்கள் என்பதற்கு அது சாட்சி கூறியது.

சிறிதளவு காலஞ்செல்ல மக்கள் அவரவர் இடங்களுக்குச் சென்று வாழத் தொடங்கினர். எனினும் நிம்மதியற்ற வாழ்வே தொடர்ந்தது. அடிக்கடி சுற்றிவளைப்புகளும் பரிசோதனைகளும் இடம்பெற்றன. அவ்வேளைகளில் பலரை பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தில் அள்ளிச் சென்றனர். ஒழுங்கை, வீதி என எவ்வழியால் பயணித்தாலும் சிறியதூர இடைவெளியில் வீதிப் பரிசோதனைகள் இறக்கியேத்தின. சில வேளைகளில் இறங்கி யோரில் சிலர் சந்தேகத்தின் பெயரில் தடுத்து வைக்கப்பட்டு எங்கோ கொண்டு செல்லப்பட்டனர்.

அன்றும் மிகுசுவை நிறுவனம் இருந்த பகுதி சுற்றி வளைக்கப்பட்டது. அதிகாலையிலேயே எல்லோரையும் பிள்ளையார் கோவிலடிக்கு வருமாறு ஒலிபெருக்கியில் அறிவித்துக்கொண்டு சென்றார்கள். இரவுவரை இந்த சுற்றிவளைப்பு நடைபெறலாம். குறித்த பகுதியிலிருந்து எவரும் வெளியேற முடியாதபடி காவல் இருக்கும். எல்லோரும் கோவிலடிக்குச் சென்ற பின்னர் அவர்கள் வீடு வீடாக தேடுதல் நடத்துவார்கள் கோவிலுக்குப் போகாமல் எவரேனும் இருந்தால் அவர்கள் போகாதிருப்பதற்குக் கூறும் காரணத்தை ஏற்பது வருபவரின் மனநிலையைப் பொறுத்ததென மக்கள் கருதினார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் தமது மனக் கண்களுக்கு சந்தேகக் கண்ணாடிகளை அணிந்து கொண்டே திரிவது வழமை. கோவிலுக்குச் சென்றவர்களும் தப்பிவிட்டதாக எண்ணி நிம்மதியடைய இயலாது. அவர் களுக்கும், பரிசோதனைகள் நடக்கும். தலையாட்டிக்கு முன்பாக இளைய வர்களை நிறுத்தி புலிகளைச் சார்ந்தோர் என அடையாளப் படுத்தப் பட்டோரை கண்ணீரும் கதறலுமாக வாகனங்களில் ஏற்றிக்கொண்டு சென்றுவிடுவார்கள். முகமூடியுடன் இருக்கும் ஒருவர் தன் முன் நிற்பவர் விடுதலைப்புலி இயக்கத்திற்கு சார்பானவரா அல்லவா என்பதை தன் தலையை ஆட்டுவதன்மூலம் தெரிவிப்பார். இவருக்கு மக்கள் வைத்த பெயர் "தலையாட்டி".

அன்று கருணாவின் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தது. தலைவலி வயிற்று வலிஆகியவற்றுடன் சோர்ந்து கிடந்தார். ஒரு நாள் முழுவதும் அவரால் அலைய இயலாது. ஆகவே வீட்டில் தங்கியிருந்து சோதனைக்கு வருவோரிடம் நிலையைத் தெரிவிப்பது என அவர் தீர்மானித்தார்.

ஆனால் உடனிருந்த எவருமே அதை விரும்பவில்லை. என்ன நடக்குமென ஊகிக்க முடியாத விடயம் என்பதால் கருணாவைத் தம்முடன் அழைத்துச் செல்லவே அவர்கள் விரும்பினர்.

"நீங்கள் யோசிக்காதீர்கள். இந்தக் கிளவியை அவர்கள் ஒன்றும்

செய்யமாட்டார்கள். எனக்கும் அங்கை இருக்கும்வரை இங்கை இருக்கிற பொருள் என்னாச்சோ? என்டு மனம் அல்லாடாமல் இங்கை நிம்மதியாயிருக்கலாம். டொக்டர் தந்த மருந்துகளை நானே போடுவன்"

தன்னைத் தனியே விட்டுச் செல்லத் தயங்கியவர்களை கருணா தேற்றி அனுப்பினார்.

பொருட்களுக்கு மட்டுமல்ல, மனிதர்களுக்கும் அவர்களுள் முதியோர் களுக்குங்கூட ஏதேதோ நடக்கும் என்பது அவருக்குத் தெரிய வில்லை.

## 12

"திருவரங்கன் ஈருருளியிலிருந்து இறங்கி வருவதை கண்ட சித்திராவின் மனம் இவன் ஏன் வருகிறான்?" என்ற வினாவிற்கு விடை தேடத் தொடங்கியது.

"வணக்கம் அக்கா"

அவளுக்கு முன்னே அவன் வந்துநின்று வணக்கம் தெரிவித்த பின்னருங்கூட பதில் தென்படவில்லை. அவனது முகத்தில் திரையிட்டிருந்த சோகம் அவளினுள் கலக்கத்தையும் ஏற்படுத்தியது.

"வணக்கம். எப்படியிருக்கிறீங்கள்? அம்மா எப்படி?"

தன் மனதை சமநிலைப்படுத்தியவாறு அவள் பேச முயன்ற போதும் உள்ளே அலைகள் புரண்டெழுந்தன. அமைதி குலைந்து, தீவிர மாகிய தாக்குதல்கள் சற்று தணிந்தபோதும் எவரது முகத்திலும் மலர்ச்சியைக் காணக் கிடைக்கவில்லை. எவரிடம் நலம் விசாரித்தாலும் மகிழ்ச்சியான பதிலைக் கேட்கமுடியாதிருந்தது. எல்லோரும் வேக வைக்கும் வேதனைகளைச் சுமந்துவந்து அவற்றையே கொட்டித் தீர்த்தனர். அடுத்த கணம் என்ன அவலம் நடக்கப்போகிறதோ என்ற பதைபதைப்பு எல்லோருள்ளும் நிரந்தரமாகிக் கிடந்தது.

"அரங்கனின் பதிலும் என்னவாக இருக்கப்போகிறதோ" என்ற பதற்றம் மனதுட் தோன்றியது.

"எல்லோருக்கும் போன்று கடையும் பொருள்களும் சேதம். அம்மா ஓரளவு சுகமாயிருக்கிறா. கருணா அம்மாவைப் பற்றி கேள்விப் பட்டுத்தான் பார்த்திட்டுப் போக வந்தன்"

எதைக் கூறுவதென்று சித்திரா தயங்கத் தேவையற்ற அவனது விசாரிப்பு அவளுக்கு சற்று ஆறுதலைத் தந்தது. விசாரிக்க வந்த பெரும்பாலோர் முழு விவரத்தையும் தேடித் திரட்டி அறிந்த பின்னர் வந்து அவளிடமும் பிய்த்துப் பிடுங்கி விசாரிப்பார்கள். அவளுக்கும் மனம் என்ற ஒன்று இருப்பதை மறந்துவிட்டவர்கள் போன்று உரையாடுவார்கள். அந்த

வேதனை மாற மறுத்து அவளைக் குடைந்துகொண்டிருக்க மற்றொருவர் வருவார். இதனால்த்தான் போலும் கருணா எவரையும் சந்திக்க விரும்ப வில்லை. ஓரறைக்குள் முடங்கிக் கிடக்கும் அவரைத் தேற்றும் ஆற்றல் அங்கிருந்த எவருக்கும் இருக்கவில்லை.

"குறை நினைக்காதேங்கோ. அம்மா ஒருதரையும் சந்திக்க விரும்பேல்லை. நீங்கள் வந்ததை அவவுக்குச் சொல்லுறன்."

தயக்கத்துடன் சித்திரா சொன்னாள். அவளது கண்கள் கலங்கி யிருந்ததை திருவரங்கன் கவனித்தான். "எனக்கு அவவின்ரை மனநிலை விளங்குது. அவவுக்கு நெருக்கமானவையோடையாவது கதைக்க வையுங்கோ. கதைக்காமலிருந்தால் வேதனை குறையாது." எனக் கூறிய வாறு எழுந்தவன் அப்போதுதான் நினைவிற்கு வந்தவன் போன்று "நான் இப்ப கடையைத் தொடங்க தேவையான அலுவல்கள்தான் செய்து கொண்டிருக்கிறன். வேலையொண்டுமில்லை. உங்களுக்கு ஏதாவது உதவிகள் தேவையெண்டால் சொல்லுங்கோ. இயலுமான உதவிகளைச் செய்வன்." எனக் கூறிவிட்டு அவளது பதிலை எதிர்நோக்குபவன் போல் தாமதித்து நின்றான். "பத்மா அக்காவிடம் கேட்டால்தான் தெரியும்" என சித்திரா பதிலளிக்கவே திருவரங்கன் வெளியேறினான்.

இது குறித்து பதமாவுடன் கதைப்பதற்கு இருவருக்குமிருந்த வேலை அனுமதிக்கவில்லை. பல்கலைக் கழக தெரிவு முடிவிற்காகக் காத்திருந்ததால் சித்திராவுக்கு அவசியமாகப் பாடங்களெதையும் படிக்க வேண்டிய தேவையிருக்கவில்லை. அதனால் அவளும் நிறுவனப் பணி களுடன் ஒன்றியிருந்தாள். கவிதா பாடசாலையிலிருந்து வந்த பின்னர் பத்மா இடையிடையே அவளைக் கவனிப்பதற்கும் சென்று, பின்னர் வந்து வேலைகளைத் தொடர்ந்தாள். வேலைகளும் முன்னரைப் போன்று அதிகம் என்று கூறமுடியாது. போரின் தாக்கம் எல்லாவற்றையும் சாய்த்து நிமிர்ந் தெழ முடியாமல் அழுத்திக் கொண்டிருந்தது. ஒரு பக்கம் எதற்கும் பயம். மறு பக்கம் எதையும் சந்தேகத்துடன் பார்த்தது. சிற்றுண்டி வகைகளை பெருமளவு செய்யப் பயம். பெருமளவு செய்வது பயங்கரவாதிகளுக்குக் கொடுப்பதற்கோ என்ற சந்தேகம் அவர்களுக்கேற்படுகிறது. சந்தேகத்தின் காரணமாக சித்திரவதை, கொலை முதலிய எதையும் செய்வார்கள். இதனால் ஊறுகாய் வகைகள், வற்றல் வகைகள், மா போன்றவற்றைத் தயாரித்து விற்கத் தொடங்கினர்.

கருணாவிற்கு நடந்த பயங்கரம் அவரை இயங்க இயலுமையற்றவ ராக்கி விட்டது. ஏனையோரின் மனங்களையும் பலவீனமாக்கிவிட்டிருந்தது.

வேலைகளை முடித்த பின்னர் தமது அலுவல்களையும் செய்து முடித்துவிட்டு படுக்க வந்தபோதுதான் சித்திராவுக்கு பத்மாவுடன் கதைக்கக்

கூடியதாயிருந்தது.

“அக்கா, திருவரங்கன் வந்தவர்”

“ஓமோம். வரேக்கை கண்டனான். அம்மாவைப் பார்க்க வந்தவரோ?”

“ஓமோம். போற நேரம் ஏதாவது உதவி தேவையெண்டால் செய்யலாம் எண்டார். கடை உடைஞ்சு போச்சாம். தொடங்க ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறாராம். இப்ப வேலைகள் இல்லாததாலை உதவிகள் செய்யலாமாம்.”

கதைக்க வந்த விடயத்திற்கு சித்திராவின் உரையாடல் வநதுசேர்ந்தது. அது பத்மாவையும் சிறிது சிந்திக்க வைத்தது.

“வேலைக்கு ஆட்கள் வாறது குறைவெண்டாலும் வேலையும் குறைவுதானே. நாங்களே சமாளிக்கலாம் எண்டு நினைக்கிறன். நீ என்ன நினைக்கிறாய்? அவருக்கு என்ன சொல்லி அனுப்பினாய்?”

“உங்களோடை யோசிச்சு சொல்லுறன் எண்டு சொன்னனான். நான் என்ன நினைக்கிறன் எண்டால் முந்தி இரண்டு மூன்று ஆண்களும் வேலை செய்தவை. ஒவ்வொருதராய் குறைஞ்சு கடைசியாயிருந்த வாகீசனின்ரை அப்பாவும் போக இப்ப ஒருதருமில்லை. இந்தக் காலச் சூழ்நிலையிலை சில வேலையளுக்கு ஆண்கள் போறது நல்லது. அப்படி போகவேண்டிய நேரங்களிலை உதவிக்குக் கேட்பம். அவரும் உதவி செய்யலாம் எண்டுதான் சொன்னவர்”

சித்திரா விளக்கமாகக் கூறியதும் அது நல்லதொரு ஆலோசனை யாக பத்மாவிற்கும் தோன்றியது.

“அதுவும் சரிதான். அம்மாவுக்கே இப்படி நடந்த பிறகு எதுவோ ஒரு பயம் மனசிலை புகுந்திட்டுது.. ஆனால் ஆம்பிளைப் பிள்ளையளையு மெல்லே பிடிக்கிறாங்கள்.”

பத்மா வேதனையுடன் கூறினாள்.

“வயது போன கிழவியளையுமெல்லே இவங்கள் . . .சீ! மனிசங்களா இவங்கள்? அம்மாவின்ரை வயசை தெரியேல்லையே?”

சித்திராவின் சொற்களில் வெறுப்பு வழிந்தது..

“அம்மா அவனுக்கு மொழி விளங்கேல்லை எண்டு இலக்கத்திலை 76 எண்டும் தன்னுடைய வயதை எழுதிக் காட்டினவவாம்.”

“அவங்களுக்கு கண் தெரிஞ்சாலெல்லோ? ஆஸ்பத்திரியிலை இவவுக்கு வைத்தியம் பார்த்த டொக்ரர் சொன்னவராம் இவங்கள் ஐஞ்சு வயசுப் பிள்ளைகள் தொடக்கம் கிளவியள் வரை பதம் பாத்திருக்கிறாங்கள் எண்டு.”

“சண்டை பிடிக்க வந்தாலுஞ்சரி, சமாதானம் நிலைநாட்ட வந்தாலுஞ்சரி பெரும்பாலானவை இப்படித்தான். அண்டைக்கு அம்மாவை தனிய விட்டிட்டு போயிருக்கக் கூடாது. உடல் பாதிப்பை விட மனப் பாதிப்பு அவவை அணு அணுவாய்க் கொல்லுது.”

இருவரது கண்களும் கலங்கின.

“அம்மாவின்ரை கணவர் அவவுக்கு இருபத்திநாலு வயசிலை கால மாயிட்டாராம். பிள்ளையளும் இல்லை. எத்தினையோபேர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் துறவு வாழ்க்கை வாழ்ந்தவ. பொய்யாயோ புனை வாயோ கூட ஒரு குறை கேட்காமல் வாழ்ந்த மனுசி. ஊருக்குள்ளை அவவுக்கு தனி மரியாதை. அவ்வளவையும் அந்தப் பாவி...”

மேலும் பேச இயலாமல் சித்திரா விம்மினாள்.

“அம்மா விபத்தில் சிக்கிக் காயப்பட்டிருந்தால் ஒருவனது வேகம் அவவைப் பாதித்துவிட்டது எண்டு அநுதாபப் பட்டிருப்பார்கள். அவவை சிலர் அடித்துப் போட்டிருந்தால் கோபத்தினால் சில பாவிகள் வயோதிபப் பெண்ணொருத்தியை அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்களே என்டு கோபப்பட்டிருப்பார்கள். ஆனால் ஒரு மாபாவி தன் காமத்தைத் தணிக்கச் செய்த கொடூரம் அவர்களின் மனங்களில் அருவருப்பை ஏன் ஏற்படுத்து கிறது? அம்மாவின் வயோதிபத்தை செய்தவனுஞ்சரி பார்ப்பவர் களுஞ்சரி கருத்தில் எடுக்கவில்லையே? ஏன் இப்படி? என்று எவரும் சிந்திக்க மாட்டார்களா?”

சித்திரா தொடர்ந்து படபடவென வெடித்தாள்.

“அவர்களின்ரை இந்தப் பார்வை அம்மாவை வேரோடு சாய்த்து விட்டுதே. நோயை பரிசோதிக்கவோ தீர்க்கவோ வைத்தியர் பார்வை யிடுவதை எடுத்துக்கொள்கிற மாதிரி இதை எடுத்துக்கொள்ள அம்மா வாலை கூட இயலேல்லையே. எங்களுக்கு ஊட்டி வளர்க்கப்பட்ட உணர்வு களை அவ்வளவு இலகுவாய் துடைத்து எறிஞ்சுவிட முடியாதுபோலை இருக்கு”

சிந்திப்பதற்கு சிறிய மௌன இடைவெளியை எடுத்துக்கொண்ட பின்னர் பத்மா தன் கருத்தைப் பதிலாக்கினாள். இதைக் கேட்ட சித்திரா ஆழ்ந்து விரிவாக சிந்திக்க ஆரம்பித்தாள்.

“உலகம் இன்று வளர்ச்சியடைவதன் காரணமாக வேகமாக மாறி வருகிறது. அதற்கு ஈடு கொடுக்கும் வண்ணம் நாமும் மாறித்தானாக வேண்டும். அதற்காக நல்லவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு ஓடக் கூடாது. அவற்றையும் உறுதியான அத்திவாரமாக தக்கவைத்துக்கொள்ள வேண்டும். புது உலகை வளமாக்க நவீன சிந்தனைகளை நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும். தண்டனைகளால் திருத்த முடியாது. கதவுகள் பூட்டிய

வாறு இருக்கும் போதே கைதிகளை வெளியேற வைத்துவிடும் உலகம் இது. மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளை அவர்களது தண்டனை நிறைவேற்றப்படுமுன்னர் மாயமாய் மறைத்துவிடும் பூமி இது. இந்த நிலையை மாற்ற நமது உள்ளங்களிலேதான் மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

உள்ளங்களில் மாற்றமா? அவை எப்படி திருந்தப்போகின்றன? வர வர கொடூரமானவையாக அல்லவா மாறி வருகின்றன. பெற்றவனையும் உடன்பிறந்தவனையுங்கூட நம்பவியலாத நிலை வந்துவிட்டது.

விடியும் வரை சித்திராவின் சிந்தனை நீண்டது.

அதே வேளையில் கருணாவின் மனமும் தன் வாழ்க்கையின் ஆதி முதல் அண்மைய நிகழ்வுகள் வரை ஒவ்வொன்றாகத் தேடி எடுத்து பார்ப்பதில் மட்டுமே நாள் முழுவதும் ஈடுபட்டிருந்தது.

நினைவுகள் சுற்றிச் சுற்றி அலைந்தன. மனம் வேறெதிலும் ஈடுபடமுடியாது பழைய நினைவுகளில் மட்டுமே ஒட்டிக்கிடந்தது. இருட் குகைக்குள் திசையறியாது வீழ்ந்து கிடப்பது போன்ற திகைப்பினுள் மெல்ல மெல்ல இழுத்துச் செல்லப்படுவது போன்றதொரு உணர்வு.. காலம் நகர கருணாவும் அதனுள் இழுக்கப்பட்டுவிட்டவராக சூழலைப் புரிந்து கொள்ளவியலாது தவிக்கத் தொடங்கினார்.

அன்றைய நிகழ்வின் நினைவு திடீர் திடீரென ஏற்பட்டு அவரை அலறச் செய்தது. உணவை உண்ண மறுத்தார். அவரது நிலை சீரடையாமல் அவரை மரணத்திடம் கையளித்தது.

கருணாவின் மரணம் சித்திராவை மிகவும் பாதித்தது. அம்மாவின் இடத்தில் இதுவரை இருந்து அவளை வளர்த்தெடுத்தவர் கருணா அம்மா. அவருக்கு நேர்ந்த கொடூரம் அவளின் இதயத்தில் தீக்கோல் கொண்டு பதியப்பட்டதாக நிலைத்து விட்டது. அது ஆறாத காயமாக சித்திராவின் வாழ்க்கை முஜவதும் வேதனை தந்து கொண்டிருந்தது. அம்மா என்றதுமே இரு கொலைகளின் நினைவுகள் இதயத்தை சாறாக்கின. கருணா தான் உருவாக்கி வளர்த்தெடுத்த மிகுசுவை நிறுவனம் தொடர்ந்து இயங்கு வதற்கு தேவையானவற்றை ஏற்கனவே செய்து வைத்திருந்தார். சில வருடங்களுக்கு முன்னரே நோய்களின் தாக்கங்களால் அவர் அவதிப் பட்டதே அதற்கு காரணமாகவிருந்தது. அண்மைக் கால உள் நாட்டு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டபோதிலும் அதிலிருந்து மீளவும் அவர் வழி காட்டிவிட்டே மறைந்தார்.

நிறுவனத்தின் முன்றலில் எழுந்து நின்ற கருணாவின் சிலை அவரது பணிகளை நினைவுகூர வைத்து வழிகாட்டியதுடன் விரும்பினாலும் இல்லா விட்டாலும் அந்த அசம்பாவிதத்திற்கும் நினைவுச் சின்னமாகவும் இருந்தது.

# 13

“தண்டாயுதபாணி கடை தந்த ஏழாயிரத்து முன்னூற்றிப் பத்து ரூபா வங்கியிலை போட்ட சிட்டை”

சொல்லியவாறு சித்திராவின் முன் வங்கியின் பற்றுச் சீட்டை வைத்தான் திருவரங்கன்.

“இதை என்னட்டைத் தரவேணும் என்டது தம்பிக்குத் தெரியாதோ? அங்கை வாரும்.”

திருவரங்கனைக் கவனித்துக்கொண்டிருந்து அவனைத் தன்னிடம் சிட்டையைத் தருமாறு கூறுவதற்காகவே பத்மா எழுந்துவந்ததுடன் சிறிது காரமாகவும் கூடவே எள்ளல் கலந்தும் சொல்லியது சித்திராவுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது. திருவரங்கனின் மனமும் குறுகுறுத்தது. பத்மாவின் முகத்திலிருந்த முறைப்பு மேலும் அவனைக் குறுக வைத்தது.

அக்காவின் செயலுக்கு காரணம் இருக்கும் என்பது சித்திராவின் நம்பிக்கை. ஆனாலும் திருவரங்கனை அப்படி நடத்தியது அவளின் மனதை வேதனைப்படுத்தியது. அது ஒரு வித்தியாசமான வேதனை. அவனது இடத்தில் மற்றொருவர் இருந்திருந்தால் இது ஏற்பட்டிருக்காது என்று அவளே விளங்கிக் கொண்ட வேதனை. அது நாள் முழுவதும் நீடித்து மனதினுட் சுழன்று திரிந்தது. எல்லா வேலைகளும் முடிந்த பின்னர் படுக்கைக்குச் சென்றதும் அந்த நிகழ்வை மீள நினைவிற்குக் கொண்டு வந்து ஆராய்ந்து பார்க்க வேண்டுமென எண்ணி வந்தவளை “சித்திரா” என்ற பத்மாவின் அழைப்பு தடுத்து நிறுத்தியது.

மைவிழியை உறங்கவைப்பதற்காக மடியில் போட்டு ஆட்டிக் கொண்டிருந்தாள் பத்மா. அருகே கவிதா நித்திராதேவியின் தழுவலில். இத்தகைய நேரங்களில் பொதுவாக எவருடனும் கதைக்க பத்மா விரும்புவதில்லை. அவர்களை உறங்கவைக்க படும்பாடு அவளுக்குத்தான் தெரியும். இப்போது அவளே சித்திராவை அழைக்கிறாளே!

சித்திரா பத்மாவை நோக்கி வர,. செய்கை மூலம் அவளை

தன்னருகே அமரவைத்தாள் பத்மா. பத்மாவின் உடலும் உள்ளமும் சொல்லியவற்றைப் புரிந்துகொண்டவளாக சித்திரா அமர்ந்திருந்தாள். உறக்கத்தின் இறுக்கத்துள் பிள்ளைகள் கட்டுண்ணும்வரை அமைதிக்குள் நேரம் கரைந்துகொண்டிருந்தது. தமது பேச்சு அவர்களை விழிக்கச் செய்யாது எனும் நிச்சயம் மனதுள் பிறக்கவும் பத்மா வாய் திறந்தாள். அதுவரையும் நா மௌன விரதம் பூண்டிருந்தாலும் மனம் எதையெதையோ நினைத்துப் பரபரத்து வட்டமிட்டுக்கொண்டிருந்தது..

“நீ திருவரங்கனுடன் பழகுகிற போது கவனமாயிருக்க வேணும் சித்திரா.”

பத்மாவின் பார்வை, இராமனின் அம்பாகி சித்திராவின் உள்ளே எங்கெங்கு எல்லாம் திருவரஙகனைப் பற்றிய அபிப்பிராயங்கள் இருந் தனவோ அங்கங்கு அவற்றை கிளறி, பரவி அவற்றின் தன்மைகளை ஆராய்வது போன்று அவளை ஆழ ஊடுருவிக்கொண்டிருந்தது. “அவர் நல்லவர்...” என ஏதோ கூறத் தொடங்கிய சித்திராவின் நா அந்தப் பார்வையைத் தாங்கவியலாது பின்வாங்கியது.

“அவன் நல்ல பிள்ளை. இல்லையென்டு நான் சொல்லேல்லை. அவனுக்கு உன்னிலை ஒரு ஈர்ப்பு இருக்கு. உனக்கு அது விளங்கி யிருக்கும். உனக்கும் அவனிலை விருப்பமிருக்குது.”

திகைத்து அமர்ந்திருந்தாள் சித்திரா. அவளுக்கே புரியாத சிக்கலாக தவிக்க வைத்துக்கொண்டிருந்த விடயத்தை அக்காவால் எப்படி இவ்வாறு கூறமுடிகிறது! இதுவரை தெளிவு பெறாத ஒன்றைப் பற்றி அவள் என்ன கூறுவது? சொற்கள் சூலகத்தினுள்ளேயே சுருண்டு கிடந்தன.

“என்ன ஒன்டும் பேசாமலிருக்கிறாய்? ஒரே குழப்பமாய் இருக்கா? அல்லது நான் சொல்லுறதெல்லாம் பிழையாய்த் தெரியுதா? உண்மையாய் நடந்த கதையொன்டு சொல்லட்டா? அதைக் கேட்டால் நான் சொல்லுவது எவ்வளவு முக்கியமானது என்டு விளங்கும். எனக்கு நல்லாய்த் தெரிஞ்ச ஒரு பிள்ளை. அந்தப் பிள்ளை தாய் தகப்பனுடைய சொல்லைத் தட்டாத அருமையான பிள்ளை. மல்லிகா என்டு அவளுக்குபெயர் வைப்பம்.”

“வடிவான பிள்ளையோ?”

“பேரழகு என்டு சொல்லேலாது. சுமாரான வடிவு”

சித்திராவின் கேள்விக்கு பதிலளித்த பத்மா கதையைத் தொடர்ந் தாள். கதை சித்திராவின் மனத்திரையில் நிழலுருக் காட்டி நகரத் தொடங்கியது.

அப்பா கொண்டு வந்து தந்த நிழற் படத்தைப் பார்த்த மல்லிகா தன் அதிர்ஷ்டத்தை மெச்சிக்கொண்டாள். அவளது கணவனாக வரப்

போகின்றவர். நல்ல குணமானவர் என்று இவர்கள் விசாரித்தவர்கள் எல்லோரும் கூறினார்கள். தனியார் கம்பனி ஒன்றில் நல்ல பதவியில் இருக்கின்றாராம். ஆனாலும் அப்பாவுக்கு அரசாங்க உத்தியோகம் இல்லையே என்பது மனக் குறை. குறிப்புகளைப் பார்த்த சாத்திரியார் நல்ல பொருத்தம் என்று சொல்லிவிட்டார். சீதனம் தடையேற்படுத்தவில்லை. இதற்குமேல் அரசாங்க உத்தியோகம் வேண்டுமென்று இந்த சம்பந்தத்தை தவற விட்டால் வேறு சம்பந்தம் பொருந்தி வருவது கடினம்.அதனால் பெண் பார்த்து திருமணத்தை நிச்சயிக்க முடிவெடுத்தார்கள். அயலூர்க் கோவிலில் அவரைப் பார்த்தபோது படத்திலிருந்து வேறுபாடாக எதுவும் தெரியவில்லை. தன்னை வேண்டாம் என்று மறுத்துவிடுவாரோ என்ற பயம் மல்லிகாவிற்கு இருந்தது. அவர் சம்மதித்துவிட்டார். திருமணத்திற்கு நல்ல நாள் குறித்து அதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

தான் வந்து மல்லிகாவைச் சந்திக்க அனுமதிப்பார்களா என மாப்பிள்ளை அகிலன் தன் நண்பனின் தந்தையை அனுப்பிக் கேட்டிருந்தார். பெடியள் பெற்றோருக்குத் தெரியாமல் காதலியோடு சுற்றும் காலத்தில் இப்படி அனுமதி கேட்கும் பேசி ஒழுங்கு செய்த மாப்பிள்ளையின் கோரிக்கையை மறுக்க முடியுமா? கொழும்பில் பணியாற்றும் அவர் லீவில் வந்திருப்பதாக அனுமதி கேட்டு வந்தவர் கூறினார். செய்தியைக் கேட்ட கணத்திலிருந்து மல்லிகாவின் மனம் பதற்றமும் மகிழ்வுமாக அவளை அலைக்களித்தது.

அன்று மாலையில் அவர் வந்து சந்தித்த தருணம் அவளின் வாழ்வில் பல விதங்களில் மறக்கவியலாத ஒன்றாக அமைந்தது. அடுத்து வநத இரு நாட்களுள் அகிலன், வீட்டுப் பிள்ளையாகி அனைவரது பாசத்திற்குரியவராகிவிட்டார். மல்லிகா மகிழ்வில் திளைத்தாள். அவள் விண்ணப்பித்திருந்த பணியொன்றுக்காக நேர்முகத் தேர்வுக்கான அழைப்பும் அவ்வேளையில் வந்து சேர்ந்தது. “மல்லிகாவுக்கு வெள்ளி திசையாயிருக்க வேணும்” என்று இதைக் கேள்வியுற்ற எல்லோரும் அவளைக் கேலி செய்தனர்.

மல்லிகாவிற்கு வேறொரு சிக்கல். நேர்முகத் தேர்வு கொழும்பில். அப்பாவிற்கு கொழும்பு சென்று தனியாக அலுவல பார்க்கும் அளவிற்கு பழக்கமில்லை. கலியாணவீட்டு வேலைகளும் குவிந்து கிடந்தன. இதனால் அப்பா வேறு எவரோடாவது மல்லிகாவை அனுப்பி வைக்க எண்ணினார். யாருடன் அனுப்புவதென்று தீர்மானிக்கவியலாது தவித்தார். “நீங்கள் அனுமதித்தால் நான் அழைத்துப் போகிறேனே.” என அவருக்கு உதவ முன்வந்தான் வருங்கால மருமகன். பிரச்சனை தீர்ந்ததென்று அப்பா மனம் மகிழ்ந்தார்.

பிரச்சனை அதன் பின்னர்தான் ஆரம்பமாகியது. இவர்கள் கொழும்பிற்கு சென்றிருந்த வேளையில் அகிலனின் தங்கை பானு தனது காதல் பற்றி திடீரென பெற்றோருக்கு தெரிவித்தாள். சுயநலத்தை பின்புலமாகக் கொண்டே அது வெளிக்கொணரப்பட்டதோ என்னவோ! அது தொடக்கமாக மல்லிகாவின் அதிர்ஷ்டகாலம் துர்பலன்களைத் தரத்தொடங்கியது.

பானு காதலிப்பதாகத் தெரிவித்ததும் வழமையாக எல்லாத் தாய் தந்தையரையும் போன்று அவளது பெற்றோரும் கொதித்து குமுறி "வீட்டிலிருந்து வெளியேறு. அல்லது அவனை மறந்துவிடு" என உறுதியாகக் கூறினார்கள். நாட்கள் சில கழிந்தன. இரு பகுதியினருடனும் பேசி காதலர்களை இணைத்துவைக்க சிலர் முயன்றார்கள். பானுவின் காதலன் மாமுகன் பற்றிய விபரங்களை காதலர்களின் சார்பில் பேச வந்தோர் எடுத்துச் சொல்ல அந்த உறுதி கரையத்தொடங்கியது. தடையாய் எஞ்சி நின்றது மாமுகனின் தங்கையின் திருமணந்தான். அதை நடத்திவிட்டு அவன் விரும்பியபடி கலியாணம் செய்யலாம் என இரு தரப்பு பெற்றோரும் முடிவு செய்தனர்.

தம்முடன் பிறந்த பெண் பிள்ளைகளுக்கு அவர்கள் அக்காமாராக இருந்தாலுஞ் சரி தங்கைகளாக இருந்தாலுஞ் சரி திருமணஞ் செய்து வைக்கும் பொறுப்பு யாழ்ப்பாணத்து ஆண் பிள்ளைகளினுடையதாக கருதப்படுவதால் மாமுகனுக்கு அந்தப் பொறுப்பு இருக்கின்றது என்று பெற்றோர் போட்ட விதியை எவரும் தவறு என்று வாதிடவில்லை. பதிலாக சுமை அகிலனின் தலைக்கு மாறியது. பானுவின் திருமணத்தை நடத்தும் பொறுப்பு அவளது அண்ணனுடையதாகையால் அவன் மாமுகனின் தங்கையை கலியாணம் செய்தால் பானுவின் விவாகம் சுலபமாக நிறைவேறிவிடும் எனற தீர்வை ஓர் உறவு கண்டுபிடித்துச் சொல்ல அப்படியே செய்துவிடலாம் என பெரும்பாலான உறவினர்கள் அபிப்பிரா யப்பட்டனர். இருவரின் சாதகக் குறிப்புகளைப் பார்த்து அதுவும் பொருந்தி யிருந்தது.

ஏற்கனவே ஆயத்தங்கள் நடந்துகொண்டிருக்கும் தீருமணத்தைக் குழப்புவது தவறு என்ற பேச்சு ஆங்காங்கே கிளம்பியபோதும் ஓங்கி ஒலிக்கவில்லை. மல்லிகாவுக்காக நியாயம் கேட்கப் போனவர்கள் தோல்வி யுடன் திரும்பி வந்தனர். "பேசி ஒழுங்கு செய்த கலியாணந்தானே. எங்களுக்குக் கூடுதலாக சீதனம் தேவைப்படுகிறது. நீங்கள் வேறு இடம் பார்க்கலாமே" என்று பதில் கூறிவிட்டார்களாம். மல்லிகாவின் அப்பாவும் அம்மாவும் தாமே நேரில் திருமணத்தை நிறுத்த வேண்டாம் எனக் கேட்பதென முடிவு செய்து புறப்பட்டுச் சென்றனர்.

அகிலனின் பெற்றோரோ நெருங்கிய உறவினரோ மல்லிகாவின்

வீட்டினரை எதிர்கொள்ளவில்லை. அங்கு வீட்டுக்காரர் எவரும் இல்லை என்று அங்கிருந்த ஒருவர் தெரிவித்து இவர்களைத் திருப்பி அனுப்ப முயன்றார். மல்லிகாவின் அப்பா அவர்கள் வரும்வரை காத்திருக்கப் போவதாக சொல்லியபடி தன்னுடன் வந்திருந்த மனைவி, மச்சான், தம்பி ஆகியோரையும் வீட்டினுள் கூட்டிச்சென்று வரவேற்பறையில் அமர்ந்து விட்டார்.

அரை மணி நேரம் சென்ற பின் அகிலனின் தந்தை வந்தார்.

“வந்தவர்களிடம் எல்லாம் விவரமாகச் சொல்லிவிட்டமே. பிறகும் ஏன் வந்து அலைகிறீர்கள்? சொன்னால் சொன்னதுதானே?”

சிறிய மௌன இடைவெளியின் பின் அவரே பேசத் தொடங்கினார்

“சொன்னபடி நடப்பீர்கள் என்டு நினைச்சுத்தான் வந்திருக்கிறம். சாதகம் பொருத்தம் என்ட பிறகு நாங்கள் ஐஞ்சு பேர் வந்து சீதன விபரமெல்லாம் சொல்லி நீங்கள் ஒப்புக்கொண்ட பிறகுதான் பொம்பிளை பார்க்க ஒழுங்கு செய்தனாங்கள்.”

மல்லிகாவின் மாமா சற்று காரமாகவே கூறினார்.

“நாங்கள் இல்லையெண்டு சொல்லேல்லை. கலியாணம் நடக்க முன்னமே இப்பிடி ஒரு தேவை வந்திட்டுது. அதனாலை முடிவை மாத்திப் போட்டம். உங்களிலை குறை சொல்லி கலியாணத்தை நிற்பாட் டேல்லையே. வேறை எங்களைவிட திறமாயும் வரலாம்.”

“இப்ப எவ்வளவு கூடக் கேக்கிறீங்கள்?”

மல்லிகாவின் சித்தப்பா இடைமறித்துக் கேட்டார்.

“ம்...அ...அது” எனத் தடுமாறிய அகிலனின் அப்பா “காசை வாங்கி இன்னொரு மாப்பிளை தேடுறது கஷ்டம். அது மட்டும் பானுவும் கலியாணம் நடக்காமல் காத்துக்கொண்டிருக்கவேணும். அந்தப் பிள்ளைக்கு அகிலனை கட்டிவைச்சால் எங்களுக்கு சுகமாய் போயிடும்.” என உண்மையை ஒப்புக் கொண்டார்

“நாள் வைச்சு மாப்பிளை வீட்டை வந்துபோய் எல்லாம் நடந்த பிறகு இப்பிடிச் சொல்லுறியளே. இது நியாயமே?”

இதுவரை பேசாதிருந்த மல்லிகாவின் தந்தை குமுறினார். அவரை ஏதாவது சொல்லி தடுக்காவிட்டால் தமது பக்கம் சரிந்துபோய்விடும் என்றெண்ணி அகிலனின் தந்தை உடனடியாக மூளைக்குத் தோன்றியதை கூறநேர்ந்தது.

“என்ன? மகள் பிள்ளைத்தாய்ச்சி என்டும் சொல்லி கலியாணத்தை நடத்தப் பாாப்பியள்போலை.”

“ஐயோ! என்ரை பிள்ளை ஊர் மெச்ச அருமை, பெருமையாய் இருந்தவள். நாங்கள் பேசி முடிச்சவனோடைதான் கதைச்சுப் பழகினவள். அவளைப் பற்றி இப்பிடியெல்லாம் பேச வைக்கிறியே கடவுளே! நாங்கள் வேறை ஒரு பிள்ளைக்கும் துரோகம் செய்யேல்லையே. இப்பிடியெல்லாம் ஏன் நடக்குது?”

மல்லிகாவின் தாய் கதறி அழுதாள். இரு பகுதியினரும் நீள விவாதித்தும் எந்தப் பயனும் கிட்டாது மல்லிகாவின் பெற்றோர் வீடு திரும்பினர்.

மல்லிகா மட்டும் அகிலன் கைவிட மாட்டான் என திடமாக நம்பினாள். அகிலனின் திருமணத்திற்கான எந்த ஆரவாரமும் இல்லாதிருந்ததும் அவளது நம்பிக்கைக்கு வலுச் சேர்த்தது. ஆனால் அவன் தன்னைச் சந்திக்க எந்த முயற்சியும் செய்யாதது உள்ளத்துள் திகிலை வளர்க்கவுந் தொடங்கியது. அகிலன் குறித்து எதையும் அறிந்துகொள்ள முடியாது மல்லிகா தவிக்க, நாட்களும் கடந்துகொண்டிருந்தன.. இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன. அவனது திருமணம் ஏன் நடைபெறவில்லை? அவள் எண்ணுவது போல் அவனது மனச் சாட்சி அதற்கு மறுக்கிறதோ?

ஆனால் பயந்தது போல் மற்றொரு பேரதிர்ச்சி அவளைக் கலக்கத் தொடங்கியது. அகிலனின் வாரிசு மல்லிகாவின் வயிற்றில் வளர்ந்து வருவதற்கான அறிகுறிகள் தோன்றிப் பயமுறுத்தின.

அப்படி நடந்தால் என்பதற்கே கொதித்துப்போன அப்பா, அதைக் கேட்டது தொடக்கம் ஆற்ற முடியாது கிழமைக் கணக்கில் அழுது கொண்டிருந்த அம்மா, இன்னும் ..இன்னும். . நினைத்துப் பார்க்கவே பயங் காட்டும் அது தன் வாழ்வில் நடக்கவிடாது தடுக்க வழி தேடி அலைந்த போதுதான் அகிலனின் பணியக முகவரி தன்னிடம் இருப்பது மல்லிகாவின் ஞாபகத்தில் தட்டுப்பட்டது.

நேர்முகத் தேர்வுக்குச் சென்றதை நினைவுபடுத்தி, தன் அவல நிலையை விவரித்து கடிதமொன்றை எழுதி அனுப்பிவிட்டு அவனை எதிர்பார்த்து காத்திருந்தாள் மல்லிகா. பதிலாக கடிதங்கூட வரவில்லை.

நடந்தது அம்மாவிற்கு மறைக்கக்கூடிய விடயமா என்ன? உண்மையை ஒப்புக் கொண்டபோது அவள் எதிர்பார்த்ததற்கும் அதிகமாக நிகழ்வுகள் நடந்தேறின. தவறு தங்களுடையதுதான் என பெற்றோரும் பெரு மளவு உறவுகளும் கருதினர். அப்பாவும் அம்மாவும் கோபத்தையோ வேதனையையோ மல்லிகாவின் மீதோ வேறெதன் மேலோ காட்டவியலா மல் தங்களுக்குள்ளேயே புதைத்து வைத்துப் பொருமினார்கள். வெட்கமும் வேதனையும் மெல்ல மெல்ல அம்மாவை தின்று தீர்த்தன. அம்மா போய்ச்

சேர, அப்பா நடைப் பிணமானார். எந்தத் தவறும் செய்யாமலே ஒரு குடும்பம் நாசமாகியது.

“அந்தக் குழந்தை பிறந்து நல்ல விதமாக வளர்கிறானா?”

கதையில் ஆழ்ந்திருந்த சித்திரா திடீரென கதை முடிந்துவிட்டது போலத் தோன்றவே மிகுதிக் கதையை அறியும் ஆவலுடன் கேட்டாள்.

வளர்கிறானாவா? வளர்கிறாள். மல்லிகாவிற்கு பெண் குழந்தை தான் பிறந்தது. அதை அறிந்ததுமே “நான் படும் பாடு போதும். நீயும் கஷ்டப்படப்போகிறாயே கண்ணே” என்று கலங்கினாள் மல்லிகா. அதுமட்டு மல்ல. அவளது வாழ்க்கை திசைமாறியதிலிருந்து அவளது தந்தையை உணவுண்ண வைக்க அவள் பெரு முயற்சி செய்யவேண்டியிருந்தது. அவளில்லாத இவ்வேளையில் அவர் எப்படி இருக்கிறாரோ என்ற கவலை யும் சேர்ந்து அவளை வேதனைப்பட வைத்தது. நோயாளரை உறவினர்கள் சந்திக்கும் நேரம் என்பதால் அவளைச் சுற்றியிருந்த இடம் ஆரவாரமும் கலகலப்புமாகக் காணப்பட்டது அவளைப் பார்க்க எவரும் வரப்போவ தில்லை. கண்களை மூடி படுத்திருந்தவளை குழந்தையின் அழுகுரல் விழிக்கச் செய்தது.

ஒருவன் குழந்தையைத் தூக்கிக்கொண்டிருந்தான். அவனது ஒரு பக்கமே அவளுக்குத் தெரிந்தது.

“ஏய்! பிள்ளையை ஏன் தூக்கிறாய்?”

வாய் அதட்டுகையில் மனம் அவன் அகிலன் என அடையாளங் கண்டது. அறிவு “அவன் வந்திருக்க மாட்டானே” என்றது.

“நான் அகிலன்”

குழந்தையை கைகளில் அணைத்தவாறு அவன் திரும்பினான்.

“நீங்கள்தானா?”

“என் மகளை பார்க்க வந்தனான்.”

புயலின்போதெழும் அலைகள் மல்லிகாவின் மனதுள்.

“உங்களுடைய கலியாணம் இன்னும் நடக்காததாலை நீங்கள் வருவீங்கள் என்டு எதிர்பார்த்தன்”

“கலியாணம் இன்னும் நடக்கேல்லைத்தான். ஆனால் நடக்கப் போகுது.”

“என்னுடைய கடிதம் கிடைச்சதா?”

“கிடைச்சது. நீங்கள் சொல்லுறதும் நியாயம். இது எதிர்பார்க்காத சிக்கல். நான் வேணுமெண்டு செய்த துரோகமில்லை. இன்னொருத்தியை

கட்டிப்போட்டோ காதலிச்சுக்கொண்டோ உங்களை ஏமாத்தேல்லை. அப்பா சொல்லுற மாதிரி இவளுக்குத் தகப்பன் ஆரோ என்டில்லை. இது என்ரை பிள்ளை. அப்பிடி சந்தர்ப்பம் கிடைச்ச பொழுது நான் நடந்து கொண்ட மாதிரித்தான் பெரும்பாலானவை நடப்பினம். ஆனால் விதி இப்பிடிச் செய்ததுதான் எங்கடை துரதிர்ஷ்டம். என்ரை தங்கச்சியிலை எனக்கு அளவில்லாத பாசம். அவளுக்காக நான் என்னவுஞ் செய்வன். அவள் பிறந்த நாளிலையிருந்து ஒன்டாயிருந்து வளர்ந்தவள். என்னுடைய நிலமை உங்களுக்கு விளங்கும் என்டு நம்புறன்."

அவன் குழந்தையை மீளவும் படுக்க வைத்தான். அது அழத் தொடங்கியது. அவன் திரும்பி நடந்தான். குழந்தையின் அழுகை தொடர்ந்தது. மல்லிகாவின் விழிகளும் கண்ணீருகுக்கத் தொடங்கின.

குழந்தையையும் அப்பாவையும் ஒருசேர கவனிக்க அவளால் இயலவில்லை. சாப்பாட்டுக்குத் திண்டாடும் நிலை. எல்லாம் சேர்ந்து தகப்பனை மரணத்தின் வாய்க்குள் தள்ளிவிட்டன. தான் ஒரு பிள்ளையைப் பெற்று தன்னைப் பெற்றவர்களைச் சாகடித்துவிட்டதான குற்ற உணர்வு அவளுள் ஆறாத காயமாய் நிலைத்திருந்து வருத்தியது.

மல்லிகாவினது தந்தையின் மரணச் சடங்கிற்கு வேண்டிய தெல்லாம் செய்த அகிலன் பின்னரும் இடையிடையே வந்து பண உதவி செய்துவந்தான். இவற்றை மறுக்கும் நிலையில் மல்லிகா இல்லை. அவள் எங்கேனும் வேலை செய்ய விரும்பினாள் குழந்தையை எங்கே விட்டுச் செல்வது?

மல்லிகாவை கோவிலில் சந்திக்கும் ஒரு பெரியவரும் மனைவியும் குழந்தையுடன் விளையாடி மகிழ்வார்கள். இதனால் அவளுடனும் பழக ஆரம்பித்தனர். அவர்களுக்கு குழந்தை இல்லாதது பெருங்குறை என்பதை யும் அறிந்துகொண்டாள். ஒரு நாள் தான் எங்காவது வேலை செய்ய விரும்புவதாக அந்த அம்மாவிடம் தெரிவித்தபோது மல்லிகா தன் துயரங்களையும் அவருக்கு சொல்லவேண்டியதாகிவிட்டது..

அடுத்த தடவை சந்தித்தபோது தங்கள் வீட்டில் தனக்கு உதவியாக வந்து வேலை செய்யுமாறு அந்த அம்மா கூறினார். மல்லிகாவிற்கு மிகுந்த மகிழ்ச்சி தந்த விடயம் கூடவே மகளையும் கொண்டு சென்று வைத்திருக் கலாம் என அவர் அனுமதி தந்ததுதான்.

வேலை முடிந்து மல்லிகா வீடு திரும்பிய பின்னரே அவர்களைச் சந்திக்க அகிலன் வரவேண்டியிருந்தது. உரிமை பாராட்டி தொடர்ந்த உறவும் இரவின் நெருக்கமும் அவனைத் தடுமாறச் செய்வதை மல்விகா உணர்ந்தாள்.

“பிள்ளைக்கு தகப்பனாய் இருக்கிறதோடை பெண்சாதிக்கு புருசனாயும் இருக்கவேணும் என்டதும் எனக்கு இப்பதான் விளங்குது. எல்லா மனுசருக்கும் இருக்கிற ஆசாபாசம் உனக்கும் இருக்குந்தானே? இதிலை பயப்படவோ வெட்கப்படவோ என்ன இருக்கு? அடுத்த பிள்ளை வந்தாலும் அது என்ரை பிள்ளை என்டு ஏத்துக் கொள்வன். யோசித்துப் பார்.”

அவள் வந்து விழப்போகிறது என எதிர்பார்த்த எறிகுண்டு விழுந்தது. அவளுக்கு அன்றிரவு விடியல் புலப்படாத ஒன்றாக நீண்டு கொண்டிருந்தது.. மரணக் குழியுள் அவளை பிடரியில் கை பதித்து அது தள்ளிக்கொண்டிருந்தது.

“இந்தப் பச்சைப் பாலகியையும் கொல்வதா? அதுவும் அவளைப் பெற்ற எனது கைகளாலேயா?”

பெற்ற தாயுள்ளம் பதைபதைத்தது. அறிவோ “அவளை இந்த கேடுகெட்ட உலகில் விட்டுவையாதே” என்றது.

“தகப்பன் தான்தான் என்று சொல்வாராம். அப்படி அவர் ஒப்புக்கொண்ட இந்தப் பிள்ளைக்கே என்னுடைய மகன்தான் தகப்பன் என்று எப்படிச் சொல்லுவாய்? என்று அகிலனின் அப்பாவே கேட்கிறார். அது சந்தர்ப்பக் கோளாறு. இனி நடந்தால் பார்த்துத் தெரிந்துகொண்டே பாண் கிணற்றுள் விழுந்த கதையாகிவிடும். அகிலனை என் கணவனாகவே நினைத்திருக்கும் நான் அவர் அருகில் வரும்போது என்ன செய்வேனோ? யாருக்குத் தெரியும்? என்னால் இனியும் இப்படி போராட முடியாது. நான் நிமிர்ந்து நிற்க இயலாத அளவுக்கு களைத்துவிட்டேன்;

மல்லிகா அழுது அழுது ஓய்ந்துபோனாள்.

காலையில் வேலைக்குப் போனதுமே மல்லிகாவின் முகத்தைப் பார்த்துவிட்டு உடல் நலமில்லையாவென அம்மா விசாரித்தார். தலையிடி நித்திரை இல்லை என்று ஒருவாறு சமாளித்தபோதும் அவளால் ஒழுங்காக வேலை செய்ய முடியவில்லை. எப்படி தற்கொலை செய்வது என்று திட்ட மிடுவதிலேயே மனம் தன்னை அர்ப்பணித்துவிட்டு வேலையைப் பற்றி அக்கறை இல்லாமல் கிடந்தது. அம்மா அவளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

மகளைக் கொல்வது பற்றி நினைத்துப் பார்க்கவே இயலவில்லை. எப்படி செய்வது? அவளது அழுகை விம்மலாக அம்மா அதைக் கேட்டு அருகே வந்து அமர்ந்துவிட்டார். இம்முறை அவளால் தப்ப முடியவில்லை. அவரது அன்பு மல்லிகாவின் உள்ளத்துள் குவிந்துகிடந்த வேதனை முழுவதையும் வெளியே இழுத்துவந்தது.

“பைத்தியக்காரி. இதுக்காக சாகப்போறியா? ஐயா வந்த பிறகு அவரோடையும் யோசித்து வழி காணுவம். எல்லாத்துக்கும் ஆண்டவன் வழி காட்டுவான். தீர்வு இருக்கும். இன்டைக்கு நீர் இங்கைதான் இருக்கவேணும். வீட்டுக்கு போய் விசர் வேலை செய்தாலும் செய்வீர்”

அன்று இரவு மூவரும் சேர்ந்திருந்து சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தனர். மல்லிகாவை என்றுமே எவருமேஅறிந்திராத ஓரிடத்தில் அவளும் மகளும்வாழ்வதற்கு ஒழுங்கு செய்வது என்பதே அந்த முடிவாகும்.

# 14

கதை கூறியதால் நேரம் கடந்து நள்ளிரவை எட்டியிருந்தது. பின்பு கதைக்கலாம் என பத்மா, சித்திராவை அனுப்பிவிட்டாள். வந்து படுத்ததும் ஆயிரம் ஆயிரம் வினாக்கள், சந்தேகங்கள், சிந்தனையைத் தூண்டிவிடும் பல விடயங்கள் என மூளையைச் சூழ்ந்து கொண்டு உறக்கத்தை விரட்டி விட்டு தாம் ஆதிக்கஞ் செலுத்த ஆரம்பித்தன.

பத்மா அக்கா ஏன் மல்லிகாவின் கதையைச் சொன்னாள்? எந்தத் தவறும் செய்யாதபோதும் அவளுடைய வாழ்க்கை மட்டுமல்ல அவளது மகளின் வாழ்வும் கேள்விக்குறியாகி நிற்கிறது. காதலுக்குள் கால் வைத்தால் என்னாகுமோ? கவனமாயிரு என்று எச்சரிக்கத்தான் இதைக் கூறியிருக்கிறாள். நல்லவன்கூட ஏதோவொரு காரணத்தினால் காதலித்த வளை கைவிடக்கூடும் எனபதைப் புரியவைக்க இந்தக் கதையைச் சொல்லி யிருக்கிறாள்.

பாவம் மல்லிகா.. ஒரு சில நிமிடங்கள் தடுமாறியதால் அவளது வாழ்க்கை சூனியமாகிவிட்டதே. அகிலன்தான் தனது கணவன் என்று வாழ்வதிலேகூட சிக்கலை எதிர்கொள்கிறாளே. அகிலனுடன் இப்படி வாழ்வதைவிட தனித்து வாழ்வது நிம்மதியாக இருக்கும்.

மல்லிகாவிற்கு நடந்தது எனக்கும் நடக்கும் என்று நினைக்க முடியாது. ஆனாலும் கவனமாக இருக்கவேண்டும் என்பதை உள்ளத்தில் ஆழமாக அக்கதை பதியவைத்திருக்கிறது.

தன் மனம் திருவரங்கனில் குறை காண மறுப்பதை சித்திரா விளங்கிக்கொண்டாள். அதுவே அவளுள் நாணம் கலந்த மகிழ்வை கட்ட விழ்த்துவைத்தது. அந்த அவளுக்கு புதியதான மகிழ்வை அவள் வரவேற்று அநுபவித்தாள்.

அகிலன் வேறு மணம் செய்ய அவனது பெற்றோரின் வற்புறுத்தலே பெரும் பங்கு வகித்தது. என் விடயத்தில் அப்படி ஏதும் இருக்காது..

எப்படி “இல்லை” என்று கூறுவது? திருவரங்கனின் அம்மா?

“ஏதோ கெட்ட காலம் இவனைப் போட்டு ஆட்டுது. நல்ல சீதனத்தோடை ஒரு கலியாணம் செய்தால் அவன் பழையபடி தலை நிமிந்திடுவான்.”

உடைந்து கிடந்த கடையைப் பார்க்க சித்திரா போயிருந்த வேளையில் திருவரங்கனின் தாயார் கூறியது சித்திராவின் நம்பிக்கையை அசைத்துப் பார்த்து உள்ளே பய இருளை பரவ வைத்தது.

“என்னைப் போன்றவர்கள் காதலுக்கும் கலியாணத்துக்கும் ஆசைப்படக்கூடாது”

சித்திரா முணுமுணுத்தாள்.

என்ன செய்யலாம்? அவர் நேர்முகமாக தன் விருப்பத்தைத் தெரிவித்தால் என்ன செய்யலாம்?

அவரின் உள்ளத்தினுள்ளே விருப்பம் இருக்கிறதோ என்பதை அறியாமல் இதென்ன பைத்தியக்காரத்தனமான கற்பனைகள்?

இல்லையில்லை. எவ்வளவோ சந்தர்ப்பங்களில் திருவரங்கனின் காதலை சித்திரா உணர்ந்திருக்கிறாள். சிற்றுண்டிப் பொதிகளை கொடுத்த போது கை பட்டதும் மன்னிப்புக் கோரியபடியே பார்த்த பார்வை அவனது மனவிருப்பத்தைக் கூறியதே.

அது சித்திராவின் மனத்திலிருந்த காதல் செய்த ஏமாற்று வித்தை யாகவும் இருந்திருக்கலாம் என அவளது அறிவு ஒரு குட்டுப் போட்டது.

தன் கல்வியில் ஏற்படும் தடங்கல்களைக் கூறி சித்திரா கண் கலங்கியபோது அவன் முகத்தில் தென்பட்ட வேதனைக்குப் பின்னால் அவள் மீதான அதீத அன்பு இருந்திருக்கிறது.

மனம் விட்டுக்கொடுக்காமல் வாதாடியது. அப்படி ஏதாவது இருந்தால் ஒரு நாள் வெளிப்படுத்தத்தானே வேண்டும் என்ற முடிவை எட்டியபோது இருள் விலகத் தொடங்கியிருந்தது.

“வாழ்த்துகள் சித்திரா”

“கொங்கிறற்ஸ்”

“வாழ்த்துகள்”

வாழ்த்திய ஒவ்வொருவருக்கும் எழுந்து கை கூப்பி நன்றி தெரி வித்துக்கொண்டிருந்தாள் சித்திரா. அம்மா மரகதமும் கருணா அம்மாவும் ஒவ்வொரு வாழ்த்துடனும் சித்திராவின் மனதுள் வந்து சிரித்தனர்.

சித்திரா பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ளதாக முடிவு வந் திருந்ததால் எல்லோரும் அவளுக்கு வாழ்த்து தெரிவித்துக் கொண்டி ருந்தனர். நிறுவனத்தின் வாசலில் திருவரங்கனின் தலையைக் கண்ட

சித்திரா அவனது வாழ்த்தை எதிர்பார்க்க ஆரம்பித்தாள். அவளிருந்த பக்கமே அவன் பார்வைகூட வரவில்லை. சித்திராவின் மனம் சோர்ந்து கிடந்தது. மதியநேரம் ஒரு வாடிக்கையாளர் அவளிடம் வந்து “அரங்கன் அண்ணா கடையைப் பற்றி ஏதோ கதைக்க வேணுமாம். இயலுமென்டால் பின்னேரம் கடைப் பக்கம் வரட்டுமாம்” என்று செய்தி சொல்லிவிட்டுப் போனான்.

“என்னவாக இருக்கும்? வாழ்த்தை தனியாக கூப்பிட்டு தெரிவிக்கத் தேவையில்லையே.”

காரணத்தை சித்திராவால் கண்டுபிடிக்க முடியவில்லை. பிற்பகல் பத்மாவிடம் சொல்லிவிட்டு புறப்பட்டபோதும் “நான் சொன்னது நினை விருக்கட்டும்” எனக் கூறியனுப்ப அவள் தவறவில்லை. என்னவோ ஏதோ எனும் பதற்றத்தில் முன்னதாக வந்துவிட்டேனோ? என்ற சந்தேகத் துடன் வந்த சித்திராவை மகிழ்வோடு எதிர்கொண்டான் திருவரங்கன். பின்னர் கடையில் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கும் வேலைகள் குறித்து விளக்கிக்கொண்டிருந்தான். தான் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானது அவனுக்குத் தெரியாது என்பதை அதிலிருந்து விளங்கிக்கொண்டு “நான் உங்களுக்கு ஒரு சந்தோசமான செய்தி சொல்லவேண்டும்” என அதை அவனுக்குக் கூற முனைந்தாள் சித்திரா. தான் சொல்ல எண்ணியதைத் தான் அவளும் கூற நினைக்கிறாளோ? என்ற ஐயம் திருவரங்கனுள் எழுந்தது.

“நானும் ஒரு  விசயம் கதைக்கத்தான் வரச் சொன்னனான்..”

“கடையைப் பற்றி ஏதோ என்டு வந்தவர் சொன்னவர். அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறியள் என்டு நினைச்சன்.”

“இல்லையில்லை அது கடையைப் பற்றியில்லை” என இடைமறித்த திருவரங்கனுள் தோன்றிய உத்வேகம் சட்டென்று தணிந்துபோக தயக்கம் மேலெழ எதைக் கூறுவதென்ற தவிப்பில் “நீங்கள் சொல்லுங்கோ. பிறகு நான் சொல்லுறன்” என தடுமாற்றத்துடன் முடித்தான்.

“என்ன சொல்வானோ என்ற எதிர்பார்ப்பு இதயத்தின் ஆழத்தி லிருந்து பீறிட்டு பூஞ்சிதறல்களாக சித்திராவின் மேல் தூவப்படும் உணர்வில் அவள் சிலிர்க்கையில், அது சட்டென நின்றுவிட அவள் சில கணங்களை தன்னை நிதானப்படுத்த எடுத்துக்கொண்டாள்.

“எனக்குப் பல்கலைக் கழக அனுமதி கிடைச்சிருக்கு”

சில மணித்துளிகளுள் பூமியிலிருந்து புறப்பட்டுச் சென்று பிரபஞ்சத்தை ஆராய ஆரம்பித்துவிட்ட விண்கலமாக சித்திரா அவனுள் பிரமிப்புக் காட்டினாள். ஆனால் தன் விரல்களின் அசைவுகளால் அந்த விண்கலத்தை இயக்கும் கருவி அவனது கையிலிருப்பது அவனது

கவனத்திலிருந்து தவறியிருந்தது.

வருமானங் கருதி தொழில் செய்யும் இடமும் வீடும் வெவ் வேறானவை. அவற்றில் நமது வகிபாகங்களும் வேறுபட்டவை. அதே போல் நாம் வகிக்கும் பதவியும் வேறு நோக்கங்களுக்காக நாம் இயங்கும் தளங் களும் அதாவது கிராம முன்னேற்றத்திற்காக சமுதாய நல மேம்பாட்டிற்காக இவை போன்ற பல முயற்சிகளுக்காக இயங்கும தளங்களும் வெவ் வேறானவை. குடும்ப உறவுக்கும் பணியிடத்தில் வகிநிலைக்கும் தொடர் பேதும் இல்லை. சிறந்த மருத்துவராகத் திகழ்பவர் நல்ல தாயாகவோ அல்லது தந்தையாகவோ இருக்கமுடியாதுபோகலாம். எனவே பதவியை குடும்ப உறவிற்குள் இழுத்து சிறப்பு தாழ்வு பார்க்கும் மனோபாவத்தை மூல வேருடன் கெல்லி அகற்றிவிடவேண்டும். அதே போல் ஒருவர் ஆற்றும் சேவையை சற்றும் கணிப்பில் எடுக்காது சேவை எதுவும் செய்யாத ஒருவரை அவர் வகிக்கும் உயர்பதவிக்காக முன்னணியிலிருத்தும் மன நிலையும் ஒழியவேண்டும். திருவரங்கன் நம்மிடையே நிலவும் மன நிலைக்குப் பழக்கப்பட்டவன்தானே? சித்திரா தெரிவித்த மகிழ்வான செய்தி, அவனது மனதை பள்ளத்தாக்கினுள் வீழ்த்தியது.

“பட்டதாரியை மணந்துகொள்ள ஆசைப்படக்கூடாது”

அவனது ஆசை ஆமையானது.

“சந்தோசமான செய்தி. நல்லாய்ப் படிச்சு முன்னுக்கு வரவேணும். உங்களுடைய ஆசையும் கருணா அம்மாவின்ரை விருப்பமும் நிறைவேறப் போகிறது.”

“நன்றி. நீங்கள் என்ன சொல்ல வந்தீர்கள்?”

பதில் சொல்ல முடியாது தடுமாறிய திருவரங்கன் “என்னுடைய அம்மா ஏதோ கவலையிலிருக்கிறா. என்னிடம் சொல்லமாட்டாவாம். தனக்கு ஒரு கவலையுமில்லை என்டு சொல்லுறா. நீங்கள் கதைச்சுப் பாக்கிறீங்களே? பொம்பிளையிடம் மனம் விட்டு கதைப்பா.” என அந்த நேரத்தில் தோன்றியதைக் கூறினான்.

இதுதான் விசயமா? வேறேதுமாய் இருக்குமா?

நம்ப மறுத்தது சித்திராவின் மனம். அடுத்து வரும் ஞாயிறன்று சித்திரா திருவரங்கனின் வீட்டிற்குச் சென்று அம்மாவை சந்திப்பதாக தீர்மானித்தார்கள்.

ஏமாற்ற நெடி நெஞ்சங்களை நிறைக்க இருவரும் திரும்பினர். சித்திராவும் பத்மாவும் எதிர்பார்த்த திருவரங்கனின் அடுத்த சந்திப்பு நிகழா மலே இருந்துவிட்டது. அவன் தன் முடிவை மீள்பரிசீலனை செய்ய எண்ணவேயில்லை.

# 15

கற்று முன்னேற வேண்டும் என்ற உறுதியான பற்று சித்திராவின் உயர் கல்வி வெற்றி இலக்கை எளிதில் எட்டுவதற்கு காரணமாக அமைந்தது. வேறு இடைத் தடங்கல்கள் எதுவுமற்ற நிர்ச் சலனமான மனநிலை கல்வியில் ஒன்றித்துவிட அவளுக்கு உதவியது. இளமை தொடக்கம் செயல்முறையால் அவளுள் ஊறிப்போயிருந்த உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் துறையை சித்திரா தன் கற்கை நெறியாகத் தெரிவு செய்தது அத் துறையில் அவளை மிளிர வைத்தது.

முதுதத்துவமாணி பட்டத்திற்கான அந்த ஆய்வுக் கட்டுரை கலையன்பனை வியக்க வைத்துக்கொண்டிருந்தது. கள ஆய்வு விவரங் களும் அதில் கொடுக்கப்பட்டிருந்த தரவுகளும் தரம் மிகுந்ததாக அமைந் திருந்தன. அத்தரவுகளை நுணுகி ஆய்வு செய்து தற்போதய செயற்பாடு களிலுள்ள குறை நிறைகளைச் சுட்டிக் காட்டி, குறைகளை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளையும் தெரிவித்திருந்தது பாராட்டுக்குரியதாக இருந்தது. அத்துடன் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெற அமுல் படுத்த வேண்டிய திட்டங்களையும் அங்கம் அங்கமாக விவரித்து எழுதப் பட்டிருந்தது.

கட்டுரையை எழுதியவர் பட்டத்தைமட்டும் நோக்காகக் கொண்டு ஆய்வினைச் செய்யவில்லை. நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவ ராக இத்துறையில் மிகுந்த ஈடுபாடுள்ளவராக இருக்கவேண்டும். எனக்கு இத்தகையவர் உதவி செய்வாரானால் சாதனைகள் பல படைக்கலாம் என்ற எண்ணம் கலையன்பனின் உள்ளததில் உருவாகியது. எண்ணியதை உரிய நடைமுறைகளைப் பின்பற்றி கலையன்பன் நிறைவேற்றியும்விட்டான்.

சித்திராவை தேடி அழைத்துக்கொண்ட பணி அவளின் மனதிற்கு மிகவும் உவப்பானதாகத் தோன்றியது. ஊதியநோக்கின்றி ஆர்வங் காரண மான ஈடுபாடுள்ளவளாக அவள் பணியுடன் ஒன்றித்து உழைத்தாள். கலையன்பன் எதைச் செய்யவேண்டுமென விரும்புகிறானோ அதைத் தெளிவாக விளங்கிக்கொண்டு தேவையானவற்றை நிறைவேற்றினாள்.

கல்வி கற்ற காலத்திலும் உயர் கற்கை நெறிகளுக்கான ஆய்வுகளில் ஈடுபட்டு பயின்ற வேளையிலும் தன்னைக் காத்துவரும் நிறுவன வேலைகளிலும் இயன்றவரை பங்கு கொண்டுவந்தவள் சித்திரா. இப்போது அவளுக்கு அது இயலாததாக இருந்தது. அது கவலை தந்தாலும் தற்போதைய பணி அவளை உள்ளீர்த்துக்கொண்டது. காலப்போக்கில் கலையன்பனுக்கும் அவளில்லாவிடின் எதையுமே செய்யவியலாது எனும் மனநிலை ஏற்பட்டிருந்தது.

இரண்டு நாட்கள் சித்திரா வரவில்லை. “உடல் நலமில்லை. ஒரு வாரம் வரமுடியாதிருக்கும்” எனும் தகவலை தொலை பேசியூடாக அறிவித்திருந்தாள். இரண்டாவது நாளை ஒருவாறு இழுத்து தள்ளிவிட்டு வந்த அன்பனுக்கு எதையோ இழந்துவிட்டதான உணர்வு. அவனிடம் ஓயாது ஊற்றெடுத்துக்கொண்டிருக்கும் உற்சாகம் வற்றி வரண்டுவிட மனம் பாலையாக ஓய்ந்து கிடந்தது. சாப்பிடாது படுக்கையில் விழுந்தான். பசியைத் தேடிப் பார்த்தான். கண்டுபிடிக்கமுடியவில்லை.

“எனக்கும் ஏதாவது நோயோ? ஏன் இப்படியிருக்கிறது?”

ஆய்வக வேலைகள் நகரவியலாது குவிந்துபோயிருந்தன.

இப்படியே இருந்தால் என்னாகும்?

அவன் காரணத்தை ஆராய முற்பட்டான். ஏதாவது நோய் வருவதற்கான அறிகுறியோ? யோசித்துப் பார்த்ததில் அப்படியெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியென்றால் ஏன் எந்த ஒரு வேலையிலிலும் ஈடுபடமுடியாமலிருக்கிறது?

சித்திரா வேலைக்கு வராதது என் மனதைப் பாதித்திருக்குமோ? அதுதான் காரணம் என்ற முடிவிற்கு வரவேண்டியிருந்தது. இதை எண்ண அவனுக்கு சிரிப்பாகவுமிருந்தது. வியப்பாகவுமிருந்தது. அடுத்த நாள் அவளின் உடல்நிலையைப் பற்றி மனம் அடிக்கடி கவலைப்பட்டது. பிற்பகல் வேளை. எப்படியிருக்கிறாள் என்றறியும் மன ஆவல் தொலைபேசிக்குக் கையைக் கொண்டுசென்றது. நேரே சென்று பார்த்தால் மனதிற்கு இதமாக இருக்கும் என்ற எண்ணம் திடீரென்றெழுந்து கையை பின்தள்ளியது.

கலையன்பன் தன்னைப் பார்ப்பதற்கு இருப்பிடந் தேடி வருவான் என சித்திரா சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அவனது வருகை அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தது. அவனை வரவேற்று உரையாடிக் கொண்டிருந்த வளுக்கு அவன் கடையிலேதான் உணவருந்துவது நினைவிற்கு வந்தது.

“சாப்பிட்டுவிட்டீங்களா?”

“பசிஇல்லை. போய் சாப்பிடுவம்.”

“போயா? நேரம் மூன்றுக்கு மேலையாகுது. இங்கை சாப்பிடுங்கோ

ஸேர்"

இந்த வேண்டுகோளை எதிர்பார்க்காத அன்பன் மகிழ்வால் நிறைந்தான். கேட்டவுடன் ஒப்புக்கொள்வது அழகல்ல என்றெல்லாம் சிந்திக்காது "அதற்கென்ன. சாப்பிடுகிறேன்." என ஒப்புதல் தெரிவித்து உணவுண்ண ஆயத்தமானான். பசி திடீரென ஓடிவந்து அவனது வயிற்றை ஆக்கிரமித்துக்கொண்டது.

அன்று இரவு சாப்பிடும்போதும் சித்திரா அருகில் நின்று பரிமாறினாள். அடிக்கடி இவ்வாறான பல கனவுகள். உறங்கா நிலையில் கனவுகள்.

உறக்கம் வராது போகவே உள்ள நிலையை ஆராயத் தொடங் கினான். அவன் செயற்பட இயக்க சக்தியாக சித்திரா தேவைப்படுகிறாள் என்பது புலனாகியது. உடனடியாக எழுந்திருந்து சித்திராவுக்கு அஞ்சலொன்றை தட்டி அனுப்பிவைத்தான்.

அந்த மின்னஞ்சல் கண்ணிமைக்கும் பொழுதில் சித்திராவைச் சென்றடையும் ஆவலுடன் நள்ளிரவில் சென்றுசேர்ந்தது.

சித்திரா நிர்ச்சலனமாக அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தாள்.

உடல் நலம் பெற்றிருந்ததால் வேலைக்குப் போகும் தீர்மானத் துடன் தன் அன்றாடக் கடமைகளில் ஈடுபட்டிருந்தாள் சித்திரா. தனக்கு வந்த மின்னஞ்சல்களைப் பார்வையிடத் தொடங்கியவளின் கண்களை கலையன்பனின் அஞ்சல் ஈர்த்தது.

"நேற்றுப் பிற்பகல்தானே வந்திருந்தார்! அதன் பின்னர் என்ன அவசரம்?"

சிந்தனையுடன் அஞ்சலைத் திறந்து வாசித்தவள் அதிர்ந்து போனாள். மனதை நிதானப்படுத்திக்கொண்டு மீளவும் ஒரு தடவை கவனஞ் செலுத்தி ஆழ்ந்து வாசித்தாள்.

எதனால் இவ்வாறு ஒரு கடிதத்தை அவர் எழுதினார்? இதுவரை திருமண பந்தத்தில் கட்டுண்ணாதவர். காதல் வயப்படாதவர். இப்போது வழி மாற என்ன காரணம்? தனது தவறு ஏதாவது இருக்குமா என்பதை ஆராய்ந்துபார்க்க அவளுக்கு அவகாசம் தேவைப்பட்டது.

"இன்று வேலைக்குப் போவது பல வகைகளில் பாதகமாக அமையும் எனவே இன்றும் போகாதிருப்பது நல்லது."

முடிவெடுத்தவள் மேற்கொண்டு அஞ்சல்களைப் பார்ப்பதற்கும் மனம் ஒருப்படாததால் கண்களை மூடி கதிரையில் சாய்ந்தபடியே அமர்ந்துவிட்டாள். பணியில் இணைந்தது முதல் நேற்றுவரையான

காலத்துள் தான் நடந்துகொண்ட முறைகளை இயன்றவரை மீட்டுப் பார்த்தாள். எந்தச் சந்தர்ப்பத்திலும் தான் தவறாக நடந்துகொண்டதாகவோ பிழையான எண்ணங்களை ஏற்படுத்த முயன்றதாகவோ அவளது மனச் சாட்சிக்குத் தோன்றவில்லை. திருவரங்கன் மேல் ஏற்பட்ட சலனத்தின் பின்னர் அவள் திருமணம் செய்வதில்லை என்ற முடிவை எடுத்திருந்தாள். தான் தடுமாற்றமடைந்து அன்பனுடன் ஏதும் சலனமடைய வைக்கும் விதத்தில் நடந்திருக்க வாய்ப்பே இல்லையென்பது அவளது மனப்பூர்வ மான முடிவாக இருந்தது. மனதில் சலனமில்லாத போது தவறாக நடந்திருக்க இயலாதே.

இது முளையிலேயே அழிக்கவேண்டிய விஷச் செடி. உடனடியாக பதில் எழுதிவிடுவோம். தீர்மானத்துடன் நிமிர்ந்து அமர்ந்தாள் சித்திரா.

மதிப்பிற்குரிய ஐயா

வணக்கம். தங்கள் கடிதம் எனக்கு அதிர்ச்சி தந்தது. எனக்கு ஒருபோதும் இத்தகைய எண்ணம் இருந்ததில்லை. நான் திருமணமே செய்யப்போவதில்லை. எனது தாய் நாட்டின் பொருண்மிய மேம்பாட்டிற்காக என்னாலியன்ற பணியாற்றவே நான் விரும்புகின்றேன்.தாங்களும் இதே கொள்கையுள்ளவர் என்பதே எனது எண்ணம். திடீரென இவ்வாறான கடிதம் எழுதியதன் காரணம் விளங்கவில்லை. இதற்கு எவ்விதத்திலும் நான் காரணமாக இருக்கவில்லை. இதை நான் உறுதிபடத் தெரிவிக்கின்றேன்.

ஒத்த நோக்கம் அல்லது ஈடுபாடு உள்ளவர்கள் திருமணஞ் செய்துகொண்டால் இணைந்து பணியாற்றலாம் என தாங்கள் கருதக்கூடும். இதில் எனக்கு உடன்பாடில்லை. குடும்ப வாழ்க்கை என்று தொடங்கும்போது நான் செய்ய விரும்பும்அர்ப்பணிப்பான பணியைச் செய்ய முடியாது. குடும்பத்திற்கான கடமைகள் வந்து குறுக்கீடு செய்யும். எங்கள் முழுமையான திறமையைக் காட்டவும் உச்சமான சேவையை வழங்கவும் இயலாதிருக்கும். எனது திறமையை விற்று ஊதியம் பெற்று செல்வம் சேர்க்கும் எண்ணம் எனக்குக் கிடையாது. எனது நோக்கம் வேறுபட்டது.

இதனைப் புரிந்துகொண்டுதான் பணிக்கு அழைத் தீர்கள் என்றே இதுவரை நம்பியிருந்தேன். அவ்வாறில்லா விடினும் தங்களுடன் பணி செய்து வருகையிலாவது

அவதானிக்காது போனது ஏனென்று தெரியவில்லை. இது முதலான பல ஐயங்களை தங்களது கடிதம் எனக்குள் தோற்றுவித்திருக்கிறது. தொடர்ந்து தங்களுடன் பணியாற்ற லாமா? வேண்டாமா? என்பது அவற்றுள் முக்கியமான ஒன்று.

இத்துடன் எனது பணிவிலகல் கடிதத்தையும் இணைத்துள்ளேன்.

பணிவுடன்

ம.சித்திரா

இரு கடிதங்களையும் நிறைவு செய்தபின் உடனடியாக அவற்றை அனுப்பாது அப்படியே வைத்தாள். விவாகம் செய்வதில்லை என்பது மாற்றமுடியாத ஒன்று. ஆனால் அவள் மிகவும் விரும்பும் பணியிலிருந்து விலகுவது என்பது..?

சிந்தித்து எடுக்கவேண்டிய முடிவு. உணர்ச்சிகளின் பிடிக்குள் சிக்குண்டிருக்கும்போது எடுக்கும் முடிவுகள் தவறாக அமைய வாய்ப்புண்டு என்பது சித்திராவின் நம்பிக்கை. எனவே மனம் அமைதியடைய சிறிதளவு கால அவகாசம் கொடுப்பது என்ற முடிவுக்கு வந்தாள்.

சிந்தனை. சிந்தனை. நீண்டு அலைத்து மனதை அமைதியடைய விடாது கெடுத்துக்கொண்டிருந்தது. அவ்வேளையிலே கோவில் மணியோசையும் தேவாரப் பண்ணிசையும் சித்திராவின் கவனத்தை ஈர்த்தன.

ஓ! இன்று பிள்ளையார் கோவிலில் தேர்த் திருவிழா.

**| ஆம் அத்தியாய தொடர்ச்சியாக..**

சித்திராவின் வசிப்பிடத்திற்கு அருகில் இருக்கும் பிள்ளையார் கோவிலில் பெருந்திருவிழா நடந்து இன்று தேர்த்திருவிழா. ஊர் கூடி கொண்டாடும் தேர்த்திருவிழா. சித்திரா நாளும் பொழுதும் வணங்கும் பிள்ளையார் கோவில். இதுவரை திருவிழாவை தரிசிக்க அவளுக்கு கொடுத்து வைக்கவில்லை. தேருக்காவது போய் வழிபட்டால் மனதிற்கு ஆனந்தமும் நிம்மதியும் கிடைக்கும் என நினைத்து போக எண்ணினாள். போய் திரும்பிய்போது எருமைக்கூட்டம் இறங்கிய குளமாகிக் கிடந்தது அவளது மனம்.

சித்திரா தன் தீர்மானத்திலிருந்து பின்வாங்குவதா? எறும்பு ஊர கல்

தேயும் என்ற பழமொழி நினைவிற்கு வந்து போகிறது. தன் தீர்மானத்திற்கு காரணமான அனைவரையும் நினைவுக்குள் அழைத்து எறும்புகளைக் கலைத்து விடுகிறாள் சித்திரா.

இதுவரை சித்திரா சந்தித்த பல பெண்கள் திருமணம் அவசிய மானது என்று நம்பி திருமணத்தின் பின்னர் பட்ட பாடுகள் அவளுக்கு உணர்த்தியவை செயல்முறைப் பாடங்கள்... எழுதியும் சொல்லியும் கற்பிக்கும் பாடங்களைவிட மேலானவை திருமணம் அவசியம் என்போரின் பேச்சை நம்பி கலியாணம் செய்து கொண்ட அவர்கள் இல்லற வாழ்வின் இன்பங்கள் எதனையும் அனுபவிக்காது வாழ்ந்தார்கள். மணம் செய்யா மலே அதே வாழ்வை வாழ துணிந்திருந்தால் நிம்மதியாகவேனும் வாழ்ந் திருக்கலாம்.

“சித்தி”

அறை வாசலில் கவிதாவின் குரல். சிந்தனைக்கு முடிவைக் கொண்டு வருகிறது.

“வா கவிதா”

“உங்களைச் சந்திக்க ஆரோ வந்திருக்கினம் என்டு அம்மா சொல்லி விட்டவ.”

“பத்து நிமிஷத்திலை வாறனெண்டு சொல்லுங்கோ.”

கவிதாவுக்கு பதில் சொல்லியவாறே மடிக்கணினியில் சேமிக்கப் பட்டிருந்த இரு மின்னஞ்சல்களையும் அனுப்பினாள் சித்திரா. அது முடிந்ததும் தன்னைச் சந்திக்க வந்தோரைக் காணச் சென்றாள். வரவேற்பறையிலிருந்த இரு பெண்களும் எழுந்து வணக்கம் தெரிவித்தனர். பதில். வணக்கம் தெரிவித்து அவர்களை அமரச் செய்த பின்னர் சித்திரா தானும் அமர்ந்துகொண்டாள்.

“கோண்டாவிலிலையிருந்து வந்திருக்கிறம்”

“ஓ?!!!”

ஒரு பெண் எழுந்துவந்து கடிதமொன்றை கையளித்தாள். கடிதம் மரகதம் சித்திராவிற்கு முகவரியிடப்பட்டிருந்தது.

பிரித்தபோது தலைவரின் கடிதத் தலைப்பு!

கையொப்பம் தலைவருடையது!

பொருண்மியத்துறை தலைமை அதிகாரியாக சித்திரா நியமிக்கப் பட்டிருப்பதாக அக்கடிதம் தெரிவித்தது.

## நூலாசிரியரின் ஏனைய நூல்கள்



சாதகப் பறவைக்கு வேண்டுமோ கானல் நீர்? என்ற நாவல் காலங்காலமாக அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண்களின் போராட்ட வெற்றிக்கான சங்கநாதம் என்றே கூறவேண்டும். ஒட்டு மொத்த நாவலின் குறியீடாக இந்தத் தலைப்பு அமைந்துள்ளது. அந்தக் காலத்தில் பின் தூங்கி முன்னெழுந்த நமது வாசுகிப் பாட்டி முதல் நமது அம்மாக்கள், அம்மம்மாக்கள், பாட்டிமார், பூட்டிமார், மாமிமார், சித்திமார்,அக்காமார், பக்கத்துவீட்டு அன்ரிமார் என எல்லாப் பெண் களுக்கும் பெருமை சேர்த்த அடையாளமாக இருந்தது தாலியும் அந்தத் தாலி மூலம் கிடைத்த வாழ்வுமே. ஆனால் இந்த நாவலின் கதாநாயகி முதல் நாவலின் ஏனைய பெண்பாத்திரங்கள் வரை அனைவரும் மரபு சார்ந்த சிந்தனைகளிலும் அடையாளங்களிலும் இருந்து தம்மை விடுவிக்கப் போராடுகின்றார்கள். சாதகப் பறவையானது மழைநீரை மட்டும் குடித்து உயிர் வாழும் சக்தியுடையது எனக் கூறப்படுகின்றது. அத்தகைய பறவைக்கு கானல் நீர் தேவைப்படாது. அவ்வாறே பெண்களுக்கும் திருமணபந்தம் என்ற கானல் நீர் அவசியமா? இல்லை அவசியம் இல்லையா? என்ற வினாக்களுக்கு விடை கூறுவதாக இந்த நாவல் படைக்கப்பட்டுள்ளது.

– கலாநிதி ஜீவகுமாரன்

ISBN 9555249636
9789555249638